உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநம:

# சித்தாந்த ரத்நாகரம்.

## சிவபாரம்யப்பிரதரிசிநி.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

சூளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS.

PRINTED AT THE MEMORIAL PRESS,

No. 39, THUMBOO CHETTY STREET,

*31st March 1881.*

Registered Copy-Right.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணாயநம:

# சித்தாந்தரத்நாகரம்.

## முகவுரை.

சித்தாந்தம் என்பது முடிபு என்று பொருள்படும். முடிபு எனவே, தனக்குமேலொரு கொள்கையு மில்லாதது என்று பெறப்படும். இம்முடிபு எங்கே பெறப்பட்ட தெனின், சிவாகமத்திற் காண்க. இதனுல் சிவாகமத்திற் பெறப்பட்ட முடிபே முடிபெனவும், அதுவே சித்தாந்த மெனவும், அதற்குமேலிட்ட தொரு சித்தாந்தமின்றெனவும் வெளிப்பட்டது. இந்தவுணர்ச்சியால், சித்தாந்தம் என்பது ஆகமமுடிபு என்று நிச்சயிக்கப்பட்டது. ஆக மாந்தமெனினும், சித்தாந்த மெனினும் ஒக்கும். ஆக மாந்தமாகிய சித்தாந்தமே சைவமெனவும் படும். எனவே, சைவத்தின் மேலிட்ட தொரு சமயமு மின்றென்பது நாட்டப்பட்டது. (சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளை) என்றுகூறிய தாயுமானசுவாமிகள் தெய்வத் திருவாக் கானுங் காண்க. "சமயாதீதப் பழம்பொருள்" என்றதனுல், சைவ சமயத்தினும் அதிகரித்த வேதாந்த ஞாநமென்று சிலர் கூறுவர். அது, "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்று கூறிய வாக்கியத்தால் மறுக்கப்படுதலின், அங்ஙனங்கொள்வது குற்றமாம். மற்றெவ்வாறு கருதப்படு மெனின், அதீத சமய மென வெளிப்பட்டு முன்னர்க்கூறிய சைவத்தையே வலியுறுத்துமென்க. "அயர்வறச் செங்கியில் வைத்து ராஜாங்கத்தி லமர்ந்தது வைதிக சைவமழகிதந்தோ" எனவும், "சந்தான கற்பகம்போலருளைக் காட்டத்தக்க நெறியிந் நெறியேதான் சந்மார்க்கம்" எனவும் போந்த

வாக்கிய விசிட்டத்தானுங் காண்க. இதனல், "சமயாதீதப் பழம் பொருள்" என்றது அதீதமாகிய அச் சைவத்தாற் பெறப் பட்ட வுண்மைப்பொருள் என்று நாட்டப்பட்டது. ஆக மாந் தம், சைவம் என்னும் பரியாய நாமங்களையுடைய மார்க்க மொன்றே சித்தாந்தமாயின், இச் சித்தாந்தத்தின் கீழ்ப்போ ந்த பூர்வபட்சங்கள் யாவை? அவற்றிற்குரிய பிரமாணங்கள் யாவை? எனின்; உலகாயதம், புத்தம், சமணம், பாட்டம், பிரபாகரம், கிரீடாப்பிரமவாதம், சத்தப்பிரமவாதம், மாயாவா தம், பாஞ்சராத்திர முதலியன பூர்வபட்சங்களும், வேதமுத லியன பிரமாணங்களுமாம். வேதம் சப்பிரமாணமும், சுவதப் பிரமாணமுமாக, அதிற்பெறப்பட்ட மார்க்கங்கள் பூர்வபட்ச மாதலெங்ஙன மெனின், விளக்குதும். வேதம் பொருள் பலப டத்தோன்றுஞ் சூத்திர ரூபமா யிருப்பதொன்று. பலபொருள் கொண்டியங்கலால் ஒன்றிலொன்றுமுரணிய சித்தாந்தம்யாவும் அவ்வேதத்தினுண்மைப் பொருளாதலிழுக்காம். பல பொருள் களில் ஒன்றே அவ்வேதத்தினுண்மையாதல் திண்ணம். இதனல், வேதம் சப்பிரமாண மாதலும், அதிற் பெறப்பட்ட மாத்திரத் தானே யெல்லாமார்க்கங்களும் சித்தாந்த மாகாமையும் வெளிப் பட்டது. யாவும் பூர்வப்பட்சமேயாகி ஒரு பொருளே அந்த வேதத்தின் சித்தாந்தமு மாதல் துணியப்பட்டது. பூர்வபட்சங் களாய்ப் போந்தமார்க்கங்கள் பலவும், சித்தாந்தப்பட்ட மார்க் கமொன்றும் அவ்வேதத்திற் பெறப்படுங்கால், அச்சித்தாந்தம் இதுவே யென வொன்றைச்சுட்டுவது கஷ்டதரம். ஒவ்வொரு வரும் தங்கள் தங்கள் கொள்கையே அச்சித்தாந்தமென்று கூறுகையால்.

வேதத்திற் பெறப்பட்ட மார்க்கங்களுள் சைவமும் ஒன் றேயாக, அதற்கு மித்தோடம் வருமே யெனின், தத்தோஷத் தைப் பரிகரிப்பாம். வேதம் சிவபெருமானல் சொல்லப்பட் டது. உலகாயதன் முதலிய சமயிகள் அவ் வேதத்தைத் தங் கள் கன்மம் வழிவிட்டபடியே யுணர்ந்து பொருள் கூறித்தியங் கினர். வேதத்தைச் சொன்னவர் பதிப்பொருளாயுள்ளவர். அவர் இயற்கையே பாசமில்லாதவர். அவர் திருவாக்கை யுணரப் போந்தவர்கள் பாசபத்தாளாயுள்ள பசுக்கள். பசுக்களெனவே,

கன்மத்தாற் பிணிக்கப்பட்டுச் சம்மபந்தத்தைப் பெற்றியங்கு மவனொன்பது வெளிப்பட்டது. இன்னலட்சண யுக்தாளாயுள்ள பசுக்கள் தாங்கள் தாங்களே பதிவாக்கை யுணரத் தொடங்குங் கால் கன்ம வேறுபாட்டால் பல்வேறு வகைப்பட்ட தீமையிற் செறிந் தழுங்குவரன்றித் தமக்குத் தாமே யுண்மையை அறிவ ரொன்பது அசங்கதம். ஒவ்வொருவரும் வேதத்திலுள்ள வாக்கி யங்களைத் தத்தங்கன்மத்துக் கீடாகப் பொருள்கொண்டு எம்ம சித்தாந்தம் வேதத்திற் பெறப்படலால் யாமே வேதாந்தி! யாமே வேதாந்தி!! என்று இறுமாந்து கூறுவதொன்றே யொழிய வேதத்தி னுண்மைப் பொருளிதுதானென வொன்றைச் சுட்டி யறிந்து நிச்சயிக்கும் வாயில் வேறு ஒருபயனுமெய்தாரொன்க.

இவர்களுள், ஆன்மாவே பொருளென மயங்கும் ஏகான் மவாதி யொருவனே மற்றைச் சமயிகளைநோக்கத்தானே முழு வேதாந்தி யென்று வெளிப்பட்டிருக்கின்றனன். இவன் வேதாந் தியாதல் சாலுமோ எனின், இவனே பாசபத்தனுயுள்ள வோர் பசு. நினைப்பு மறப்புகளாகிய சகல கேவலங்களிற் றடுமாறி யுழல்கின்றவன். இவன்வேதத்தை யுணர்ந்தபோது இவனுணர்ந் தபொருளே யுண்மை யென்பதற்கு யாதுபிரமாணம்? இப்படியே மற்றைச்சமயப் படுகுழிகளில் வீழ்ந்து தடுமாறும் பசுக்களும், அவரவர்கள் வேதத்தை யுணர்கையில் அவற்றைத் தனித்தனி யுண்மையென்று அங்கீகரித்த பிரமாணங்கள் யாவை? தாங் கள் தாங்களுங் கூறும்பொருள்கள் நின்மலமாயுள்ள வேறுபிர மாணத்தால் அங்கீ கரிக்கப்பட்டாலொழிய உண்மையாதலிழுக் காம். நின்மலமாயுள்ள வேறுபிரமாணமெனவே, நின்மலன் சிவ னேயாதலால் அந்தப்பிரமாணமும் அப்பதிவாக்கே யாதலமை யும். பதிவாக்காகிய வேதத்துக்குப் பசுக்கள் கூறும் பொருள் கள் அப்பதிவாக்கானே யங்கீகரிக்கப்படவேண்டுமென்பது நாட் டப்பட்டது. பதிவாக்கைப் பசுக்களொருபோதுந் தாமே யறியா ராகையால் பசுக்கள் அதை அறிந்தா ரொன்பதும்; அறிவா ரொன்பதுஞ் சர்வாபத்தமாம். (அறிவித்தாலன்றி யறியாவுளங்கள்) என் னும் பிரமாணத்தால் வேதத்தின் பொருளும் அவனறிவித்தா லன்றி அறிவாரொருவருமிலர். வேதத்துக்குரியபொருள் இது வே! இதுவே!! என்று பாஷ்யங்கள்செய்து வெளிப்படுத்தியசம

யிகள் தாங்கள் தாங்களுங் கூறுஞ் சித்தாந்தங்களை நாட்டுவதற்கு உத்கரித்துக் காட்டிய பிரமாணங்கள் பதிவாக்குக ளல்லாமையால், அவரவர் சித்தாந்தங்களோடு அவர்கள் காட்டப்போந்த பிரமாணங்களு மவலப்பட்டழியும். பிருகஸ்பதி, கபிலர், அக்ஷபாதர், சைமினி, வியாசர், விஷ்ணுமுதலியவர்கள் செய்த நூல்களே "வேதார்த்தங்களாக வொவ்வொரு சமயிகளுங்கொண்டு வெளிப்பட்டனர்." பிருகஸ்பதி முதலாயினாரும் பாசபத்தாளாதல் திண்ணமாக, பசுக்களாகியவன்னோர்வாக்குகள் பதிவாக்குக்குப் பொருளாவதெப்படி? ஒருக்காலும்பொருள்களாகாவாம். பிருகஸ்பதிமுதலாயினோர் சிவானுக்கிரகம்பெற்ற மேலோர்களாக, அவர்கள் வாக்குகள் ஏன் பிரமாணமாகா வெனின், அதிகாராநுகுணமாய்ப் பிரமாணமாதல் பெறும். எனவே, ஒன்றி லொன்றேற்றமுடைய சாதகசாத்தியப் பிரமாணங்களாம். ஒன்றிலொன்று முரணிய சித்தாந்தங்களை அவர்கள் ஏன் கூறினரெனின், ஆன்மாக்களுடைய கன்மவேறுபாடு நோக்கி யாம்.

எங்ஙனமெனின், தேகேந்திரியப்பிராணாந்தக்கரணதர்மமான விசாரத்தில், நிர்விசாரகிரஸ்தனை வொருவனைப்பார்த்துத் தேகமேபொருளென்று சாதித்தும், தேகவிசாரங்கழிந்தபின்னர் அதனுண்மை அவனுக்குப்புலப்பட்டவழி அதற்குமேலிட்டபொருளை யுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சமாக்கி இதுவல்லபொருள் இந்திரியமே பொருளென்று சாதித்தும், இந்திரிய விசாரங்கழிந்த பின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்குமேலிட்ட பொருளையுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சப்படுத்தி இதுவல்ல பொருள் பிராணனே பொருளென்று சாதித்தும், பிராணவிசாரங் கழிந்தபின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்குமேலிட்டபொருளை யுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப்பூர்வபட்சமாக்கி இதுவல்லபொருள் கரணமே பொருளென்று சாதித்தும், கரணவிசாரங் கழிந்தபின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்குமேலிட்ட பொருளையுணர்த்துவான்றொடங்கி முன்னை யதைப் பூர்வபட்சமாக்கி இதுவல்ல பொருள் ஆன்மாவே பொருளென்று சாதித்தும், ஆன்ம விசாரங்கழிந்தபின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்கு மேலிட்ட

பொருளை புணர்த்துவான் ரெடங்கி முன்னையதைப் பூர்வபட்ச மாக்கி இதுவல்ல பொருள் இந்திரனே பொருளென்று சாதித்தும், இவனல்ல சுந்திரனே யெனவும், இவனல்ல பிரமனே யெனவும், இவனல்ல விட்டுணுவே யெனவும் முறையேயாவரை யும் பொருள்க ளெனச் சாதித்தும் உணர்த்துவது முறையாதல் இழுக்கடையாமை காண்க. குழந்தைக்குப் பாலூட்டும் பருவத் திற் பாலூட்டியும், சோறூட்டும் பருவத்திற் சோறூட்டியும்வளர் த்தல் உபகாரமாதல் கண்டுதெளிக.

இந்த விசாரத்தால் ஆன்மாக்களுடைய கன்மத்துக் கிடா னவுணர்ச்சியைப் பயப்பனவாகிய சித்தாந்தங்களைப் பிருகஸ் பதி முதலாயினோர் பிரகாசப்படுத்திய தந்திரம் வெளிப்பட் டது. பிருகஸ்பதி முதலாயினோர் செய்த சித்தாந்தங்கள் வேத த்திற் பெறப்பட்ட பொருள்களேனும், அவை யுண்மைப் பொருளாகாமையால் வேதத்துக்குப் பாகிய சித்தாந்தங்களே யாயின. அச்சித்தாந்தங்களை வேதமே பலவிடங்களில்நிஷேதித் துக்கூறுகையால். அவற்றை முன்னரங்கிகரித்தது சாமாநியாதி காரிகளுக்கு அநுக்கிரஹாகமாகவும், பின்னர் திரஸ்கரித்தது உத்தமாதிகாரிகளுக்கு அநுக்கிரஹாக மாகவுமென்பது தெளிக. வேதத்திற் பெறப்பட்ட மாத்திரத்தானே யமையாது வேதத் தால் நிந்திக்கப்படாமையும் பெற்றமையு மார்க்கமொன்றே அவ் வேதத்தின்றுணி பொருளாதல் நிச்சயிக்கப் பட்டமையால், அவ் வுத்தமமார்க்கம் சைவ மார்க்கமென்பது சொல்லாமே யமை யும். சைவமொன்றையே பிரதிபாதிக்குஞ் சிவாகமங்களுக்கும் அவ்வேதத்தைச் சொல்லியருளிய சிவபெருமானே வக்தாவா கையால்.

வேதசிவாக மங்களிரண்டும் பதிவாக்குகளாகையால் ஒன்றி லொன்று முரணுமை வெளிப்பட்டது. கன்மவேறு பாட்டையு டைய வுயிர்கள்பொருட்டுப் பொருள்பலபட வேதத்தைக்கூறிய சிவபெருமான் அவ்வேதத்திற் பெறப்படும் பொருள்களில் தம் முடைய முடி பொருளுமொன்றே யாதனேக்கி, அது எதுவென மயங்காதவழி அப்பெருமை தோன்ற வேதத்துக்குச் சிவாகமங் களைப்பாடிய மெனச்செய்தனர். ஆகவே, வேதம் சூத்திரமும், சிவாகமம் பாடியமு மெனக்கொள்ளப்பட்டன. சிவவாக்காகிய

வேதத்துக்கு உலகாயதம், மாயாவாதம், பாஞ்சராத்திரமுதலியன பாடியங்களாய்ப் பிருகஸ்பதி முதலாயினோரால் செய்யப்பட்டமைகொண்டே அவைவேதத்தினுண்மைப் பொருள்களாகாவாம். வேதத்தைச்செய்த சிவபெருமான் அதற்குப்பாடியம்தாமே செய்திருத்தலால். மூலக்காரரோ யுரையுஞ்செய் துள்ளாராக, அவ்வுண்மையுரையைக்கைவிட்டு வேற்றுரைகளின் மொத்துண்டலேவதெற்றுக்கு? அவ்வேற்றுரைகள் பதிவாக்குக ளல்லாமையால். பிற பசுக்களுரையை நாம்பற்றுவதைக் காட்டிலும் பசுக்களாகிய நாமேநமக்கு விளங்கியவழியேன் பொருள் கொள்ளக்கூடாது? பசுக்களுக்குப் பசுக்களாவுண்மை யுணர்த்தற்பாலார்? குருடனுக்குக் குருடனு கோல்கொடுப்பவன்? ஆகவே, பசுமார்க்கங்களாகிய விக்குருட்டு ஞானங்களில், பதிமார்க்கமாகிய சிவஞானமுமொன்றுதல் நிகழாமைகண்டு தெளிக. உலகாயதமுதலிய ஞானங்கள் பதிவாக்கிற் பெறப்பட்டமையால்அவ்வாக்குக் கிழுக்குண்டாமெனின், இல்லாமையை விரிப்பாம். கண்ணுடியின் முற்பட்டபொருள்களை அவைதன்னிட முள்ளனபோல் அது காட்டியதுகொண்டே அப்பொருள்களை அக்கண்ணுடியிற்றுதான்மியப்பொருள்களெனக் கொள்பவர் யாவர்? கண்ணுடிக்கு அதனெளியேதாதான்மியமாதலமையும். அதிற்காணப்பட்ட பொருள்கள் அதிலில்லாத பொருள்களாதல்போல் வேதத்திற்பெறப்பட்டபொருள்கள்அவ்வேதமாகியகண்ணுடியிலில் பொருள்களேயாம். கண்ணுடிக்கு ஒளியேயுள் பொருளாதல்போல் வேதத்துக்குச் சிவாகமமேயுள் பொருளாகிய தாதான்மிய சம்பந்தமுடைத்தென்க. எதிர்ப்பட்ட பொருள்களைத் தன்னிடங் காட்டியதுகொண்டு கண்ணுடிக்கொருதாழ்வு மில்லாததுபோல் பலசித்தாந்தங்கள் பதிவாக்கிற் பட்டமை கொண்டு அவ்வாக்குக் கொருதாழ்வு மின்றென்க.

வேதாந்த சூத்திரத்துக்குப் பாடியஞ்செய்தருளிய ஸ்ரீகண்டாசாரிய சுவாமிகள் "వయంతువేదశివాగమయోర్భేదం । నపశ్యామఃవేదోపిశివాగమః" என்னும் வாக்கியத்தால் வேதசிவாகமங்கட்குப்பேதங் காண்கின்றிலம். வேதமேசிவாகமம்என்று அவற்றின் அபேதத்தை விளக்கியிருத்தல் காண்க. ஸ்ரீபாஷ்யத்தில் வேதசிவாகமங்கட்குப் பேதமின்மை பிரசங்கிக்கப்பட்டிருத்தலின், வேதாவிருத்த

மாகிய சிவாகம பாஷ்ய சித்தாந்திகளாகிய மற்றைப் பாஷ்யகர்த்தர்கள் வேதபாஷ்யரேயாயினர். சைவபாஷ்யகர்த்தா வொருவரேயன்றி மற்றைப் பாஷ்யகாரர்கள் கன்மவேறுபாட்டையுடைய பசுக்கள் கூறிய நூல்களை யெல்லாம் பிரமாணமாகக் கொண்டமையால். ஸ்ரீகண்டாசாரியர் தமதுபாஷியத்தில் வேதசிவாகமங்களேயன்றி வேறுநூல்களையுந் தழுவியதுண்டேயெனின், (அன்னியநூலின்விதியவிரோதமே, லுன்னேல்பழுதென்றுளத்து) என்னும் நியாயம் வெளிப்படலால் அவரங்ஙனந் தழுவியது தோடமன்றென்க. இந்த விசாரத்தால் சைவபாஷ்ய மொன்றே வியாசருண்மைக் கருத்தினதெனவும், மற்றைப்பாஷ்யங்கள் அவ்வவற்றைச்செய்தவர் கன்மவயத்தின வெனவும், முன்னையது சத்திநிபாதர்க்குரித்தெனவும், பின்னவை சாமாநியர்க் குரித்தெனவும் நிச்சயிக்கப்பட்டது. சைவபாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீகண்டமூர்த்திகள் சிவபெருமானுடைய ஸ்ரீகண்டத்தின் அமிசம்பெற்று அவதரித்தவுண்மை நோக்கியே அவர்க்கு அத்திவ்ய திருநாமம் வந்தமை காண்க. இவ்வுண்மையை ஸ்ரீகண்டவிஜயத்தினும், பவிஷ்யோத்தரத்தினுங்காண்க. இவ்வாசாரியர் கூற்று சர்வசம்பிரதி மன்னமென்பதை விளக்குவான் உலகன்னையாகிய ஔவை யென்பவர் அருளிச்செய்த உண்மைவாக்கியம் வருமாறு. (தேவர்குறளுந் திருநான்மறைமுடிவு, மூவர்தமிழு முனிமொழியும், கோவைத், திருவாசகமுந் திருமூலர்சொல்லு, மொருவாசகமென்றுணர்) என்னுந் திருவெண்பாவில் திருக்குறள், உபநிடதங்கள், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரமுதலிய சித்தாந்த நூல்களோடு வியாசசூத்திரமும் ஒன்றெனச் சேர்க்கப்பட்டிருத்தலின் முனிமொழியெனப் போந்தவச்சாரீரக சூத்திரம் சித்தாந்த பிரதிபாதிதமென்புது சொல்லாமே யமையும். ஆகவே, சைவபாஷ்யமொன்றேஅதற்குரித்தென்பது காட்டப்பட்டது. இன்னும் "வேதமொடாகம மெய்யாமிறைவனூ, லோதும் பொதவுஞ் சிறப்பு மென்றுன்னுக, நாதனுரையிவைநாடி லிரண்டந்தம், பேதம தென்னிற் பெரியோர்க்கபேதமே" என்று திருமூலதேவர் திருமந்திரத்திற் கட்டளையிட்டுள்ள வாக்கியமுஞ் சான்றென்க. மேல்விசாரத்தால் வேதமே சிவாகமம், சிவாகமமே வேதம் என்னு முண்மை வெளிப்படலால் சிவாகமமொன்றேயன்றி வேறு வியாக்கியானங்களை வேதத்துக்குரிமையெனக்கோடல் அசங்கதமென்க.

வேதமுஞ் சிவாகமுமொரு சிந்தாந்தத்தை விளக்கவந்த மூலமும்உரையுமாக, ஆகமத்தைநோக்க வேதத்தைப் பூர்வபட்ச மென்ற தென்னையெனின், சநகர்முதலிய முநீந்திரர்நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள்வரையும் ஓதிஞானம் நிலைபெருதவ ராயினரெனவும், பின்பு ஆக மாந்தமென்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை யோதிஞானம் நிலை பெற்றன ரெனவும் சங்கரசங்கிதையிற் கூறியவாற்ருல், வேதத்தினும் சிவா கமத்திற்குப் பிராமாண்யம் வெளிப்பட்டது. வேதம் தன்னை ஆச் சிரயிக்கும் எல்லாச் சித்தாந்தங்களும் தன்னிடத்தி லுள்ளன வாகவே காட்டுந்தன்மை யுண்மையால். அப்படிக்காட்டுங்கால், காணப்படு மொவ்வொன்றினும் பிரமாணபுத்தி பண்ண வருந் தோஷ மேற்கொண்டியங்கல் திண்ணம். ஆகவே, மயக்கவறிவை விளைப்பதொன்ருக நிச்சயிக்கப்பட்டது. அது சாமாநியராகிய உலகர்க்கேசிவனுல்கொடுக்கப்பட்டதென்னுமுண்மையால். இந்த விசாரத்தால் அது சத்திநிபாதர்க்கு உபயுக்தமாகாதென்க. இந்த நியாயம்பற்றியே ஆகமத்தைநோக்க அது பூர்வபட்ச மாயிற்று. வேதத்தினந்தம் வேதாந்தம் ஆவதுபோல் ஆகமத்தினந்தம்ஆக மாந்தம்என்பது அமையும். அப்படிக்குக்கூருது சித்தாந்தம் என்று வழங்குமாற்ருல், ஆகமாந்தமே சித்தாந்தமென்னும் பரி யாயநாமத்தைப் பெற்றமை வெளிப்பட்டது. இதனுல், ஆகமாந் தத்துக்குப்பரியாய நாமம் வந்ததுபோல் வேதாந்தத்துக்கும்பரி யாயநாமம் வந்திருத்தலை நோக்கின், அதுபூர்வபட்சம் என்னும் பெயர்த்தாம். ஆகவே, வேதாந்தம் பூர்வபட்சமும், ஆகமாந்தம் சித்தாந்தமுமாதல் வெளிப்பட்டது. (ஒரும்வேதாந்த மென்றுச்சியிற் பழுத்த, வாராவின்பவருங் கனிபிழிந்து, சாரங்கொண்ட சைவசித்தாந்தத், தேனமுதருந்தினர்சிலரோ) என்னும்வாக்கியத்தானும் பூர்வபட்சசித் தாந்தங்களாகிய வேதாந்த ஆகமாந்தங்களினுண்மை பெறப்பட் டது. இச்சித்தாந்தமாகிய ரத்னங்களுண்டாகுஞ்சமுத்திரம்போல் வதொன்ருகவிப் பத்திரிகைவெளிப்படுமாற்ருல், பிறமுடிபுகளைக் கீழ்ப்படுத்திச் சைமொன்றினையே நாட்டவெழுந்த விதற்குச் சித் தாந்தரத்நாகரம் என்னும் பெயர் சூட்டப்பட்டது.—இன்னும் விரிக்கிற்பெருகும்.

மெய்கண்ட தேசிகன் திருவடிவாழ்க.

——:0:——

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீவாகீசதேசிகாயநமః.

# சித்தாந்தரத்நாகரம்.

## சிவபாரம்யப்பிரதரிசிநி.

உலகெலாந் தனதொரு சிறுகூற்றி னுளமைய
வலகிலாற்றலா னிறைந்தவ னெவ்னரு ளுலோர்
குலவியேத்துவோ னெவனவ னுமையொரு கூற்றி
னலர்கறைக் களச்சிவபிரா னடியிணை போற்றி.

—:O:—

### ஞானத்திரயவிவரணம்.

பரமபதியாகிய சிவபெருமான் அருளிச்செய்த வேதசிவாகமங்களிற் பெறப்பட்ட வுண்மைஞானம் சத்தி நிபாதர்க்கேயுரித்தாம். உலகர்க்கோ வெனின், பாசபசுஞானங்கள் சித்தியாம். ஆக மூவகைப்பட்ட ஞானங்களுள், சத்திநிபாதர்க்குரித்தாகிய வுண்மைஞானமே பதிஞான மென்னப்படும். இம்மூன்றனுள், தேகமுதலிய பாசகாரியங்களைத் தனித்தனிப் பொருள்களெனக்கொள்வது பாசஞானம். அப்பாசத்திற்பிணிப்புண்டுமயங்கும் பசுவைப்பொருளெனக்கொள்வது பசுஞானம். இயற்கையேபாசமில்லாததாகியவொருபொருள் இவ்விரண்டிற்கும் வேருயுளதெனக்கொள்வது பதிஞானம். இவற்றுள், தேகத்தைப் பொருளெனக்கொண்டவன் உலகாயதன். புத்தியைப் பொருளெனக்கொண்டவன் புத்தன். குணத்தைப்பொரு ளெனக்கொண்டவன் சமணன். இப்படி இன்னும்பலருளர். இவர்களே பாசஞானிகள். இவர்களுக்குமுறையேதேகம், புத்தி, குணமுதலியசடப்பொருள்களையன்றி வேறு சித்துப்பொருளா யிருப்பதோரான்மா வுண்டென்பதுடன் பாடில்லை. இனி, தேகம், இந்திரியம், பிராணன் கரணம், முதலாகிய பாசகாரிய பத்தனுய், சித்ரூபனுய் விளங்

கும்பசுவைப் பொருளெனக் கொண்டவன் மாயாவாதி. இவனை வேதாந்தியெனவும், அத்துவிதியெனவும் அறியாதார் கூறுவர். பாசத்திற் சகனுய், பசுவென்னப் பட்டவனுயுள்ள தன்னைப் பொருளென மயங்கல்போல் தன்னைப் போலவே பாசத்திற் பிணிப்புண்டு மயங்கும் பசுக்களாகிய சூரியன், சந்திரன், பிரமன், விஷ்ணுமுதலிய தேவர்க்களைப்பொருள்களெனக்கொள்வதும் பசுஞானமேயாம். பசுவாகிய தன்னைக்கண்டு மயங்குதல் போல் வேற்றுப்பசுக்களைக்கண்டு மயங்கலால். இவற்றுள், சூரியனைப் பொருளென மயங்குவது சௌரமெனவும், சந்திரனைப்பொருளென மயங்குவது சௌமமெனவும், பிரமனைப் பொருளென மயங்குவது ஐரணியகருப்பமெனவும், விண்டுவைப் பொருளென மயங்குவது வைணவமெனவும் பெயர்பெறும். வைணவமெனினும், பாஞ்சராத் திரமெனினும் ஒக்கும். இவற்றுள் சௌர முதலியன பாஞ்சராத் திரத்தைநோக்க அப்பிரகாசத்தை யடைந்திருக்கின்றன. மாயாவாதமுதல் பாஞ்சராத் திரமீருகிய மார்க்கங்களிற் பிரவர்த்திப்பவர் தம்மையும், தம்மையொத்த பிறபசுக்களையும் பொருள்களென மயங்கலால்,இவர்கள் யாவரும் பசுஞானிகளேயாவர். இவர்களுக்கு அவரவர்கள் கொண்டிருக்கும் பசுக்களைக்காட்டிலும் வேறு பதிப்பொருளுண்டென்பதுடன் பாடில்லை.

உலகாயதன் முதலிய பாசஞானிகள் பாச காரியங்களாகியதேகம், புத்தி, குணமுதலிய பொருள்களை யன்றி வேறு ஆன்மாவாவது, பரமான்மாவாவது உண்டென்று கொள்ளாமையாலும், மாயாவாதி முதலிய பசுஞானிகள் ஆன்மாவாகிய தன்னையும், சூரியன், சந்திரன், பிரமன், விஷ்ணுமுதலிய வேற்றுப் பசுக்களையுமன்றி வேறு பரமான்மா வுண்டென்றுகொள்ளாமையாலும் யாவரும்பதியை யிழந்தவர்களே யாவர். தேகவாதிமுதல் பாஞ்சராத்திரி வரையில் அமங்கலம் பெற்றியங்கலால் அவர்கள் யாவரும் நாஸ்திகருமாவர். தேகமே ஆன்மாவெனக்கொண்டு தேகத்துக்கு வேருயுள்ள ஆன்மாவையும், கடவுளையுமில் பொருள்களாகத் துணிந்தமையால், தேகாத்மவாதியாகிய உலகாயதன் அவற்றை யுண்டென்பாரை நோக்கநாஸ்திகனுவன். இவனில்கொஞ்சம் பிராக்ஞாளாய் இந்திரிய முதலிய

பொருள்களைத் தேகத்தினிடமாய்க் கண்டமையால் சமணதிகள் நாஸ்திகருள் பாசஞான துல்யராவர். ஆன்மாவையே கடவுளெனக் கொண்டும், பிற ஆன்மாக்களையே கடவுளர்களெனக் கொண்டும், அவர்களுக்கு வேருயுள்ள பரமான்மாவாகிய பதிப்பொருளையில்பொருளாகத் துணிந்தமையால் ஆன்மவாதி முதலியவர்களும் பதிப் பொருளொன்று வேறு உண்டென்பாரை நோக்க நாஸ்திகராவர். இவர்கள் பதிஞானிகளை நோக்க நாஸ்திகரோயன்றிப் பாசஞானிகளை நோக்க ஆஸ்திகரோயாம். இவர்கட்கு ஆஸ்திகத்வம் பாசஞானிகளை நோக்க வுண்டாதலால் அவரோ டொருசேர்த்து நாஸ்திகர் என்னும் பெயர்வழங்குந் தன்மையொழிந்தது.

ஆத்மா இல்லையென்பவனும், கடவுளில்லை யென்பவனும், ஆத்மாவாகிய தானே கடவுளென்பவனும், பிறவான்மாக்களே கடவுளர்க ளென்பவருமாகவே யொவ்வொரு மதத்தவரும் ஒழிதலால் அநீச் சுரவாதிகளாகிய அன்னோர்க்கப் புறப்பட்டவனுய், பதிஞானி யென்னப்பட்டவனு யுள்ளவனொருவனுளன். எனவே, மேல் விவகரித்து வந்த பாசகாரியங்களுக்கும், பசுக்களுக்கும் வேருகப்பதிப் பொருளொன்று வேறு கண்டவனென்பது நிச்சயிக்கப்பட்டது. அப்பதிப்பொருள் சம்பு சப்த வாச்சியனுகிய சிவபெருமானே யென்பது சமஸ்தவேத நிச்சயமாகையால், அப்பரசிவ சம்பந்தத்தால் சைவ னென்னப்படுவோனே பதிஞானியாதல் திண்ணம்.

தேகமுதலிய பாசகாரியப் பொருள்கள் அசேதனங்களாவதுகொண்டு அவற்றைப்பொருள்க ளெனக்கொள் வதிழுக்காம். ஆன்மாஅப்பாசத் தொடக்கிற்பட்டுழலுந் தன்மையுண்மையால் அதனைப் பொருளெனக் கொள்வதும் பிழையாம். சூரியனைப்பல்லையுடைத்தும், சந்திரனைக் கீழேதேய்த்தும், பிரமனைத்தலையையரிந்தும், விண்டுவைச் சூலத்திற்குத்தியும், அவரவதாரங்களில் மீனைக்கண்ணைப் பிடுங்கியும், ஆமையை யோட்டைப்பறித்தும், பன்றியைக் கொம்பைமுறித்தும், இவைமுதலிய நிக்கிரகங்கள் சிவபெருமான் செய்தவுண்மையால் அவர்களைப் பொருள்களெனக்கொள்வதும் அசங்கதம்.

இனிப்பதிஞானத்தாற் பெறப்படும் பரம்பொருளாயுள்ள வர் சிவபெருமானே யென்பதை விளக்குதும்.

## சிவன் பூரணமென்றது.

பூரணம் என்பது நிறைவு என்று பொருள்படும். நிறைவு என்னுங்கால் எதில் நிறைவு? யாருடைய நிறைவு? என்னும் வினநிகழும். உலகத்தில் நிறைவு எனவும், சிவனுடைய நிறைவு எனவும் விடைவருமாற்றால், முதல் அவ்வுலகத்தை விசாரிக்கில் சரம், அசரம் என இருவிதப்படும். இவ்விருபகுதியும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், நிலா, பகலோன், ஆன்மா என்னும் எட்டுப்பேதமாய் விரியும். இவ்வெட்டையன்றிப் பரமாணுவுங் கிடையாதென்பது திண்ணம். இதனையே அட்டமூர்த்தமென்று வேதசிவாகமங்கள் கூறும். எனவே, சிவனுக்குத் திருமேனி யென்பது பெறப்பட்டது. இதனால், சிவனுடைய நிறைவும் வெளிப்பட்டமைகாண்க. சராசரங்களாயுள்ள அவற்றினுள்ளும் புறம்பும் அவர்கலந்து நிற்றலால் அவைகள் வியாத்தி வியாப் பியப்பொருள்களும், அவர் வியாபகப்பொருளுமாதல் சாலும். இதனால் வியாபகத்துக் கிடமாகியபொருள்களும், வியாபிக்கும் பொருளும் ஒருபொருளாகாவாம். சரம், அசரமெனப்போந்த விபாபக தானப்பொருள்கள் வியாத்தி வியாப்பியங்களாய்ச் சத சத்தும், அசத்துமாய் விளங்கலான், அவ்விரண்டுமே யொரு பொருளாதல் நிரஸ்தம். இங்ஙனமாக, கேவலம் சத்தாகிய வியா பகப்பொருள் சதசத்தும், அசத்துமாகிய வியாத்தி வியாப்பியப் பொருள்களாத லெங்ஙனங்கூடும்? மூன்றும் விஜாதிப்பொருள்க ளாத லுண்மையால். (வியாபகமாதி விரிக்குங்காலை, வியாபகமேலிடு நிறைவாமென்ப, வியாத்தி சமநிறைவாகும் விளம்பின், வியாப்பிய மொன்றின் மிடைந்தநிறைவே) என்னும் வியாக்கியையுஞ் சிந்தித்தலமையும்.

இவ்வுண்மையையறியாதார் பூரணமென்ற மாத்திரத்தானே ஏகவாதஞ்சாதிக்க வெழுகின்றனர். எல்லாம் அது என்னும் விபரீத மேற்கொண்டமையால். எல்லாம் என்பது கொண்டே ஏகத்வம் நசித்தலால் மேல் விபரீதம் தலையெடுக்காதென்க.

ஒன்றே பலவாதல் செல்லுமெனின், விஜாதிப்பொருள்களாதல் இழுக்காம். அல்லதூஉம். ஏனையிட்டு என்னுஞ்சங்கையும் வரும். லீலாமாத்திரமெனின், (வேண்டுதல் வேண்டாமையி லானடிசேர்ந்தார்ச், கியாண்டு மிடும்பையில) என்னுந் திருவாக்காற் பழிக்கப்பட்டழியும். உலகத்தில் விஜாதிப்பொருளாயிருந்து வியாபித்தல் யாண்டமையுமெனின், உலகம்பிழைக்கவென்பதுதெளிக. பூதவிருளாலாவரிக்கப்பட்ட கண்களில் கதிரொளிகலந்து அவ்விருளைத் தூரத்துமாபோல். ஆகவே, ஸ்வப்பிரயோசனமன்றிப் பரப்பிரயோசனம் வெளிப்பட்டது. இதனல் எம்முடைய கூற்று இழுக்கடையாமைகாண்க. அன்றியும், அவர்பலவாயினரெனின், இப்போது ஆயிருப்பதேயன்றி இன்னும் அவரதிக மாதலுங்கூடும். ஆகவே, அட்டமூர்த்தம் கெட்டுப்பூரணம் அபூரணத்தையடையும். இந்த விசாரத்தால் வேதத்திற்போந்த அட்டமூர்த்தம் சைவமொன்றற்கே வுரிமையாகிச் சிவனே பூரணனென்பது நாட்டப்பட்டது.

சராசரங்களைச் சிவனுக்குத் திருமேனி யென்றமையால், சேதனமாகிய ஆன்மாவுக்கு அசேதனமாகிய தேகம் திருமேனியாதல் போலாமெனின், அற்றன்று. (அங்கியானது தானுமொன்றையணைந்து நின்று நிகழ்ந்திடும், பங்கியாதுயிர்தானு மிப்படி பற்றி யல்லது நின்றிடாது) என்றபடிச் சிவனுக் கிலக்கணம் கூறப்படாமையால். (சிவனுருவருவுமல்லன் சித்திேடைசித்துமல்லன்) என்பது அவருண்மையிலக்கணமாகையால். ஆன்மா மாயாகாரியமாகிய தேகத்தைத் தானியங்கும் பிரயோசனத்தை நாடிக்கலந்த தொரு பொருளும், சிவன் ஆன்மாவையும், தேகத்தையுங்கூட்டி யியக்குவிக்கும் பிரயோசனத்தை நாடிக்கலந்த தொரு பொருளுமாகையால் முன்னையது ஸ்வப்பிரயோசனமும், பின்னையது பரப்பிரயோசனமும் பெறப்பட்டமை காண்க. இதனல், உலகுயிர்களை சிவனுக்குத் திருமேனி யென்றது ஔபசாரிகமேயாம். (மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவமாகு, மாயவாணவ மகன்ற வறிவொடு தொழிலையாக்கு, நாயகனெல்லா ஞானத்தொழின் முதனண்ணலாலே, காயமோமாயையன்று காண்பது சத்தி தன்னல்) என்னும் அருள் வாக்கியத்தால் சிவனுடைய திருமேனி யீதெனவெளிப்பட்டது. ஆகவே, அவர் தமது சிற்சத்தியிற் றிருமேனிகொண் டருள்வரென்பது உண்மை நூற்றுணிபாம்.

இனி, பூரணன் சிவனெனலடாது. விஷ்ணு வென்பதற்குப் பொருள் வியாபகப்பொருள் என்றுபெறப்படு முண்மையால் என்று சிலர் கூறுவர். (விற்பிரம்பா லுற்றவடு மேவவுல கெங்குநிறை சிற்பரனே தெய்வம் சிவசிவா, சொற்சிறந்த, அகரமுதல வெழுத்தெல்லா மாதி, பகவன்முதற்றே யுலகு) என்னுந் திருவாக்கால் சிவபெருமான் அருச்சுனனிடத்தில் வில்லடிபட்டும், பாண்டியனிடத்தில் பிரம்படிபட்டும், சமஸ்த சராசரங்களுந் தமது திருமேனி யென்பதை விளக்குவான் எங்குமத்தழும்புகள் புலப்படத் திருவுள்ளமிசைந்த வுண்மைவெளிப்பட்டது. அன்றியும், (வில்லாடன் மாரனிருக்கவும் யோகம் விளைத்தவந்நாள், புல்லாதிருந்தனவெல்லாவுயிருந் தம்போகத்தையே) என்னுந்திருவாக்கால் பிராட்டியைப் பிரிந்துபெருமான் யோகிருந்த காலத்தில் மன்மதன் முதலி யவர்களுஞ் செயலற்று எல்லாவுயிர்களும் போக மொழிந்த புதுமையுங் காணப்பட்டது. இன்னும் பெருமானது திருக் கண்களைத் தேவியார் லீலாமாத்திரமாய் மூடிய காலத்தில் எல்லாச்சுடர்களு மொளிமழுங்கி யிருண்மூடி யுலகமயங்கியழிந்தது. இன்ன வியாபக விளக்கத்திற்போந்த வுண்மைகள் விஷ்ணு முதலிய தேவர்பாற் காணுமையால் அவர் வியாபகராதல் விழுக்கடைதல் காண்க.

இரணியன் பொருட்டுத் தூணில்வந்தமை சாலுமெனின், இன்னகாரியங்கள் சிவனருள்பெற்றூர்க் கியல்பினவேயாம். தந் திருமேனியிற்பட்ட அடிகள் உலகமெங்கும் பட்டும், தாம்பெண்டொடக்கின்றி நிற்ப, வுலகமெங்கும் போகமொழிந்தும், தமது திருக்கண்களைத் தேவியார் மூட, வுலகமெங்கும் இருண்மூடியும் வெளிப்பட்ட சிவபூரணத்தின் முன்னர்க்கம்பத்தின் முளைத்த சிங்க பூரணம் எங்கே தலையெடுக்கும்? சிங்கம் கம்பத்தில் வந்தபோது உலகமெங்கும் நிகழ்ந்த அதிசயமென்னை? வசிட்ட வியாசாதிகளுந் தம்மை நோக்கித் தவங்கிடந்தார்க் கருளவேண்டி அவர் நினைத்த விடத்தில் வெளிப்படுதலியல்பாம். ஆகவே, கம்பத்தின் முளைத்த கதை தடுமாற்ற மெய்தினமை காண்க. கோபிகைகள் பதினாறுயிரம் பேரிடத்தில் நாரதர்க்குக் கண்ணன் காணப்பட்டமைசாலுமெனின், இதனைச் சௌபரி விருத்தாந்தம் சால நகைக்கும்.

எங்ஙன மெனின், ஓரரசன் பல பெண்களைப்பெற்று
அவர்களை மணஞ்செய்விப்பது கருதி இராஜ குமாரர்களைப்
பல தேசங்களி னின்றும் வரிக்கையில், அப் பெண்கள்
அவ் விராஜ குமாரர்களை மணம் புணரச் சம்மதித்திலர். பின்
னர், சௌபரி என்னும் பெயரையுடைய முனிவ ரொருவர்
வயதின் முதிர்ச்சியால் தள்ளாடிக்கொண்டேவந்து அரசனைக்
கண்டு உன்னுடைய பெண்களை நான் மணம்புணரவிரும்பிவந்தே
னென்றார். அரசன் வெறுப்போடு அம்முனிவரைத் தன்னு
டைய பெண்களிருக்கும் விடுதியிலனுப்பினன். உள்ளே சென்று
திரும்பிய முனிச்சிரேஷ்டர் தம்மை மணம்புணரவிசைந்த இராஜ
புத்திரிகளிடம் வாங்கிவந்த முத்திரை மோதிரங்களை அரசனுக்
குக் காட்டினர். அரசன் வருந்தி நமது பெண்கள் கிழவனும்,
ஜிதேந்திரியனுமாகிய இந்தமுனியை விரும்பியது அவரூழாயின்
வேறு என்செய்வது என வொன்றும் யோசியாது அந்தப்
பெண்க ளனைவரையும் அம் முனிவர்க்குக் கலியாணஞ் செய்
வித்து, அவர்களை அம்முனிவரோடுகூட்டி அனுப்பிவிட்டனன்.
சில வருடங்கள் கழிந்தபின்னர் அரசபத்தினி யொருநாள் அர
சனைப்பார்த்து நமது குழந்தைகள் க்ஷேமம் இன்னது என்று
நமக்குப் புலப்படாதவழி தெய்வம் செய்தது நம்வயிறுசெய்த
கொடுமையென்று துக்கித்தனள். அதைச் சகிக்கமாட்டாத அர
சன்உடனே தன்னுடைய பத்தினியை யுடன்கொண்டு சிலசேனை
களோடு தன்னுடைய பெண்களையும், மருமகனையுந் தேடிப் புறப்
பட்டனன்.மார்க்கத்தில்ஓர்பெரியஅடவியில்தவஞ்செய்துகொண்
டிருந்த முனி புங்கவரொருவர் தனக்கு முன்னே தோன்றினர்.
அவரைப் பார்த்தபோது தன்னுடைய பெண்களை மணம்புணர்ந்த
சௌபரியெனப்புலப்பட்டது.அப்போதுஅவர்இராஜனையும்இரா
ஜபத்தினியையும்பார்த்து மாமன் மாமியென்னு மரியாதை பாரா
ட்டியுபசரித்தனர். முனிவரைத் தங்கள் மருமகப்பிள்ளை யென்று
தெளிந்த அவ்விருவரும் பயந்து நம்மபெண்கள் கதி யின்னதென்
றெப்படி யறியப்போகிறோமென்று சிந்தித்துக்கொண்டிருக்கை
யில், முனிவர் தமது பத்னிமாராகிய இராஜகுமாரத்திகளிருக்
கும் பட்டணத்தைச் சுட்டி வழிகாட்டி அவ்விருவரையு மனுப்
பினர். அந்தக்குறிப்பின் வழியே சென்ற இராஜனும் இராஜபத்

னியும் பட்டணத்தைக் கண்டுபிடித்து உள்ளே பிரவேசித்த போது, அது இரத்னமயமான கட்டடங்களும், உப்பரிகைக ளும் நிறைந்த பேரதிசயத்தை விளக்குங்காட்சியிற் காணப்பட் டது. அதைக்கண்டு பிரமித்து இது தெய்வலோகமோ ஏதோ என்று சமிசயித்துக்கொண்டிருக்கையில், தங்கள் மருமகப்பிள்ளை யாகிய சௌபரிமுனிவர் தந்துணைவரோடு அங்குவந்து அவர் களை அதிகமரியாதை பாராட்டி யெதிர்கொண் டுபசரித்தனர். ஆரணியத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர் பட்டணத் தில் தங்களுக்கு முன் வந்திருக்கும் விஷயமின்னதென்று புலப் படாமல் முழுதும் பார்ப்போமென்று அம் முனிவர் பின் அவ் விருவரும் போயினர்.

முனிவர் தம்முடைய கிருகத்துக்கு அவர்களை யழைத்துக் கொண்டுபோனபோது அங்கேயிருந்த தன்னுடைய மனைவி யொருத்தி அவ்விருவரையும் தன்னுடைய தாயுந்தந்தையுமென் றறிந்து வந்து கட்டிக்கொண்டனள். புத்திரியாகிய அவளை அவ் விருவருந் தழுவிக்கொண்டு மனமகிழ்ச்சியோடு அவளுடைய க்ஷேமங்களையும், மற்றைப் பெண்களுடைய க்ஷேமங்களையும் விசாரிக்கையில்அவர்களைவிட்டுப்பிரிந்துமுனிவர்பின்வந்துவிட்ட நாண்முதல் நடந்தவதிசயங்களையும், தங்களுக்குண்டாகிய சம்பத் தின் மகிமைகளையும் முறையே அவள்சொல்லி முடித்தனள். யாவுங்கேட்டு அடங்காத மகிழ்ச்சியோடு இரண்டொருநாள் அந்தப் பெண்ணினிடத்திலே தானே அவ்விருவரு மிருக்கையில் தங்கள் மருமகப்பிள்ளையாகிய முனிவர் தன்னுடைய மனைவியுட ன்கலந்து வாழுமொருமையும், பிரிவின்மையுங்கண்டு எப்போது மிவ்விடத்திலேதானே யிருந்தால் மற்றைப்பெண்கள் கதியெப் படியாவது என்று யோசித்து அந்தப்பெண்ணைக் கேட்கையில், அவள் அதிகவருத்தத்துடன் தன்னுடைய கணவர் தன்னை விட் டொரு கணமும் பிரிவதில்லை யெனவும், அதனால் தனது தமக் கைமார் தங்கைமார் முகத்தை அவர் பார்ப்பதில்லை யெனவும், அந்த வொருகுறையே தனது நெஞ்சில் குடியிருப்பதெனவுஞ் சொல்லினள். அந்தவார்த்தையைக்கேட்டு வருந்திய தாய்தந்தை யர்கள் அன்றுகழித்து மறுதினம் மற்றைப்பெண்களையும் பார்ப் பதுகருதி அந்த வீட்டைவிட்டு மற்றொரு பெண் வீட்டுக்குப்

போயினர். இவர்களைக்கண்ட பெண் விரைந்து ஓடிவந்து தழுவி மகிழ்ந்தனள். அந்தப்பெண்ணைப் பார்த்தமாத்திரத்தில் அவளுடைய சமஸ்த சுபங்களும் அவளுடைய முகவிலாசத்திற்கண்டு அவ்விருவரும் உள்ளம் பூரித்தார்கள். சிலநேரங் கழித்தபோது தங்கள் மருமகப் பிள்ளையாகிய சௌபரி முனிவர் உள்ளேயிருந்துவந்து அவர்களை அதிகமரியாதையோடு உபசரித்தனர்.

இந்த அதிசயத்தையின்னபடித்தென்றறியமாட்டாமல் அவ்விருவரும் தங்கள் பெண்ணினுடைய க்ஷேமத்தை விசாரிக்கையில் முதல்கண்ட பெண்சொன்னபடியே அவளும் சொல்லிவருந்தினள். இப்படியே ஒவ்வொரு பெண்ணினிடத்தும் போய்ப் பார்க்கையில் அந்தந்த விடங்களிலும் சௌபரி முனிவரிருந்து தங்களை யுபசரித்து வரும் அருமைகளையும், அந்தப்பெண்கள் சொல்லி வருங்குறைகளையுஞ் சிந்தித்து ஆச்சரியத்தை யடைந்து நமது குழந்தைகள் செய்ததவமே தவமென்று மகிழ்ந்து அந்தப்பெண்களிடத்தும், மருமகப்பிள்ளையிடத்தும் விடைபெற்றுக்கொண்டு அவர்கள்செய்த சன்மானங்களையும் அங்கீகரித்துத் தங்கள் இராஜ்யத்துக்குப் போய்விட்டனர்.

இந்த விருத்தாந்தத்தின் முன்னர்க் கண்ணனுடைய வியாபகநிலைப்பது அருமை! அருமை!! ஆகவிப்படிப்பல விதத்தானும் விசாரமுகத்தில் விஷ்ணுவுக்குக் கூறும்வியாபகங்கள் அசாமஞ்சஸமேயாய் முடிதலால் (நிலநீர்நெருப்புயிர்நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனுயமைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்ற, னுலகேழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே, பலவாகி நின்றவாதோ ணோக்க மாடாமோ) என்னுந் திருவாக்கின்படிச் சிவபெருமானே சர்வ வியாபகனென்பது நாட்டப்பட்டது.

இன்னும், விஷ்ணுவுக்குப் பாஞ்சராத்திரிகள் கூறும்பூரணத்தைப்பரியாலோசிக்கில், அவர்சாகார பூரணனென்பர். என்பது, பரமபதமென்கிற வீட்டில் நீளாதேவிபூதேவி சமேதராய், திருமாமணி மண்டபத்தில் சங்கசக்கிரதாரியாய், நீலமேனியராய், நித்தியசூரிகளால் சேவ்யமானராய் எழுந்தருளி யிருப்பவனெனவும், அப்படி அவரங்கெழுந்தருளி யிருக்குங்கால், அவருடைய பிரகாச மாத்திரத்தானே சர்வவியாபகத்வம் பெறப்படுமெனவும், அது சூரியனேரிடத்தி லிருக்கவும், அவன்பிரகாசத்

தால் சர்வவியாபியாதல் போல்வதொன்றெனவுங்கூறுவதேயாம். இது பூரணவிலக்கென்பதை நிரூபிப்பாம். சூரியனேரிடத்தி விருந்து அவன்பிரகாசத்தால் வியாபிக்கையில், எங்கும் சமநிறைவு கூறுதல் கூடாது. அவனிருக்குமிடத்திவிருந்து பூமியைநோக்குங்கால், சிறுகச்சிறுகப் பிரகாசவுஷ்ணங்கள்குறைந்திருப்பது பிரத்தியட்சமாதலால். இன்னதன்மையேவிஷ்ணுவுக்கும்சொல்லவருமாகையால், அவர்பூரணராதல்அமையாதென்க. வியாபகப்பொருளாயுள்ளது எங்குமொருபடித்தாதலமையும். நான்குபூதங்களும்தன்னிடம் விரவி நிற்க விடங்கொடுத்திருக்கும் ஆகாசத்தைப்போல. இன்னலட்சண விருத்தமாய்க் கேவலம் கண்டப் பொருளாயுள்ள விஷ்ணுவை அகண்டமாகிய பூரணப் பொருளென்றது பிழையாம்.

## சிவன் எத்தன்மைய ரென்பது.

சிவபெருமான் ஸ்ரீ மஹா கைலாசத்தி லெழுந்தருளியிருப்பதால் அவர்க்கு மித்தோடம் வருமேயெனின், தத்தோஷத்தைப் பரிகரிப்பாம். (அன்றுந்திருவுருவங்காணதே யாட்பட்டேன், இன்றுந் திருவுருவங் காண்கிலே, மென்றுந்தா, னெவ்வுருவோனும்பிரானென் பார்கட்கென்னுரைக்கே, மெவ்வுருவோநின்னுருவமேது) என்னுந்திருவாக்கால் அவருடையவுண்மை யிலக்கணம்வெளிப்பட்டது. இன்னும், (மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சிமயானத்தான் வார்சடையா னென்னினல்லா, னொப்புடைய னல்ல னொருவனல்ல னோரூரனல்ல னோருவமனில்லி, யப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல்லா, லிப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே) என்னும் பிரமாணத்தானுங் காண்க. இதனால், சிவபெருமானுக்கு உருவம், அருவமுதலிய வெந்த விலக்கணங் கூறுதலுமமையாமை வெளிப்பட்டது. சிலசமயிகள் கேவலம் உருவமேயெனவும், சில சமயிகள் கேவலம் அருவமே யெனவுங் கூறித்தியங்குவர். அவ்விருமையும் நம்மகொள்கையன்றாம். (சிவனுருவருவுமல்லன்) என்பதனானுந்தெளிக. இன்ன வியலுடைய சிவன் ஸ்ரீ மஹாகைலாசத்தில் உருவமுடையவரா யெழுந்தருளி யிருப்பது ஆன்மாக்களிடம் வைத்திருக்குங் காருண்ணியமே காரண

மென்க. அவர் தனக்கென வொரு பிரயோசனம் வேண்டாதவ ராலின், இத்தன்மைய ரெனவும், இன்னவடிவினரெனவும், சொல் லுதற்கரியவராகிய அவர்செயல் யாவும் பிறர் பொருட்டேயாம். ஈண்டுப் பிறரென்பது மலபத்தராயுள்ள ஆன்மாக்களே யாகை யால், அவர்க்கருளவிசைந்த கருணாசாலியாகும் நம்சிவன் உயிர்க ளெப்படி, அப்படி யிசைந்து நடிப்பது அமையும். உயிர்கள் மூவிதமாய், உருவமுடையவரும், உருவமில்லாதவரு மாகுந்தன் மையால், அன்னோர்க்கவரவர் போன்றருளு முறைமை வெளிப் பட்டது. பன்றிக்குட்டிகளுக்கு பால்கொடுக்க வேண்டிப் பன்றி யுருவமும், ஒருபெண்ணுக்கு மருத்துவம் பார்க்கவேண்டி அப் பெண்ணினுடையதாயுருவமும் பெருமான் பெற்றமை கொண்டு சிவனுக்குப் பன்றி யுருவமும், தாயாகிய பெண்ணுருவமும் அவ ருடைய சொரூப விலக்கணமென்று கொள்வது யாண்டிசையும்? அவை அருள் வடிவங்களாதல்போல் மூவகைப்பட்ட வுயிர்கள் பொருட்டு அவர்கொண்ட ரூபாரூபங்களும் அருள்வடிவங்களே யாம். ஆகவே, ஸ்ரீமஹாகைலாசத்தி லெழுந்தருளி யிருப்பதும் அருட்பிரகாசமூர்த்தமென்பதுவெளிப்பட்டது. எப்படி ஸ்ரீமஹா கைலாசத்தில் உருவமா யெழுந்தருளி யிருக்கின்றனரோ, அப் படியே உலகமுழுதும் அவர் அருவமாய் வியாபித் திருத்தல் காண்க. அருவமாய் வியாபித்திருப்பதும், உருவமாய் வெளிப் பட்டிருப்பதும் உலகுயிர்களியங்குதற் பொருட்டே யாகலின் அவ்விருமையும் அவர்க்கு நிசவிலக்கண மன்றென்க. (இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபால், நல்லாயுளவாமானீர்நிழல்போ, லல்லா, வருவாகி நின்றானையாரறிவார்தானே, யுருவாகித்தோன்றானேலுற்று) என்னுந் திருவாக்கால் தாய்க்குண்டாகிய முலைப்பாலுங் கண் ணீரும் தன்பொருட்டன்றிக் குழந்தையின் பொருட்டென்னு முண்மை வெளிப்பட்டதுபோல், அருவம், உருவமுதலிய தன் மையைக்கடந்து நின்றசிவம் உயிர்கள்பொருட்டு அவையுடைய ராக வெளிப்பட்டமைகாண்க. இதனால், அருவமாய் அவர் வியா பித்திருப்பதும் அவரருள் வடிவங்களில் ஒன்றென வெளிப்பட் டது. ஆகவே, அவரைக்கேவலம் அரூபியென்பது குற்றமாதல் காண்க. ரூபமின்மையும், அரூபமின்மையு முடையவராதலால். இவ்வுண்மையை யறியாதார் அவர் அரூபியென்றே கூறுவர். அவர்கட்கு அரூப விலக்கணமே யீதென்று தெரியாமையால்.

அவனை நோக்கி ஏன் அரூபி யென்றலடுக்கும்? ரூபியென்றலடாது? எனின், காணப்படு முருவங்கள்யாவும் மாயையிற் காரியப்பாடு பெறுமாற்ருல், அவர்க்கத்தோடம் வராமலிருக்கக் கருதி யென்பர். நல்லழகிது! உருவங்கண் மாத்திரமேயன்றி அருவங்களும், அம்மாயையிற் காரியப்பாடு பெறுதல் அவர் விசாரியாதவர்போலும். ஆகாயம், மனசு, சத்தம், காலம் என்றின்னன பலவுள வா்தலறிக. அருவமாந் தன்மை அவரொருவரோயன்றி வேறு பொருள்கள் பெருதொழியினன்ருே அவ்வருவஞ் சிறப்படையும்? அப்படிக் கில்லாமை வெளிப்படலால், அவனைக் கேவலம் அரூபியென்றல் பிழையுடைத்தாம். (உலகினிற் பதார்த்தமெல்லா முருவமோடருவ் மாகி, நிலவிடு மொன்ருென்ருகாநின்றவந்நிலையேபோல, வலகிலாவறிவன்ருனு மருவமே யென்னிலாய்ந்து, குலவிய பதார்த்தத் தொன்ருய்க் கூடுவன் குறித்திடாயே) என்னுந் திருவாக்கானுங் காண்க. இந்தப் பிரமாண முகத்தால் ரூபமொன்றே மலகாரியமென்று கொண்ட தோஷம் நிவிர்த்திபெற்றதால், அவனை அரூபியென்று கூறியமாத்திரத்தானே அவர் நின்மலராதல் செல்லாமை காண்க. இந்த நியாயங்களால் அவருக்கிதுதானுருவமென்று ஒன்றைக் கற்பித்துரைத்தல் கூடாதென்பது பெறப்பட்டது. (பந்தமும்வீடுமாயபதபதார்த்தங்களல்லானந்தமு மாதியல்லா னளப்பிலனுதலாலே, யெந்தைதா னின்னனென்றுமின்னதாமின்னதாகி, வந்திடானென்றுஞ் சொல்லவழக்கொடு மாற்றமின்றே) எனவும். (குறித்ததொன்ருகமாட்டாக் குறைவிலனுதலானு, நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும், வெறுப்பொடு விருப்புத்தன்பான் மேவுதலிலாமையானு, நிறுத்திடு நினைந்தமேனி நின்மலனருளினலே) எனவும் போந்த அருள்வாக்கியங்களால் எமது கர்த்தா இத்தன்மையனென்றும், இன்ன வடிவினனென்றும் இன்னவடிவில்லாதவனென்றும் சொல்லுந்தன்மை யொழிந்துதனது காருண்யத்தால் தான் நினைத்ததொரு திருமேனியைக் கொண்டருள்வனென்று பெறப்பட்டமை காண்க. (சிவஞ்சத்திநாதம்விந்து சதாசிவன்றிகழுமீச, னுவந்தருளுருத்திரன்ருன் மாலயனென்றினென்ருய்ப், பவந்தருமருவநாலிங் குருவநாலுபய மொன்ருய், நவந்தரு பேதமாக நாதனே நடிப்பனென்பர்) என்னும் பிரமாணத்தால் அருவம் நான்கும், உருவம்நான்கும், அருவுருவம் ஒனறுமாக வொன்பது வடிவங்களையுடையவன் எமது கர்த்தாவென்று பெறப்படுங்கால், இவ்வொன்பதும் தனக்கெனவுடையனுகாது உயிர்கள்

பொருட்டென்றே வெளிப்படலால், இவற்றை அதீதப்பட்டவனு கிய அன்னேன்றன்மை இதுவெனக் கூறப்படாததன்மையொ ன்றே யென வெளிப்பட்டவாறறிக.

இன்னும், (உருமேனி தரித்துக்கொண்ட தென்றலு முருவிறந்த, வரு மேனியதுவுங்கண்டோ மருவுருவானபோது, திருமேனியுபயம்பெற்ருேஞ்செப் பியமூன்றுநந்தங், கருமேனிகழிக்கவந்த சருணேயின் வடிவுகாணே) என்னும் வாக்கியத்தால் உருவம், அருவம், உருவருவம் என்னும்மூவிதவடி வங்களும் அருள்வடிவங்களென்றும், அவையுயிர்கள் பொருட் டுக் கொண்டகோலங்களென்றும் பெறப்பட்டமையால், இம் மூன்றுவடிவங்களு முண்டாகு நிலேக்களமான சுபாவமொன்று இவற்றிற்குவேருய், இவைகளேயுடன் கொண்டிருப்பதொன்ருய் நிற்குநிலேமை வெளிப்பட்டமைகாண்க. ஆக மூவிதவடிவங்களி லொன்ருகிய அருபநிகழ்ச்சியின் பேருய் விளங்கும் பூரணத்வ விசாரம் கேவலம் ரூபசாத்தியங் கூறுமவலம் பனத்திலிழுக்க டையுமென்க. நம்சைவமார்க்கத்தில் நமது அருட்பெருந்தோ ன்றலாகிய சிவபெருமான் அருவமாயிருப்பதால் சிலநிகழ்ச்சியும், உருவமாயிருப்பதால் சிலநிகழ்ச்சியும், அருவுருவமாயிருப்பதால் சிலநிகழ்ச்சியும் பெற்றமையுமுண்மை பெறப்படுமுண்மையால், அவ்வற்று ளொன்ருகிய அருவத்திற் பெறப்படு நிகழ்ச்சிகளில் அவர் பூரணராயிருத்த லொன்றென்பது வெளிப்பட்டது. இதை விட்டு உருவமாயிருப்ப தொருபொருள் அருவமாச்சுதெனவா வது, அருவமாயிருப்ப தொருபெருள் உருவமாச்சுதெனவாவது கூறுவது செல்லாமை காண்க. உருவத்தில் உருவமேயன்றி அருவமும், அருவத்தில் அருவமேயன்றி உருவமும் பிறவா தென்பது நிச்சயமாகையால். நெல்கமுகாய் நீளாதென்றபடி. இந் நியாயத்தால் கேவலம் அரூபவாதிகள் ரூபத்தைக் கோடலும், கேவலம் ரூபவாதிகள் அரூபத்தைக் கோடலும் அசப்பியமாதல் காண்க. ரூபம், அரூபம், ரூபாரூபம், ஆகிய மூன்றும் அவசர பேதங்களெனவும், இவற்றையுடையது அவற்றைக்கடந்து இன்ன படித்தென்றறியப்படாத வொருபொருளெனவும்நிச்சயிக்கப்பட் டமையால், இப்பேரிலக்கணமுடைய பரசிவசித்தாந்திகள்கூறும் பூரண விசாரத்தின் முன்னர் பாஞ்சராத்திரிகள் கூறவரும் விஷ் ணுபூரணம் எங்கேதலேகாட்டும்? பூரணம் அம்மதரீதியாய்ச் சித்

தியாமை வெளிப்படலால், அபூரணமுடைய தொருபொருள் அம்மதத்தாற் பெறப்படும் தெய்வமென்றுவெளிப்பட்டு அது பூர்ணமாகாத பண்பால், தெய்வத்தன்மை கெட்டுச்சேதனங்களி லொன்றுந்தன்மைசித்தித்தல்பெற்றொழியும். உண்மையில், அம் மதத்திற் பெறப்படும் பொருள் பதிப்பொருளல்லாமையால். இந்த விசாரத்தால் பரமபத வாசியாகிய விஷ்ணுவுக்குப் பூர ணம் கூறுவது பொருந்தாமை காண்க. அவர் அகண்டரல்லாது ஏகதேசியேயாகி ஓரிடம்பற்றி வசிக்குமுண்மையால். அணுவே யாந்தன்மையைப்பெற்றுக் கண்டமாகிய தேகமேற்கொண்டிய ங்கலுண்மையால். இன்னஹேயகுணங்கள் பூரணத்தைப் பூரண ஞ்செய்யாமையின், விஷ்ணுவைச் சர்வபரிபூரண ரென்றல் சால் புடைத்தன்று.

வேறு சிலநவீனசமயிகள் கேவலம் அரூபங்கூறுவர். அவர் கூறும் அரூபம் விரூபமேயாம். அவைவேதபாஹ்ய மார்க்கங்களா கையால். அரூபத்தையே முதலெனக்கொண்டமையாலும், ரூபத் தை யங்கீகரியாமையாலும்போந்த குற்றமினைத்தென்பது மேல் விசாரத்தால் வெளிப்படுதல்காண்க. அன்றியும், அரூபமாயிருப்ப தொருபொருளுண்டென்று கொள்வதனல் அச்சமயிகளடையும் பயன்யாது? அவரெப்படியிருப்பாரென்று தியானிப்பது? அவ ரொருவருளரென நினைப்பதே தியானமெனின், பசியுடைய வொருவன் சோறுளெப்படியிருக்குமென்பதுந் தெரியாது அதை மனத்தினினைத்தலென்றல் எவ்வளவுபயன்படும்? அரூபமாயி ருப்பதொருபொருள்யாண்டும் அரூபமேயாதலால்,அவர்உபாசக னுக்குவெளிப்படுமாறெங்ஙனம்? அவர்வெளிப்படாதவரெனின், அவரால் அடையும் பயன்யாது? அவர் வெளியாகாமலேயாவுஞ் செய்வரெனின், அவர்மறைந்து செய்வதற்கு யாதுகாரணம்? அவரொருவருளரென்பதற்குஞ் சான்றென்னை? புகைபால் வன் னியையறிதல்போல் உலகத்தால் அவரிருப்பு வெளிப்படுமெனி ன், புகையை நாடிப்போயினர் வன்னியைக்காணல்போல், உல கத்தை நோக்கி அவரைத்தேடினர் அவரைக்காணுதலமையும். அவர் வியாபகராதலால் வியாத்தியாகுமுயிர் காணுதலேசெய் கிறதெனின், அவ்வியாபகம் பெத்தமுத்திகளிரண்டினு மமைத லுண்மையால், பெத்தத்தைப்போலவே அவர் சாட்சாத்கரியாத

போது பெத்தத்தினும் அம்முத்திக்குண்டாகிய ஆதிக்கம்யாது? இன்னஆபாசங்கள் பலகிடத்தலின்,அவர்கூற்றுஇழுக்கடைந்தொழிந்தமைகாண்க. இனி,ஆன்மவாதிகூறுமரூபமோவெனின், அதுவும்பிழை யுடைத்தாம். ஆன்மா பதிப்பொருளல்லாமையால். அதுஒன்றைப்பற்றியல்லது தனித்து அரூபமாய்நில்லாததன்மையுண்மையால். அவன் கூறுவது பிரமமன்றோவெனின், பிரமம் கேவலம் அரூபமில்லாததும், ஆன்மாவுக்கு வேறானதுமாகலுமுண்மையால், அவன் பிரமமே ஆன்மாவென்னுமிழுக்குடைமைகொண்டு அது செல்லாமைகாண்க. எத்தனைமதத்தர் எங்தெந்தவிதங்கள் சொல்லப்புகினும் சிவபூரணத்தை விளக்கப்போந்த சரித்திர வர்னனங்கள்போல், மற்றைமார்க்கங்களுக்குவேதத்திற் பிரமாணம்வெளிப்படாமைபெருந்தாழ்வென்க.

சிவபெருமானுடைய அருள்வடிவங்கள் மூன்றும் (நங்கருமேனிகழிக்கவந்த கருணையின் வடிவுகாணே) என்றுமேற்காட்டியபடியமைந்தபெருமிதமுடையனவாகலின், அவை மூன்றுமொன்றிலொன்றேற்ற முந்தாழ்வுமுடையனவன்றாம். இதனால், அரூபம் உயர்ந்தது, ரூபம் தாழ்ந்தது என்றுகூறும் பேயர்கூற்றும்பட்டமை காண்க. இம்மூன்றுவடிவங்களும் மாயாசபளிதங்களல்லர்மையால். சிவபெருமான் தமது சிற்சத்தியிற்றிருமேனிகொள்ளுந்தன்மையுண்மையால். மாயையிற் பெறப்படின் உருவத்தைப்போலவே அருவமும்ஹேயப்படுமாதலின்,அன்னவுருவவருவங்களைப்போலாது சத்தியிற்பெறப்படலால், அதிற்பெறப்படும் அருவத்தைப் போலவே உருவமுஞ்சால்புடைத் தெனவறிக. ஆகவே, உருவமொன்றே சிறப்புவகையால் நாமுபாசித்தற் குபகாரமாதல்காண்க. நம்மதிகாரத்துக்கேற்கவே அவர்க்கு உருவங்கூறப்பட்டவுண்மையால்.பொன்னேபூஷணமானகாலத்தும்,நாம் பிரயோசனமாகப்பெற்று அநுபவிப்பது பூஷணமே யன்றிப் பொன்னல்லாததுபோல், நமக்கனுபவவேத்யமாயிருப்பது உருவமேயன்றி அது வெளிப்படுதற்கான மூலமன்றாம். பொன்னை மொத்தையாய் ஒருவன் வைத்திருந்த தன்மாத்திரமே அதன் பிரயோசனம் அவனுக்குச் சித்தித்தல் யாண்டிசையும்? அது பூஷணங்களாய் வெளிப்படாதொழிந்தால். இத்திட்டாந்தத்தைப் பரியாலோசிக்கிலுண்மைவெளிப்படுமென்க. பொன்னே பூஷண

மானகாலத்துப் பொன்னுக்கும் பூஷணத்துக்கும் ஏற்றந்தாழ்வின்மை வெளிப்படலால், சிவபெருமானுடைய சொரூபநிலைக்கும், அவருடைய அருள்வடிவங்களுக்குந் தாரதம்யங்கிடையாதெனவறிக.

இதுகாறுங் கூறியநியாயத்தால் ஸ்ரீமஹா கைலாசத்திலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீபரசிவ மூர்த்திக்கு அவர் சாகாரமாதல்கொண்டு எப்படிப்பூரணஞ் சித்திக்குமென்னு மாசங்கைநிவிர்த்திபெற்றதால், உமாசஹாயத்வாதி லட்சணங்களையுடைய அன்னகைலாசமூர்த்தியே பூரணரென்பது நாட்டப்பட்டது. மேல்விவகாரத்திற்போந்த எல்லாவவசரங்களும் சமநிலைபெற்று விளங்குந் தன்மையுண்மையால். ஆகவே, சைவமார்க்கத்தாற் பெறப்படும் பூரணமே பூரணமெனவும், அப்பூரணப்பொருள் சிவபெருமானொருவரேயெனவும் வெளிப்பட்டமை காண்க.

## பஸ்மாசுர விஜயம்.

சிவன் பூரணராகையில், அவரில்லாதவிடமொன்று மில்லையாக, அவரையன்றிப் பரமாணுவு மசையாதாக, அவர் பஸ்மாசுரன் என்னும் அசுரனுக்குப்பயந்து ஏன் ஓடியோளித்தனர் என்று பாஞ்சராத்திரிகள் வினவுவர். இந்தக்கதையோ வெனின், பஸ்மாசுரனென்பவ னொருவன் சிவனைநோக்கித் தவம்புரிந்து, அவர் வெளிப்பட்ட காலையில், யாருடையதலையில் தன் கைவைத்தபோதிலும் அவர்கள் தலை சிதறும்படியான வரத்தைவேண்டியதாகவும், அப்படியே கொடுக்கப்பெற்று உடனே வரத்தைக் கொடுத்தவர் தலையிலே தானே அவன் கைவைத்துப் பரிக்ஷிக்கத் தொடங்குகையில், அவர் பயந்து ஓடிப்போய்விட்டதாகவும், அப்போது விஷ்ணுமூர்த்தி அங்குவந்து பெண்வடிவந்தாங்கி அவனைமயக்கி நீஸ்நானம்பண்ணிவந்தால் உன்னைப் புணரவிசைவேனென்றுகூறி, அந்த விடத்தில் எங்குஞ்சலமில்லாமற் செய்ததாகவும், அதற்கிசைந்த வந்த வசுரன் சேறு நீருமாய்க்கிடந்த சிறு பள்ளத்திலிரங்கி அந்தச் சேற்றைத் தன் கையால் வாரித் தன் றலைமேல் வைத்த மாத்திரத்தில் அந்தவரம் அவனுக்கே பலித்து உடனே யிறந்தானெனவும் வழங்கிவருகிறது. அந்தக்காலத்தில் விஷ்ணுவால் அவன்சாகாவிடில் சிவன்றலையில் அவன் கை வைப்பானுகையால் சிவன்சாவாரென்பது அவர் துணிபாம்.

இதனைமுறையேமறுத்து விவகரிப்பாம். சிவன்பூரணராகை யால், அவரில்லாத விடமொன்று மில்லையென்பது திண்ணம். அவர் பூரணராகுந் தன்மைஅருபத்தாலென்பது விளங்கும். அப் படியே அவர் ஏகதேசராகுந்தன்மை ரூபத்தாலென்பதும் அமை யும். அருவத்தாற்பூரணராயும், உருவத்தாலேகதேசராயும் விளங் கும் அவரியற்கைத்தன்மை அவ்வருவமும், உருவமுமல்லாமை யால், அவ்விருதன்மையுந் தனது அருள்விலாசமாக வுடைய வன்னோர் பால் இரண்டுதன்மையு மேககாலத்தி லெப்படிநிகழு மென்னுமாசங்கைநிரஸ்தமென்க. அருவம் உலகுயிர்களியங்குதற் பொருட்டும், உருவம்உயிர்க்கு அநுக்கிரகித்தற்பொருட்டுமென் பதுசிவாகமத் துணிபாதலறிக. ஆகவே, அருவத்தாற்பூரணராகிய சிவன் உருவத்தா லேகதேசராகிப் பஸ்மாசுரன் மாட்டுநாடகம் புரிந்தமை அமைதிபெற்றமை காண்க. இனி அவனையன்றி ஓர ணுவும் அசையாதென்பதும் உண்மை! உண்மை!! அதனல், பஸ் மாசுரன் றீயவெண்ணமும், தீயசெய்கையும் சிவனையே பற்றி நிக முமெனின், அவைமாத்திரமேயன்று. எல்லாத்தீமையும் சிவனை யே பற்றி நிகழ்தல் காண்க. எல்லாநன்மையும் பற்றி நிகழுமா போல். நன்மையுந் தீமையுஞ்சிவனையடியாக்கொண்டே சீவிக்கு மெனின், உயிர்களை அவற்றிற் கிலக்காக்குவ தென்னையெனின், அவ்வுண்மையை விரிப்பாம். சுத்தமொன்றையும், அசுத்தமொன் றையுங் காணப்போந்தகண் சூரியனுதவியின்றி அவற்றைத் தா னே காணுதல் யாண்டிசையும்? கதிரொளிகாட்டக் கண்காணு முண்மையால், அக்காட்சிக்குக் கதிரொளியே காரணமென்பது வெளிப்பட்டது. கண்ணொளியோடுகதிரொளிகலந்திருக்குமுண் மையால் கதிரொளிகலவாதகண் தானேயொன்றையுங் காணு ததன்மையால். இனி, சுத்தத்தைக்கண்ட சுகமும், அசுத்தத்தைக் கண்ட சுகமின்மையும், கண்ணுக்கோ கதிரொளிக்கோ வெனின், கண்ணுக்கேயன்றிக் கதிரொளிக்கல்லாமை வெளிப்படலால், நன் மைதீமைகளை நாடு முயிர்கள்பால் நிகழும்யாவும் உயிர்கட்கே யெனவும், அந்நிகழ்ச்சி நங்கருணுசாலியை யன்றி யியங்கப் பெறுவெனவும், அவ்வியக்கம் பற்றியே அவற்றுலுண்டாகுங் குணதோடங்க ளவர்பாற் சாராவெனவும் நிச்சயிக்கப்பட்டது. தீமையை யெண்ணினவன் அசுரன். எண்பித்தவன் சிவன். வரத்

தைக்கேட்டவன் அசுரன். கேட்பித்தவன் சிவன். வரத்தைப் பெற்றவன் அசுரன். பெறுவித்தவன் சிவன். சிவனைத் துரத்தினவன் அசுரன். துரத்துவித்தவன் சிவன் என்னு நிசார்த்தம் வெளிப்படலால், அவரையன்றிப் பஸ்மாசுரன் எப்படி விவகரித்தல் கூடுமென்னு மாசங்கையும் பரிஷ்கரிக்கப் பட்டது. (உடுப்பானும் பாலனமுண்பானு முய்வித்தொருவர் தம்மைக், கெடுப்பானு மேதென்று கேள்விசெய்வானுந் தெதியடங்கக், கொடுப்பானுந் தேகியென் றேற்பானுமேற்கக் கொடாமனின்றே, தடுப்பானுநீயல்லையோ தில்லையாநந்தத்தாண்டவனே) என்னுந் திருவாக்கே யீண்டுச் சிந்திக்கற்பால தென்க. இன்னகல்யாணகுணைகவிக்கிரஹமாகிய நம்பரசிவப் பிரபுவைப் பஸ்மாசுரனோடு சாம்யங் கூறத்தக்க வோர் பசுவாகியவிஷ்ணுமூர்த்தி பிராணபிட்சை தந்தி ரட்சித்தாரென்னும் பேடிவாசகத்தைச் சற்றே பரியாலோசிப்பாம்.

சிவனைக் காப்பாற்றவேண்டி யிரக்கம் வகித்த விஷ்ணு தன் யதார்த்தவடிவத்தால்வந்து அவனைக்கொல்லாமல் பெண்வடிவத்தால் வஞ்சித்ததென்னே? பெண்வடிவமாய் வந்தது தன்றலையில் அவன் கைவைப்பானென்று அஞ்சியேயன்றோ? இதனால், சிவன் வரத்துக்கு விஷ்ணுவும் பயந்தனரென்று பெறப்படுகிற தன்றோ? அவன் விஷ்ணு தலையில் கைவைத்தால் சிவன் வ்ரம்பலியாதென்னின், விஷ்ணுவுக்கே பலியாதபொழுது அவ்வரத்தைக் கொடுத்தவர்க்கு அது எப்படிப்பலிக்கும்? தீவட்டியிலே நின்றுங்கொண்ட தீபம் அத்தீவட்டியைச் சுடுவதெப்படி? விஷ்ணு தன்னுடைய பரத்துவத்தைவிளக்கிச் சிவனைக் காக்கவந்த துண்மையாயின், தன்னுடைய யதார்த்தவடிவமாய் வெளிப்பட்டு அவனுடையகை தன்றலையில்வைக்கப் பெற்றுத் தான் சாகாதவராகிப் பின்னரவனைக் கொல்லவேண்டும். அங்ஙனமின்றிப் பெண்வடிவந்தாங்கி வஞ்சித்தது ஒரு அருமையா? சுந்தோபசுந்தாளிறக்க வஞ்சவேடந்தாங்கிவந்த வோர்பெண்ணி லிந்தவிஷ்ணுவுக்குண்டாகிய ஆதிக்கம் யாது? இன்னும், சிவனைக் காக்கவந்தவிஷ்ணுவை அந்தச்சிவன்புணர்ந்து அரிகரபுத்திரனென்னு மோர்பிள்ளையைத் தந்ததென்னே? விஷ்ணு தன்னுடைய முதலாகிறபோது அவரைச் சுதந்தரமிழந்த பெண்டீராகக் கொண்டு சிவன் ஆண்டதெப்படி? இதனால் சிவன் புருஷனும், விஷ்ணு ஸ்திரீயும் என்

பது பெறப்பட்டது. ஆகவே, அன்னோர் உயர்வுதாழ்வுகள் வெளிப்பட்டமை காண்க.

விஷ்ணுவுக்கு அபகர்ஷம் வந்தால்வரட்டும். சிவன் ஓடியதென்னையெனின், அதனைப்பரிகரிப்பாம். சிவன் ஓடாது நிற்பரேல், அவன் அவருடைய தலையில் கை வைப்பதில் தடையில்லை. அப்படிவைத்தால் அவர் சாகமாட்டார். சாகாதபோது அவர் கொடுத்தவரம் பொய்ப்பட்டொழியும். ஒழியவே, அவர் கொடுக்கிறவரம் பலிக்கிறதில்லையென்னுமோரசங்கதமுலகிலுண்டாம். உண்டாகவே, அவரை ஆச்சிரயிப்பது அவலமென்று கொண்டு உலகமழியும். இன்ன அவதிகளுண்டாமென்பது கொண்டு, எல்லாம் வல்ல கடவுளாகிய சிவபெருமான் பயந்தவராகவோடினர். ஓடுவதெற்றுக்கு? வேறுவகையில் அதை நிவிர்த்திசெய்யலாகாதோவெனின், தாம்கொடுத்தருளிய வரத்தினுறுதியை விளக்கற் பொருட்டெனவறிக. அந்தவரத்துக்குச் சிவ்பெருமானே பயந்தனரெனின், உலகிலதற்கு அஞ்சாதவர் யாருளர்? எனத்தெளிந்து சிவன் கொடுக்கிற வரம் பொய்யா நலத்தது என்று நம்பி உலகம் தம்மை வழிப்படுய்தற் பொருட்டென்னு மூண்மை யினிதுவெளிப்பட்டது. ஆகவே, ஓடினது அருளுடைமையென்பது புலப்பட்டது.

எல்லாந் தாமேயாகிய கடவுள் ஓடவேண்டுமா ? அவன் கையைத் தன்றலையில்வைக்க வருகையில் அவன்கைக்கெட்டாதபடிச் சற்றே நீண்டாலாகாதா ? பிரமவிஷ்ணுக்கள் தம்மையளந்தறியாதபடி ஆடல்கண்டவரிப்பேதைப் பசுவை யாட்டிப்படைப்பது கூடாதா ? வரத்தைப் பெற்றவனுக்கு உண்டாகிற வாதிக்கம் வரத்தைக்கொடுத்தவருக்கில்லாமற்போச்சுதா? அவன் இவர்தலையில் கைவைப்பதன்முன்னர் இவர் அவன்றலையில் கைவைத்தெரித்துவிடக்கூடாதா? எதிர்ப்பட்ட மன்மதன்கதியை அந்தப் பாதகன் அடையும்படிச் செய்வது அவராலாகாதா? முப்புரங்களையுமட்ட புன்னகையென்ன அப்போது ஒளித்திருந்ததா? எல்லாவுலகங்களையும் சர்வசம்ஹாரத்தில் புஸ்மமாக்கியழிப்பான் அவர் நெற்றியினின்றுமெழும் புலிங்கமென்ன தணிந்துபோய் விட்டதா? இத்திறப்பேராற்றலுடைய பெரியோன் உண்மை

யாகவே பயந்தோடின னென்னும் அகங்காரவாதம் நிஷ்புருஹமென்க. இந்தவுண்மையை யறியாது விஷ்ணுகாவாவிடில் சிவன் சாவானென்னும் பேய்க்கூச்சல் காலைவாரிக்கொண்ட தென்க. இன்னும் விரிக்கிற்பெருகும்.

---

## சிவன் நித்தியனென்பது.

நித்தம் என்பது அழிவின்மையென்று பொருள்படும். அழிவின்மை யென்னுங்கால், யாருடைய அழிவின்மையென வினா நிகழும். சிவனுடைய அழிவின்மையென விடைவரு மாதலால் அது எப்படியென்பதைச் சற்றே பரியாலோசிப்பாம். தேகம் உண்டாதலும், நிலைபெற்றிருத்தலும், அழிந்துபோதலுமாகிய வநுபவத்தினால் பௌதிகமாகிய வதனைநோக்கப் பூதமாகிய உலகம் உண்டாதலும், நிலைபெற்றிருத்தலும், அழிந்து போதலு மாகிய தன்மை வெளிப்படும். இத்தொழிற் பாட்டைப் பெற்றியங்கும் பொருளைநோக்கின், அதுகேவலம் சடமாதல்திண்ணம். சடமாகவே, தானேயியங்குந்தன்மையொழிந்தது. ஒழியவே, இத்தொழிற்பாட்டை அதன்பாலிகழ்த்திய சித்துப்பொருளொன்றுளதாக நிச்சயிக்கப்பட்டது. அச்சித்துப்பொருள்யாது? ஆன்மாவன்றோவெனின், அன்றாம். அதுசித்துப் பொருளாயின், தேகமாகிய சிறையிற்பட்டு நினைப்பு மறப்புகளாகிய சகலகேவலத் தன்மையெய்த வேண்டியதின்றாம். கேவலத்திற் கேவலஞ் சடமாகவே கிடத்தலால், அது சித்துப்பொருளாத லிழுக்காம். ஆகவே, இவ்விழுக்குடைமையொழிந்த வேறுபொருள் சித்தாதலமையும். அதுவே சிவமென்னும் பெயர்த்தாம். இதனால், அசித்தாகிய உலகந் தொழிற்படுவது சித்தாகிய சிவத்தினாலன்றிச் சித்தும், அசித்துமல்லாதஆன்மாவா லன்றென்பதுவெளிப்பட்டது. இந்தவுண்மையால், சிவம் சகல கேவலங்களிற்றோயாத நின்மலப் பொருளென்பதும் நிச்சயிக்கப்பட்டது. இந்தவிசாரத்தால் சித்து ஒன்று, அசித்துஒன்று, சித்தும் அசித்துமல்லாததொன்று ஆகிய மூன்று பொருள்கள் வெளிப்படலால், இவற்றின் றன்மையை யின்னும் பரியாலோசிப்பாம்.

என்றுசிவமுண்டு, அன்றே அதன்குணமாகிய அருளுண்டு. என்றுஅருளுண்டு, அன்றே அவ்வருளைப்பெறுதற்கான ஆன்மாவுண்டு. என்றுஆன்மாவுண்டு, அன்றேஅவ்வருள் பதிந்தாலொழியத்தக்கமலமுண்டு. எங்ஙனமெனின், என்றுகதிருண்டு, அன்றே அதன்குணமாகியவொளியுண்டு. என்றுஒளியுண்டு, அன்றே அவ்வொளியைப்பெறுதற்கானகண்ணுண்டு. என்றுகண்ணுண்டு, அன்றே அவ்வொளிபதிந்தாலொழியத்தக்கவிருளுண்டுஎன்னுமுவமானத்தாற்காண்க. கதிருக்கு ஒளியின் பிரயோசனம் தன்பொருட்டோ, கண்ணின்பொருட்டோவெனின், கதிர்ஒருபொருளையுஞ்சுட்டியறியாத ஸ்வயம்பிரகாசப்பொருளாகுமுண்மையால், தன்பொருட்டென்றல்பழுதாம். பின்னர்அதன்பிரகாசம் கண்ணுக்கே பிரயோசனமாதல் வெளிப்படலால், அதுபரப்பிரயோசனமென்பது பெறப்பட்டது. கதிரினிடத்துண்டாகிய வொளி பரப்பிரயோசனமாகு முண்மையால், அக்கதிருக்குவேறாகிய கண்ணொன்று அதனைநுகர்வதற் குளதென்பது வெளிப்பட்டது. கதிரைப்போல் கண்ணும்பிரகாச மானமாய் விளங்குவதொன்றாயின், கதிர்பிரகாசத்தைத் தரவும், கண் அதனைப்பெறவும் இடம்பெறாதென வறிக. கண் இருளாலாவரிக்கப்பட்டு அதுவாயொழிதலால், அது கதிரினொளியைப் பெற்றியங்குந்தன்மை வெளிப்பட்டது. இதனால், இருளொன்று அவ்விரண்டுக்கும் வேறாயுள்ளதன்மையும் வெளிப்பட்டது. இப்படியேசிவத்திற்கு அருளின்பிரயோசனம் தன்பொருட்டோ, ஆன்மாவின் பொருட்டோவெனின், சிவம் விருப்புவெறுப்பின்றி ஸ்வயம் பிரகாசமானமாய் விளங்குமுண்மையால், அதன்பொருட்டென்றல்பழுதாம். பின்னரதன்பானிகழுந்திருவருள் ஆன்மாவின் பிரயோசனமாதல் வெளிப்படலால், அது பரப்பிரயோசனமென்பது பெறப்பட்டது. சிவத்தினிடத்துண்டாகிய அருள் பரப்பிரயோசனமாகு முண்மையால், அச்சிவத்துக்குவேறாகிய ஆன்மா அதனை யநுபவித்தற்குரிய தென வெளிப்பட்டது. சிவனைப்போல் ஆன்மாவும் பிரகாசமானமாய் விளங்குவ தொன்றாயின், சிவன் அருளைத்தரவும், ஆன்மாஅதனைப்பெறவும்இடம்பெறாதெனவறிக. ஆன்மா மலத்தாற்பந்திக்கப்பட்டு அதுவாயொழிதலால், அதுசிவத்தி னருளைப் பெற்றியங்குந்தன்மைவெளிப்பட்டது. இதனால் மலமொன்றுஅவ்விரண்

டுக்கும் வேறுயுள்ள தன்மையும் வெளிப்பட்டது. இன்னநியாயத்தால், இருளோடுசேர்ந்தால் இருளாயும், ஒளியோடு சேர்ந்தால் ஒளியாயும்விளங்குங் கண்ணைப்போலச் சித்தோடு சேர்ந்தால்சித்தாயும், அசித்தோடுசேர்ந்தால் அசித்தாயுங் காணப்படுந் தன்மையால், ஆன்மாவைச் சித்தசித்து என்று சிவாகமங்கூறும். சதசத்தென்று கூறுவதுமாம். இதனையிடம்வந்துழிவிரிப்பாம். கண்ணுக்கு அடுத்ததன்வண்ணமாகுந் தன்மை யுண்மையால், அதுவே, அதற்குச் சொந்தப்பிரகாசமாம். கண்ணுக்கெனவோர் பிரகாசமின்றெனின், கண்ணொளியில்லான் மாட்டுக் கதிரொளி பயன்படாமையால் கண்ணுக்கு ஒளியுண்டென நாட்டப்பட்டது. அவ்வொளி கதிரொளியை நோக்க அப்பிரகாசமாதல் காண்க. இது முறையே ஆன்மப்பிரகாசத்துக்கு உவமிக்கப்படுந் தன்மை யுய்த்துணர்க.

இந்தவிசாரத்தால், பதிபசுபாசம் என்னும்மூன்று பதார்த்தங்களும்நித்தப்பொருள்களாய்முடிந்தன. மேல்உலகத்தைஅசித்தெனக்கூறிப் பின்னர் அவ்வசித்து ஸ்தானத்தில் உலகம் என்று வழங்காதுமலம்என்றுவழங்கிவருமாற்றால்உலகமென்பதுதானே மலம்எனின், மலம்மூன்றாகக் கூறப்பட்டதில் மாயையென்னும் மலத்தின்காரியமே பிரபஞ்சமாகையால் விரோதமின்மைகாண்க. இதன்விரிவு பின்பகுதிகளில் வரும்.

சிவனை நித்தியமொன்று கூறத்தொடங்கிப் பாசபசுக்களும் நித்தியப் பொருள்களெனக் கூறியது பிழையாமெனின், இது ஏகான்மவாதிகள்கூற்றாம். சிவனொருவரேநித்தியமொன்னுமிடத்து அவருக்கு வேறுயுள்ள பொருள்கள் அநித்தமுடையன வென்று கொள்ளவரும். அநித்தமென்பது இருந்துகொண்டே யிருப்பது இல்லாமற்போய்விடுமொரு தன்மையாம். இருந்ததொருபொருளில்லாமற்சூனியமாய் விடுமேல், அதுஎன்றிருந்து? என்று இல்லாமற்சூனியமாய் விட்டது? என்றெழும் வினாக்களுக்குச் சமாதானம்பிறப்பது கஷ்டமாம். ஓர்காலத்திலிருந்த பொருளெனின், முன்னில்லாததொருபொருளோர்காலத்தி லுண்டாகாமையால் ஓர்காலத்திலிருந்தபொருளென்றது பிழையாம். முன்னில்லாதது பின்னுள்ளதாகா தென்னுந் தருக்கத்தால். உள்ளது உள்ளதே! இல்லது இல்லதே! என்றபடி ஓர்காலத்திலிருந்தபொருள் அதற்கு

முன்னும் பின்னும் உள்ளதேயாம். ஆகவே, அது ஓர்காலத்தில் கெடும் என்றுகூறுஞ் சூனியவாதம் நிரஸ்தமென்க. "உள்ளது போகாது. இல்லதுவாராது. என்றதில் உள்ளபொருள் போகாத நியாயம் வெளிப்பட்டமையால், இனி இல்லாதபொருள் வாரா தென்பதைப் பரியாலோசிப்பாம்.

சிவமொன்றே நித்தம். வேறுபொருள் கிடையாதெனின், சரம் அசரம் என்னும் பிரபஞ்சம் உண்டானவிதமெப்படி? சிவத் துக்குவேருகமற்ெருருபொருள் கிடையாதபோது ஏகமாகியஅச் சிவத்தோடுமுன்னில்லாத பிரபஞ்சம் எங்கேநின்றும்முளைத்தது? இல்லாதமுயற்கோடு தோன்றிற்றென்பதெப்படி? (ஏகாானெனவி யம்பியிப்படியறிந்து முத்தியடைமின்னெனும், மோகமானவுரைகொம்புமுன் ெருடுமுடிந்திடாது மலடாகிய, காகமானதுகருங்கலின் றசைபறித்தமுங்கரிய குஞ்சியின், முகமாபசிதவிர்க்கவாயிடைகொடுத்ததென்றுரைசெய்தன்மையே) என்னுந் திருவாக்குக் கெங்கே சமாதானந் தேடுவது? இல்லது இல்லதேயாக, சகசீவர்கள் உள்ளதன்மையாது? உள்ளது சிவம் உள்ளதே! இல்லதுசகம் இல்லதே! உள்ளதாகக்கூறுதல் பிரா ந்தி மாத்திரமென்பர். பிராந்தியென்ற லென்னே? அப்பிராந்தி யாருக்கு? ஏகமாகிய வச்சித்தன்றி வேறுபொருளில்லாமையால். பிராந்தியெங்கே நின்றும்பிறந்தது? முன்னில்லாத பிராந்திபின் பிறந்ததெப்படி? சகசீவர்கள் பிரத்யட்சமா யுள்ளது முள்ளவரு மாக, அவர்கள் முன்னில்பொருள்களாத விழுக்காம். முன்னிருந் தமையால், இப்போதும், பின்னும், எப்போது மிருத்தல்சத்தி யம்! சத்தியம்!! ஆகவே, அநாதிநித்தப்பொருள்களாயின. வேறெ ருசாரார், பிராந்திஞானத்திலொழியாது, சகசீவர்கள்இடையில்ஓ ர்காரணத்திலே நின்றுந்தோன்றினபொருள்களென்பர். சிவத்தை யன்றிவேறுபொருள் இவைகாரியப்படுதற்கில்லாமையால், உலகு யிர்கள் சிவத்திற்காரியப் பட்டனவாகநிச்சயிக்கப்படும். அங்ஙனங் கொள்ளுங்கால், சிவம்காரணமும், தோன்றினவை காரியமுமாத லமையும். ஆகவே, அச்சிவம் உபாதானமாகி அவ்வுபாதானத்திற் பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துதற்கு நிமித்தப்பொருளொன்று விரும்பவரும். தானே நிமித்தமு மாச்சுதெனின், காரணமாகிய சிவத்திற் காரியப்படும் உலகுயிர்கள் அச்சிவத்தைப் போலவே சித்தாயிருத்தல் வேண்டும். உலகம்சடமும், உயிர்கள்சிற்றறிவுஞ்

சிறுதொழிலு முடைமையால் காரணகாரியவிரோத சம்பவமுண்டாம். இன்ன பலவிரோதங்க ளுளவாகு முண்மையால், இல்லாத சகசீவர்கள் உண்டானமை அசப்பியமாதல்காண்க. இவ்வுண்மை விசாரத்தால், உலகுயிர்கள் என்று மநித்தத்தையடையாத நித்தப்பொருள்களென்பது நிச்சயிக்கப்பட்டது.

மேல்விசாரத்தால் நித்தப் பொருள்கள் மூன்றுண்டென வெளிப்பட்டமையால், சிவனொருவரோ நித்தியரென்ப தெங்ஙன மிசையுமெனின், அதனை விரித்துரைப்பாம். மூன்றுபொருள்கள் நித்தியமாயினும், ஒன்று மலமில்லாததும், ஒன்று மலமுடையதும், மற்றொன்று அம்மலமுமே யாகையால், இம்மூன்றில், மலமில்லாமையால் சிவம் ஒருவிகாரத்தையும் அடையாது. மலமுடைமையால் ஆன்மா பிறப்பிறப்புகளாகிய விகாரங்களையடைந்துமெலியும். மலமேயாகையால் மலம்சடத்துவத்தால் தன்னிற் காரியங்கடோன்றுவதற்கான வுபாதனமாய் விகாரத்தையடையும். இதனால், சிவனொருவரோ யெந்தவிகாரத்தையும் அடையாது ஒரேதன்மையரா யிருக்குமுண்மையால், நித்தியரென்னப்படுவர். ஆன்மா பலயோனிகளிற்புக்குத் தன் சொரூபந் தோன்றுதவழியுழன்றுவருதலால், சங்மத்திரிவுகளைநோக்கிஅநித்தமுடையவெனக்கூறப்படும். மலம் காரியப்பாட்டால் சொரூபம் மாறிக்கொண்டே வருந் தன்மையால் அநித்த மென்னப்படும். ஆகவே, அநித்தமென்பது உருவுதிரிந்துதோன்றுத தன்மையைக் காட்டப்போந்த தொன்றுமன்றி முதலுக்கே மோசங்கூறு மூடர் கூற்றின் முடிபொருளாகா தென்வறிக.

இந்த விசாரத்தால் பதிபசுபாசமாகிய மூன்றும் அநாதிநித்தப்பொருள்களாய், என்றும் அழியாதனவாயுள்ளனவென்றும், அவற்றுள் பாசபசுக்கள் விகாரத்தையடைந்துவருவதால், அவ்விகாரத்தை யெய்தாத பதியை நோக்க அநித்தமுடையனவாகக் கூறப்படு மென்றும், பதி அவிகாரியும், நின்மலருமாகுந் தன்மை யுண்மையால், அவரொருவரே நித்தியப்பொருளாதல் சாதிக்கப்படுமென்றும் வெளிப்பட்டமை காண்க.

(எல்லார்பிறப்பு மிறப்புமியற்பாவலர்தஞ், சொல்லாற்றெளிந்தேம்நஞ் சோணேச,ரில்லிற்,பிறந்தகதையுங்கேளேம்பேருலகில்வாழ்ந்துண்,டிறந்தகதையுங்கேட்டிலேம்) என்னுந் திருவாக்கால் சிவபெருமான் பிறந்தார்,

இறந்தார் என்னும் அமங்கலமான்மியம் எந்தநூல்களினுங் கூறப்
பட்டதில்லையென்றுபெறப்பட்டது. உயிர்கள் தனுவாதிகளைப்பெ
ற்று உலகிற்பிறப்பதும், பிறந்தவாறேசாவதும், மீண்டும்பிறப்பது
மாகியதன்மையெய்தல் மலம்பரிபாகமாதற்பொருட்டேயாக,அங்
ஙனம் பிறந்திறந்துழலு மொவ்வொருவரும் என்பசுக்களாக
மாட்டார்கள் ? எங்கேபிறப்புண்டு, அங்கேயிறப்புண்டு. எங்கே
அவ்விரண்டுமுண்டு, அங்கேமலமுண்டு. எங்கேமலமுண்டு, அங்
கேபசுத்வமுண்டு., ஆக வின்னதன்மை யெம்பரசிவ னிடத்திற்
காணப்படாத வுண்மையால் அவரொருவரோ பதிப்பொருளாகிய
நித்தியராதல் காண்க. “నతస్యకశ్చిత్పతిరస్తిలోకే నచేశితానైవచతస్యలిఙ్గం। న
కారణంకారణానామధీశో నతస్యకశ్చి జ్జనితానచాధిపః” என்னும் சுவேதா
சுவதரவசனத்தால், அந்த வுருத்திரமூர்த்திக்குப் பிரபுவானவ
னும், ரக்ஷகனும் லோகத்தி லொருவருமில்லை யெனவும், அவ
ருக்கு ஜந்மஸ்தானமும், காரணமு மில்லையெனவும், அவர்கார
ணங்களுக் கெல்லாம் பிரபுவானவரெனவும், அவர்க்குஉற்பத்தி
காரணமானவர்க ளொருவருமில்லையெனவும், அவர் ஆகாசாதி
பதி யெனவும் பெறப்பட்டது. இந்தவாக்கியத்தைப் பரியாலோ
சிக்கில், அவர் தமக்குமேலொருபிரபு வில்லாதவரென்பது கொ
ண்டு தாமொருவராளுகையி லில்லாதவரெனவும், அவர் தமக்கு
மேலொரு ரக்ஷகரில்லாதவ ரென்பது கொண்டு தாமொருவ ரிர
க்ஷகத்தை யெதிர்பார்க்க வேண்டிய குறைவு தம்பாலொன்று
மில்லாதவரெனவும், அவர் தமக்கு ஜந்மஸ்தான மில்லாதவ
ரென்பது கொண்டு பிறப்புக் கேதுவாகிய மலமொன்றுந் தம்பா
னிகழப் பெறுதவரெனவும், தானமில்லாதவ ரென்பதனல் ஓர்
காலத்திலு மெந்தவிடத்திலும் பிறந்தேயறியாதவ ரெனவும், கா
ரணமில்லாதவ ரென்பது கொண்டு நிமித்தம், உபாதானம், சஹ
காரியென்னுங் காரணத்திரயங்களில் அவர் திருமேனியுண்டா
தற்கு மாயையுபாதானமல்லாதொழிந்தமையாலும், உபாதானம்
வேண்டாதபோது அதுகாரியப்படுந்தானமாகிய நிமித்தமும்,காரி
யத்தைச்செய்யுஞ் சஹகாரியும் அதற்கு முன்னமே யொழிந்
தமையாலும், எவ்விதகாரணங்களுந் தம்பா லெய்தப்பெறுதவ
ரெனவும், அவர்காரணங்களுக் கெல்லாம் பிரபுவானவரென்பது
கொண்டு மூவிதகாரணங்களுந் தம்பாற்றெழிற்பாடுபெறவிசைந்

தவனெனவும், அவர்க்கு உற்பத்தி காரணமானவர்களொருவரு மில்லையென்பது கொண்டு அவரின்னொரிடத்தினின்றும் பிறந்தா ரென்னுங் தோடமெய்தாதவனெனவும், அவர் ஆகாசாதிபதியென் பதுகொண்டு ஆகாசத்தைப்போல் யாவும் தம்மிலடங்கப்பெற்று அவை சீவிக்க விடங் கொடுத்திருப்பவனெனவும், அல்லது ஒன் றிலுந்தாக்கற்று நிராலம்பமாத்திரமா யிருப்பவனெனவும் வெளிப் பட்டமைகாண்க.

இதற்கு முறையே பொருள் கொள்ளுங் கால் தம்முடைய ஆளுகையில் யாவரையுமுடையவனெனவும், எல்லாவுயிர்களையுந் தாமேரக்ஷிக்கின்றவனெனவும், யாவும் பிறப்பதற்குத்தாமே ஜந்ம ஸ்தானமாயிருப்பவனெனவும், சமஸ்தமாயுள்ள சராசரங்களுந் தம்மிடத்திலேதானே பிறக்கக் காண்கின்றவனெனவும், காரணத் திரயங்களுந் தம்மிடத்திலேதானே சீவித்து நிற்கச் செய்கின்ற வனெனவும், மூவிதகாரணங்களுக்குந் தாமே கர்த்தாவாயிருப்ப வனெனவும், யாவருந் தம்மையன்றிச்சநிப்பதற்கிடம் பெறுத தாரகமாத்திரமா யுள்ளவ னெனவும், இவையிற்றையுடன்கொண் டியங்குதல் செய்து மொன்றுஞ் செய்யாதவனெனவும் பிரகாசப் படுதல்காண்க.

இவ் வுண்மையை அறியாதபாஞ்சராத்திரிகள் நாராய்ண னே பரமென்று வியாசபகவான் பிரமாணித் துரைத்தமையால், அப்பரம் பொருளாகிய விஷ்ணுவே நித்தியராதல் சாலுமென்பர். அவர் மயக்கந்தெளியும் பொருட்டுப் பின்வரும் வாக்கியத்தைச் சிந்திப்பாராக.

---

## வியாசபுஜஸ்தம்பநம்.

மறைமுழுதும் வகுத்துணர்ந்த வாதராயணமுனிவன் மதிமாழாந்து
நிறையகிலநாதனெதிர் நாரணனே பிரமமென நிசழ்த்தலோடு
மறைதருமவ்வகிலேசன் முன்புநாட்டிய சயத்தூணவனேயாக
முறைநிறுவியருள்கொழிக்குநந்திபிரானடிக்கமல முடிக்கொள்வாமே.

இ-ள். எல்லா வேதங்களையும் வரம்பிறபடுத்து ஒருவரிட த்தன்றித் தாமே யுணர்ந்தவராகிய வாதராயண னென்னும்

பெயரையுடைய வியாதமுனிவர் அவத்தைவயத்தா னறிவுகலங்கிப் பூரணகர்த்தாவாகிய விசுவநாதர் திருமுன்னர் நாராயணனே பரமபதியென்று கூறுதலும், மேல் பூரணகர்த்தாவாகச் சொல்லப்பட்ட விசுவநாதர்சந்நிதிக்கு முன்பாக நாட்டியுள்ளதாகிய வெற்றிக்கொடித்தம்பம் அவ்வியாதனேயாம்படி அவனைத்தமது ஆணையானிறுத்திப் பேரருள் புரிந்தவராகிய நந்திதேவருடைய ஸ்ரீபாத கமலங்களை யெமது முடியிற்குஞ்சிப் பூவெனக் கொள்ளா நிற்பாம். எ-று.

ப-ம்.—வேதங்கள் நான்கேயன்றி அநந்தமென்பது அவ்வேதத்திற்முனே பெறப்படுதலால் மறைமுழுதும் என்று கூறினர். "అనంతా వై వేదాః" என்பது சுருதிப்பிரமாணம்.

அநந்தமாயுள்ள வேதங்களை யுணர்வது அநந்தமாகியகாலத்தை யாச்சிரயித்துக் காலம் முடிவு பெறாத வுண்மையால் வேதமுமன்னதேயாய் முடியும். பரிமிதத்தானுணர்தற் பாலனவல்லாத வேதமடங்கலுந் தமது தெய்வத்தன்மையா லொருங்குணாந்தமையால் வகுத்து என்று கூறினர். தெய்வத்தன்மை யென்பது விஷ்ணுவினுடைய அவதாரமாதல் பற்றியென்க.

"స హోవాచ వ్యాసః పారాశర్యః" எனவேதத்திற் புகழப்படுந்தன்மையுண்மையால், உணர்ந்து என்பதற்குத் தாமே யுணர்ந்து என்றுபொருள் கொள்ளப்பட்டது.

சாட்சாத்விஷ்ணுவேயாயினும், மறைந்து வியாசரூபங்கொண்டமையால், அவ்வுண்மைதோன்ற வியாதமுனிவ ரொன்னுதும்மறைசொல்லாய் வாதராயணரொன்று கூறினர்.

விஷ்ணுவே வியாதமுனிவராயினும், அவத்தை வயத்தானழுங்குமோர் பசுவென்பது தோன்ற மதிமாழாந்துஎன்றுகூறினர். வியாதர் பசுவானபோது அவர்க்கு மூலமாகிய விஷ்ணுவும் பசுவென்பதுதானே போதரும். "బ్రహ్మవిష్ణుసురేన్ద్రాద్యాః పశవః పరికీర్తితాః" என்னும் பிரமாணத்தால் பிரம னிந்திரன் முதலியவர்களோடு விஷ்ணுவு மோர்பசுவென்பது வெளிப்பட்டது. பசுத்துவமுள்ள விஷ்ணுவைத் தெய்வத்தன்மையுள்ளவராக மேற்கூறிய தென்னையெனின், சிவபெருமானை வழிபட்டு அவருடைய அதிகாரசத்

திக்ளிற் பரிபாலனசத்தி தம்மிடம் பதியப்பெற்றுக் கொண்டத ஞலென்க. எனவே, அத்தெய்வத்தன்மை * ஆகந்துகமெனக் கொள்ளப்பட்டது.

"వ్యాసరూపమహంకృత్వానుగృహ్ణామియుగేయుగే
చతుర్లక్షప్రమాణేన ద్వాపరేద్వాపరేతథా
తథాష్టాదశదాకృత్వా భూలోకేస్మిన్ప్రకాశ్యతే
అద్యాపిదేవలోకేతచ్ఛతకోటిప్రవిస్తరం"

என்னும் மச்சபுராண வாக்கியத்தால் வியாசரூபியாய்ப் பிரதி துவாபரயுகங்களினும் சதுர்லட்சப் பிரமாணங்களால்புரா ணங்களைச் சங்கிரகித்து அஷ்டாதசவிதமாய்ப்பூமியிற்பிரகாசிக்கச் செய்கின்றேனெனவும், இப்போதுந்தேவலோகத்தில் சதகோடி விஸ்தாரமாய்க் கிடக்கின்றனவெனவும், விஷ்ணுவால் சொல்லப் பட்டவுண்மை வெளியானதால், விஷ்ணுவே வியாசனென்பது துணியப்பட்டது. இன்னும் புராணங்கள் பதினெட்டேயன்றிச் சதகோடி விஸ்தாரமாய்க் கிடக்கின்றனவென்னு முண்மையால் புராணத்தின் முதனூலாகிய வேதம் அநந்த மென்று மேற் கூறினதுந் தெள்ளிதின் விளங்கற்பாலதாயிற்று.

விசுவத்தையாளுந் தன்மையொன்றினுனே வந்தவோர் பே ரென மயங்காதவழி வியாபகத்தன்மையானு மமைந்த வுண்மை தோன்ற நிறையகிலநாதனென்று கூறினர்.

விசுவநாதனென்னுந் திருப்பெயருடைமையால், அம்மூர்த் திக்குரிய காசியென்னு மிடந்தோன்ற எதிர் என்று கூறினர்.

மண்முதனுதை மீருகிய தத்துவங்கள் தாமேயாகியும், கடந்து மொப்புவமையின்றி விளங்குமெய்ப்பதிக் கெதிரில் பரத்துவங் கூறப்போந்த வேற்றுப்பொருளின் சிறுமைதோன்ற நாரணனே பிரமமென நிகழ்த்தலோடு மென்றுகூறினர். நாரணன் என்பது சலார்நவத்திற் கிடக்கு மொருவனென்று பொருள்படும். சலார் நவமெனவே, பிருதிவி கழிந்த விரண்டாவது தத்துவாதிக்கம் பெறப்படும். அதற்குமேலுந் தத்துவங்களுளவாகவி னவற்றை

* ஆகந்துகம்=இடையில் வந்தேறியது. எனவே, இயற்கையிலில்லாதது என்பது வெளிப்படை.

நோக்குழி யவ்வவற்றிற்குரிய தெய்வங்களின் முன்னர்ச் சலார் நவதேவதை தலை யெடுப்பது பரியாசமாய் முடியும். சலம் தீயிற் சுவறுகையால். சலத்துக்காதிக்கம் வந்துழி மண்ணு மதனதிட் டான தெய்வமுங் கெடுமாபோல், தீக்காதிக்கம்வந்துழிச் சலமு மதனதிட்டான தெய்வமுங்கெடும். மேல்தீயுங்காற்று மாகாயமு மாகிய பூதங்களும், அவ்வவற்றிற்குரிய தெய்வங்களு மொன்றி னொன்றேற்ற முடையனவாய் வெளிப்படுமொற்றால், சலமாகிய தானம் அபாவத்தை யடைந்தபோது அதனோடு நாசத்தை யடைகிற தேவதையைப் பரம்பொருளாக மதித்தல் பேதமை யிற் பேதமையென்க. ஆயின், வேதத்தில் நாராயணனே பரம் பொருளென்று கூறப்பட்டமையென்னை யெனின், அந்தவேதத் திற்றானே சந்திரன், இந்திரன் பிரமன் முதலியவர்களும் பரம் பொருள்களாகக் கூறப்படுதலின் அமைவுடைத்தன்றாம். அப் படிக்கூறுவ தென்னை யெனின், அவரவர்களுக்குக் கீழிட்டவர் களை நோக்கியென்க. சந்திரனிந்திரன் முதலியவர்களை நோக்கப் பிரமனுக் காதிக்கமும், பிரமனைநோக்க விண்டுவுக்காதிக்கமு முளவாகு முண்மையால். அன்றியுமன்னோர் சிவபெருமானு டைய தனுவாகுந் தன்மையால். "అహంహిసర్వహవిషాంభోక్తాచైవఫల ప్రదః। సర్వదేవతనుర్భూత్వా సర్వాత్మాసర్వసంస్థితః" என்னுங் கூர்மபுராண வாக்கியத்தால் சர்வகதனாகியும், சர்வசொரூபியாகியும், அக்னி சோமேந்திர விஷ்ணுவாதி சர்வதேவ தநூர்ப்பூதனாகியும், சர்வ முக்கிய ஹவிர்த் திரவியங்களுக்கும் போக்தாவாய் நானேபலப் பிரதாதாவாகின்றே னென்று சிவபெருமான் கூறியவுண்மை வெளிப்பட்டதால், சமஸ்ததேவர்களுஞ் சிவனுடையதனுவாதல் பெறப்பட்டது. இதனால், சிவபெரு மானுக்கெதிரில் நார ணனைப் பிரமமெனக்கூறல் அசப்பியமாயிற்றென்க. "సత్యంసత్యంపు నస్సత్యం నదైవంకేశవాత్పరం" என்னும் வாக்கியமே யாண்டுவியாதர் கூறிப்பிரமாணித்த துண்மையாக, ஈண்டுநாரணனே பிரமமெனக் கூறல்யாண்டமையு மெனின், விஷ்ணுவுக்குரிய கேசவாதிபன் னிரண்டுநாமங்களில் நாராயணனென்பது, மூலமந்திரமும் பரி பரியாயபதமுமாதல் பற்றியென்க. கேசவன் என்பதற்குப் பிரம னையுமீசனையுந் தன்னிடத்திற் பெற்றவன் என்றுபாஞ்சராத்திரி கள்பொருள்கூறுவர். பிரமனைத்தானே பெறறதுண்டாயின், அப்

பிரமனுடைய தலை சிவபெருமானாற் கழிந்ததை மீண்டுமேன் உண்டாக்கிக்கொடுத்திலர்? சிவனைப்பெற்றதுண்டாயின், அச்சிவனிடம் கைலைக்குச்சென்று பிள்ளைவரம் வேண்டியேன்யாசித்தனர்? பிருதிவி அப்புத் தேயுக்களில் பிருதிவி அப்புவினும், அப்பு தேயுவினும் உதித்து மொடுங்கியும் வருதல் சகசம். அவற்றின திட்டான தெய்வங்களில் முறையேபிரமன் விஷ்ணுவினிடத்தும், விஷ்ணு வுருத்திரனிடத்துந்தோன்றியும், ஒடுங்கியும் வருதல் சகசம். தேயு அப்புவிற் பிறப்பினன்றே விஷ்ணுவினிடம் சிவன் பிறத்தல்கூடும்? அப்படியே தேயு பிருதிவியிற் பிறப்பினன்றே பிரமனிடஞ் சிவன்பிறத்தல் கூடும்? திரிமூர்த்திகளி லொருவராகிய வுருத்திர மூர்த்தியே பிரமவிஷ்ணுக்களிடம் பிறத்தல் செல்லாமையின், துரியமூர்த்தியாகிய பரமசிவம் பிரமவிஷ்ணுவாதி பசுக்களிடம் பிறந்தாரென்பது சர்வாபத்தமென்க. உண்மையில், கேசவன் என்பதற்குப்பொருளை விசாரிக்குங்கால், சவத்தைத் தலையிலுடையவன்என்றுவெளிப்படும். தக்கனுடையயாகத்தில் சிவாபராதத்தா லிறந்த தெய்வப் பிணவுடல்களை விஷ்ணுவினுடைய தலையிலேற்றி அவனைநாகபாசத்தாற்பிணித்து அந்தயாககுண்டத்தைச் சுற்றிவரும்படி வீரபத்திரர் தண்டித்த மான்மியம் பைப்பலாதம், காந்தமுதலியவற்றிற் கூறப்பட்டமை காண்க.

விசுவநாத ரென்னுஞ் சொல்லானே பூரணகர்த்தா வாந்தன்மை பெறப்படுமுண்மை தோன்ற அறைதருமென்றுகூறினர்.

பிரமாணஞ்செய்யும் பொருட்டணுகிய வியாதமுனிவருக்குச் * சேய்மைப் பட்டவராகு முண்மைதோன்ற அவ்வகிலேசனென்றுகூறினர், இன்னும்விசுநாத ரென்பதற்கு மேலிடத்தில் அகிலநாதரென்படி அவர்க்கே விசுவேச ரென்னும் பேருண்டென்பதைவிளக்கும் பொருட்டே அவ்வகிலேச ரென்றுரெனி னுமமையும். சேய்மைப்பட்ட வரப்படியே யாகாதபடி அவருக் † கண்மையராய்த் துசத்தம்பமாகி வியாதமுனிவர்நிற்றல்தோன்ற முன்பு என்றுகூறினர்.

---

* சேய்மை—தூரம்.

† அண்மை—சமீபம்.

நேர்ந்தவிவாதம் பரிஷ்காரப்பட்டு வேறு ஆசங்கைக்கிடம் பெருமைதோன்ற நாட்டியவென்று கூறினர். எங்ஙனம் பரிஷ்கரிக்கப்பட்டதெனின், விளம்புதும். வியாதமுனிவர்பால்வேதங்களையும், புராணங்களையும், பிறகலைகளையு முணர்ந்தமுனிவர்கள், அவற்றூற்றெளிவுபெறுராகியோர்பகல்வியாதரையடைந்து தேவரீரிடங்கேட்டவுபதேசங்களாலெமக்குச்சந்தேகமே அதிகரிக்கின்றது. ஆகையால், நான்முகமா யெங்களுக்குப தேசித்தலொழிந்து தேவரீருடையவுள்ளத்துண்மைப் பொருளாகத் தெளிந்திருக்கும் பரமபதி யாவான் இவன் என்று பிரமாணித்துக் கூறல்வேண்டுமென்று கேட்டனர். அப்போது வியாதமுனிவர் அவர்களை நோக்கி நாராயணனே பரமபதியென்று பிரமாணித்துக்கூறினர். அவர்கள் வியாதரைநோக்கித் தேவரீர் காசியில்விசுவநாதர் சந்நிதியின்கண்வந்து இவ்வாறு சொல்லவேண்டு மென்றுகேட்டனர். அதற்கிசைந்து, அப்படியே சிவசந்நிதியில்நின்றுகொண்டு இரண்டுகைகளையு முயரவெடுத்து நாராயணனே பரம் என்று கூறினர். உடனே யிரண்டு கரங்களுந் தம்பித்துத் தம்பமாய்நின்றனர். அப்போது நந்திபகவான் வெளிப்பட்டுத் தம்பித்துநின்ற வவருடைய விரண்டுகரங்களையும் வாள்கொண்டுசேதித்தனர். உடனேவிஷ்ணு மூர்த்தியுமங்குவந்து வியாதமுனிவரைப் பார்த்து "తత్వంమేవచ చనంవ్యాసా శృణుమూఢయదార్థవత్। అహమేవజగత్కర్తా మమకర్తా మహేశ్వరః। తస్యదేవాదిదేవస్యకర్తా కోపినవిద్యతే" என்றுகூறினர். என்பது;—மூடனாகிய வியாசனே! சத்தியமாய்ச் சொல்லுகிறேன் கேள். உலகத்துக்கெல்லாம் நானேபதி யென்பதுண்மை. எனக்குப் பதியாவார் மஹேசுவரரென்றறிவாயாக. மஹாதேவராகிய அவர்க்குமேலொருபதிப்பொருள் கிடையாதுஎன்று பெறப்படுத்தலறிக. இவ்வுபதேசத்தைவியாத முனிவருக்குச் செய்துவிட்டு விஷ்ணுபகவான் யதேச்சை யாய்ச் சென்றனர். பின்னர் முனிவர்கள் தம்மிருப்பிடஞ்சேர்ந்தனர். வியாதமுனிவர் நந்திபகவானை வணங்கி அடியேன்பாலிரங்கி இரண்டுகரங்களையுமருளல்வேண்டுமென்றுபிரார்த்தித்தபடியே அருளப்பெற்றுக் கொண்டனர். நந்திதேவர் தாம் செய்தருளிய சிவபரத்துவ தாபனம் யாண்டுமுலகினிலைபெற்றிருக்கும்பொருட்டு வியாதமுனிவரையே விசுவநாதர் சந்நிதிக்கெதிரில் வெற்றிக்கொடித்தம்பமாக நிறுத்தினர். இவ்வுண்மை சநற்குமார சங்கிதையிற் காண்க.

சிவபாரம்ய விடயத்தி னேர்ந்தவாதத்தில் வெற்றி நந்திபக
வான் பக்கல்சார்தலால் அவ்வெற்றியைக் காட்டுமறி குறியாகவ
வர் நிறுத்துமுறைமை தோன்றச்சயத்தூணென்றுகூறினர்.

அவரங்ஙனநாட்டிய தூண் அவராற்கரங்ளொழிந்து வாய
டைந்து தம்பாகாரமாய் நின்றவியாதரென்பது தோன்றவவனே
யாகவென்றுகூறினர். சிவபெருமானுக்கு வாகனமாகிய நந்திபக
வான் தமக்குள்ள வன்புமபிமானமுங் கொடியாவாருக்கு முளவா
தல்கருதி யமைத்தாரென்பதுதோன்றக் கொள்ளிமனுமையும்.
தானுமோர் வாகனமாதலாலபிமானம்பற்றி விஷ்ணுவே யாண்
டடைந்து வியாதருக்கறிவுறுத்தியபடி.

சிவநிந்தைசெய்வாரைத் தண்டித்தறிவுறுத்தல் விகிதமென்
பதுதோன்றமுறைநிறுவி யென்றுகூறினர்.

அறிவுறுத்தவுணர்ந்து வழிபட்டார்க்கிரங்குதன் முறைமை
யென்பது தோன்றவருள் கொழிக்குமென்று கூறினர்.

பெருமானைத்தாங்கி வாழ்தன்மாத்திரமே யன்றிச் சைவத்
துக்கு முதலாசிரியருமாந் தன்மைதோன்ற நந்திபிரானென்று
கூறினர்.

முடியிற் சூட்டிக்கொள்வது பூவென்பதுதோன்றஅடிக்கமல
மென்று கூறினர். இன்னும் அவரடியிற் சூடிய கமலமெனினு
மொக்கும்.

மலைமுடிப்பது * குஞ்சியிலென்பதுதோன்றமுடிக்கொள்
வாமென்று கூறினர். முடிவுத்தமாங்க மாதலறிக. இன்னும்,அவர்
திருவடியைமுடிமேற்கொள்வாமென்பது முடிமேலிருக்கக்கொள்
வாமென்றுபொருள்கொண்டு அவர்திருவடிநீழலில் வசிக்கப்பெற
ருமெனினுமமையும். எம்முடையதலையிற்பிரமனெழுதியவெழுத்
தை அவர்காலாற் றுடைக்கப் பெற்றுக்கொண்டேமென்பதும்
பொருந்தும். அவரிடம் திருவடிதீக்ஷை யடையப்பெற்றேமென்
பதுமொன்று. இன்னும், முடிக்கொள்வாமென்பது நந்திதேவர்
தருமதேவதை யாதல்கண்டென்க. தருமம் என்பது யாவரானுஞ்
சிரசாகவகித்தொழுகற் பாலதாகிய பதியினுடைய வாணையின்

* குஞ்சி—குடுமி.

சொரூபம். அது அப்பதியின்காலின்கீழொதுங்கிக்கிடப்பதொன்று. அப்பதியொருவருடைய வாணையில் வசிக்கவுரியவனல்லாமையால். அவராணையில் யாவரும் வசிக்கவும், அவ்வொருவருடைய வாணையில் வசியாமலிருக்கவுமுள்ள வாதிக்கத்தாற் பதியைச் சர்வநியந்தாவென்று வேதங்கூறும். தருமம்சிவன்காலின் கீழ்க்கிடப்பதுதோன்ற வாகனமாய்ச் சமைந்திருத்தல்சான்றும். அத் தரும மதனையநுட்டிப்பார் முடியிற்கொள்வ தொன்றுகலானத்தருமவடிவமாகிய நந்தி தேவர் பாதங்கள் முடியிற்சேரும் பெற்றிமைத்தாதலறிக. இதனால், வியாதனைத்தருமமே தண்டித்தது என்றுகூறுவதும் பொருந்தும்.

இங்ஙனநிற்க, வியாதமுனிவர் வேதத்திற்புகழப் பெற்றவரும், ஓதாமலுணர்ந்தவரு மாதலுண்மையாக, பின்னர் மலைவுற்றுக்கூறினமையாண்டமையுமெனின், வேதத்திற் புகழப்பெற்றவரும், தெய்வத்தன்மை யுடையவருமாகிய விஷ்ணு பகவான் பொய்ச்சான்றுகூறி மலைப்பாம்பாகச் சமைந்ததென்னை? வேதத்திற் புகழப்பெற்றவரும், தெய்வத் தன்மை யுடையவருமாகிய பிரமதேவர் விஷ்ணுவினிடம் பொய்யுரைத்துப் பூசையுங்கோயிலும் போக்கிக் கொண்ட தென்னை? பசுக்களாத லுண்மையர்களின், மலைவுற்றழுங்கலியல்பாம். (உதியாமரியா வுணராமறவா, விதிமாலறியா விமலன்புதல்வா) என்பது பிரமாணம். இதனால், மறப்பு மாத்திரமேயன்றிநினைப்பு என்னுந்தெளிவு முடையராதல்பெறப்பட்டமையின், வியாதமுனிவர் நாரணனே பரமென்று கூறியதை மறந்துகூறினரென்னாதுதெளிந்து கூறினரெனினுமமையும். தெளிந்துகூறுங்கால் பொய்யுரைத்தல் யாண்டமையு மெனின், அதுபொய்யன்றும். எங்ஙனமெனின், வியாதனையடைந்த முனிவர்கள்வேதங்களையும், பிறகலைகளையும் பலகாலவரிடங் கேட்டுமையம் விலகாமையால், மீண்டுமவர்க்கு முற்படியே வுரையாராயினர். பிழைபடக்கூறின் விஷ்ணுவேயாண் டடைந்துண்மையுணர்த்துவா ரென்பதறிந்து, அவராலம்முனிவர் சந்தேகத்தையொழித்தற் பொருட்டேயவ்வாறுகூறியதாம். (பொய்மையும் வாய்மையிடத்தபுரைதீர்ந்த, நன்மைபயக்குமெனின்) என்னும் பிரமாணமே யீண்டு கருதற்பாலதென்க. விஷ்ணுவே வியாதராதலுண்மையாக, வியாதனைவிஷ்ணு விகழ்ந்துபுத்தி கூறல்யாண்டமையுமெ

னின், கருத்து வேறுபாடின்மையால் பிழைபடாதென்க. கரு
த்து வேறுபடினும் பிழை யுண்டாகாமையைப் பின்செய்யுளாற்
காண்க. (அரியீரைந்தவதாரச் செயலியாவுமரன்செயலாமாலறியாதகந்தை
கூறற், றிரிவாகுமுடல் வாலதருணமூப்பின் செயலுயிரின்செயலாகுஞ்செய்தி
போலும், விரிவாமைந்தொழிலையு மெம்மிறைவன்றனேமிகுபடர்க்கை முன்னி
லைத்தன்மையிலுண்டாக்குந், தரியாதன்றிராமனுடன் பரசுராமன்சமர் பொரு
தகதையுலகிற் சாற்றுவீரோ) என்பதுபிரமாணம். வியாதர் கூறினது
பொய்யல்லாமையாகப் பெறப்பட்டவோர் நியாயத்தால் அவருக்
குக்கரங்கள்தம்பித்ததும். அவரைத்தூணகச் சிவசந்நிதியினிறுத்
தியதும் யாண்டமையு மெனின், அவ்வினையை யவரநுபவிக்க
விருந்ததனாலென்க. அன்றியும், அவருடன்பாடுமெப்படியொத்திரு
ந்தமைகாண்க. எங்ஙனமெனின், சிவபரத்துவ தாபனஞ் செய்
வது சிவபுண்ணியத்திற்றலையாய வுண்மையால், அதுசெய்தலே
பேறாகக் கொண்டிருந்தவராகலின், சிவநிந்தையிற் றலைப்பட்டவோ
ரடையுங்கதியை விளக்கவும் அது தம்பானிகழப்பெற்றுக்கொ
ண்டனரென்றறிக. (அன்பிலாரெல்லாந்தமக்குரியரன்புடையா, ரென்பு
முரியர் பிறர்க்கு) என்னும் பிரமாணத்தால் எலும்பையும் பிறர்
க்குமேலோர் கொடுப்பரென்று வெளிப்படுமாற்றால், அவற்
றைப் பெருமானுக்கென் றர்ப்பணஞ்செய்வதி லார்வங்கொண்
டொழுகிய வியாதர்தன்மை யிழுக்கடைவதெப்படி? (செயற்கரிய
செய்வார் பெரியர்) என்பதற்கினஞ்செய்தலால். மேதாவியரிது
கொண்டேயின்னுமநந்தயுத்திகளை வரித்து மேல்விஷயங்களைப்பரி
யாலோசிக்கக்கடவரென்றிவ்வள வினிறுத்தினம். இந்த விசாரத்
தால் அவைதிக சித்தமான ஹேயநியாயாவலம்பநங்களால் பர
சிவைகநிஷ்டமான நித்தியத்வத்தில் அசூயை மேற்கொண்டு
வீண்விவாதஞ் செய்தல் நிஷ்புருஷமா யொழிதல் காண்க.

இதுகாறுங்கூறியநியாயங்களால், ஓர்விகாரத்தையும் அடை
யாது நின்மலத்தன்மையரால் விளங்கும் ஸ்ரீ பரசிவப் பிரபுவே
நித்தியரென்பது பெறப்பட்ட வுண்மையால், பாஞ்சராத்திரிகள்
விஷ்ணுவை நித்தியராகக்கூறி மயங்குதல் அசப்யமாதல்காண்க.
அவர் யோனிவாய்ப்பட்டு இராமகிருஷ்ணாதி சந்மங்களைப்பெற்று
வருந்தியவுண்மையால். இராமகிருஷ்ணாதிகளாக அவதரித்தவிஷ்
ணுவுக்கு அவ்வவதாரங்கள்அவருடைய ஜாயமானத்தாலமைந்த
லீலாமாத்திரமென்று அன்னோர்கூறுவர். பிருகுவினுடைய சாபத்

தால் தசவிதஜந்மங்கள்வந்தமை பிரமாணபுரஸ்ஸரமாகையால்
அவர்கூற்றுஅவ[illegible]ாதல்காண்க. மீனாகவும்,ஆமையாகவும்,பன்றி
யாகவும்,சிங்கமாகவும்,வாமனனாகவும், மூவிதராமர்களாகவும், கி
ருஷ்ணனாகவும், கற்கியாகவும்பிறவிகள்வரப்பெற்றகாலையில், அப்
பிறவிகடோறும் சாவைமேற்கொண்டுவருந்தியவிருத்தாந்தங்கள்
பாரத பாகவதராமாயண முதலியநூல்களிலேராளமாய்க்காணப்
படுமாற்றால், சநநமரணவிகாரங்களையுடைய அந்த விஷ்ணுவை
நின்மலத் தன்மையால் அவிகாரியாய் விளங்கும் நித்தியப்பொரு
ளென்று நிருபித்தலமைவுடைத்தன்றாம். கண்ணன், கீதையில்
(ధర్మసంస్థాపనార్థాయ సంభవామియుగేయుగే) என்று கூறியதால் அவர்
அவதாரம் லோகாநுக்கிரஹார்த்தமாதல் சாலுமெனின், உலகத்
துக்கு அநுக்கிரஹத்தைச்செய்யவந்தவர் சிவனால் நிக்கிரஹத்தை
யடைந்ததென்னை? மேல்சந்மங்களில்மூவிதராமர்களும்,கிருஷ்ண
னுந் தவிரஏனைய சந்மங்கள் நிக்கிரஹிக்கப்பட்டமையாலும், அவ்வி
ராமகிருஷ்ணாதிகள்அசுரபாதைகளான்மெலிந்துதந்நிவிர்த்தியர்த்
தம்சிவாராதனத்தால் உஜ்ஜீவனத்தைப்பெற்றமையாலும் அவை
லோகரக்ஷணார்த்தமாத்திரமென்பதுநிரஸ்தம். ஆஞ்சனேயர்பிரம்
ஹாவாகவும், அசுவத்தாமர் வியாசராகவும் இனிவரப்போவதாய்
வெளிப்பட்டிருக்கும் பிரமாணங்களால், அவரும் லோகரக்ஷணா
ர்த்தமாகப் பிறக்கின்றவரோயாயினர். ஸ்ரீராமன் தசரதபுத்திரனா
கப் பிறந்த காலையில், அவனுடன் வானர சேனைகளாக வந்த
தேவர்க்களும் லோகத்தைப் பாலித்தவரோயாயினர். மலபத்தரா
யுள்ள வுயிர்கள் பிறக்குந் தோறும் அவ்வப் பிறவிகளில் தம்மை
யொத்த அனேகவுயிர்க்கு அகிதஞ் செய்தலன்றி இதஞ்செய்
தலுமுளவாகுந் தன்மையை நோக்கின், லோக ரக்ஷணார்த்த
மாகவே யாவரும் பிறக்கின்றவரென வெளிப்படுகின்றது. அக்
கண்ணனா லுபதேசிக்கப் பெற்ற அருச்சுனனும் யுகங்கடோறும்
லோகரக்ஷணார்த்தமாய் வருபவனே யாவன். ஒவ்வொரு தாய்
தந்தைகளும் தத்தங் குழந்தைகளை ரக்ஷிக்கும்பொருட்டே வரு
கின்றவ ராவர். ஒவ்வொரு புருஷரும் தத்தம் ஸ்திரீகளைக்
காக்கவே வருகின்றவராவர். அரசர்கள் யாவரும் குடிகளைப்
பாதுகாக்கவே வருகின்றவராவர். இடும்பாசூரன், பகாசூரன்,
மணிமாலன் முதலியவர்களை அவர்களுடைய பலங்களோடு
அழித்த வீரனாகிய வீமசேனனில், கம்சன், சிசுபாலன், முதலி

யவர்களை யழித்த கிருஷ்ணனுக் குண்டாகிய ஆதிக்கம்யாது?
வீமனுலிறந்த துஷ்ட ரொழிவாலும் உலகத்துக்கு நலமுண்
டாயினமை பெறப்பட்டபோது, கிருஷ்ணனு லிறந்தவரொழி
வான் மாத்திரமே உலகத்துக்கு நலமுண்டாமென்பதெப்படி?
கிருஷ்ணன், வீமன் இவர்களேயன்றிப் புரூரவன், யயாதி, மாந்
தாதா, சிபிமுதலிய சக்கிரவர்த்திகளாலும் அநேக நன்மைக
ளுண்டாயினமை சாஸ்திர கடிதமாகையால், யாவரும் லோக
சம்ரக்ஷணார்த்தமாகவே பிறக்கின்றவராயினர். இந்த விசாரத்
தால் உலகிற்பிறக்கும் உயிர்கள் யாவும் ஒன்றறகொன்று உப
கரித்துவரும் நலம் வெளிப்பட்டமை காண்க.

மலசகசத்தாற் பிறந்துழலு மேழைப்பசுக்கள்தத்தம்வினை
நுகர்ச்சிக்கிடாக ஒன்றற்கொன்று இதாகிதங்கள்செய்து வருந்
தன்மையுண்மையால்,அவற்றையெல்லாம்பார்த்துக் கண்மூடித்த
னமாய்லோகாநுக்கிரகார்த்தமான அவதாரங்களிவை போலுமெ
ன்றுமயங்குவது கூடாது. தருமசம்ஸ்தாபனார்த்தமேயுலகிற்பிறந்
ததுண்மையாயின், உலகிலுள்ள அதருமவழியைத் தான்சாராது
அவ்வுலகுக்குபகாரஞ் செய்தல்சாலும். அதருமரூபமாகிய உலக
வழியையே தானும்பற்றி மாதாவுதரத்திற்றங்கி, யோனிவாயிற்
பிறந்து, மரணவாதையிலிறந்து, வருந்துந்தன்மை லோகரக்ஷண்
யத்தை எங்ஙனம்நாட்டும் ? எல்லாவுயிர்களும் ஒன்றற்கொன்று
நன்மைசெய்வதேயன்றித் தீமையுஞ் செய்துவருகையில் நன்மை
யைநோக்கவுபகாரமும், தீமையைநோக்க அபகாரமுஞ் செய்யுந்
தன்மைவெளிப்படும். ஆகவே, தருமசம்ஸ்தாபனார்த்த மென்ப
தோடு, அதரும சம்ஸ்தாபனார்த்த மென்பதுமாண்டுரைக்கவ
ரும். இப்படியேமேற்போந்த பத்துப்பிறவிகளிலும் விஷ்ணுவினி
டம் நிகழ்ந்தநன்மை தீமைகள்பலவுள. இராவணன் இராமன்
கையில் தப்பி அகப்பட்டுக்கொண்ட காலையில் அவனைச்சுலபமாய்
அந்த அவசரத்தில் தான் கொல்லக் கூடுமாயினும், தருமத்தை
நோக்கி இன்றுபோ, நாளைவா என்றிரங்கிக் கூறினமையால்,
தருமசம்ஸ்தாபனார்த்த மென்பது பொருந்தும். சுக்கிரீவன் என்
னுங்குரங்கால் இராவண னபகரித்துக் கொண்டுபோன தன்மனை
வியை யடையக்கருதி அநியாயமாய் அச்சுக்கிரீவனுடைய பிரீத்
யர்த்தம் வாலியைக்கொன்றது என்ன சம்ஸ்தாபனார்த்தம் ?

இராமன் வந்ததெல்லாம் ராக்ஷசரீளைக் கொல்லவேயாகக் குரங்கு அவனை யென்ன பண்ணிற்று? குரங்கைக் கொல்லவா இராமன் வந்தது? அன்றியும் அவ்வாலியென்னுங் குரங்கைத் தான் கொல்லத் தொடங்குகையில் அவன் எதிர்நின்று போராடில் தன்பாதிபலம் அவனைச்சாருமென்றஞ்சி மறைந்துநின்று சரந்தொட்டது என்னசம்ஸ்தாபனார்த்தம்? ஆகவே, இராமன்சேதனரிலொருவனென்பதுவெளிப்பட்டு உயிர்க்குணமாகிய இதாகிதம்புரியுந்தன்மையுடையனாயிருந்தானென்பது பெறப்பட்டது. இன்னும், வாலிசுக்கிரீவ ரொரேதன்மையான வுருவமுடையவரா யிருந்தமையால், அவர்களில்வாலியின்னானென்று அறிந்துகொள்ளமாட்டாமல் சுக்கிரீவனைப் பசுந்துணரொன்று சிரசில் அடையாளமாக வைத்துக்கொள்ளச்சொல்லிப் பின்னர் அவ்வடையாளத்தால் சுக்கிரீவனையறிந்து அவனைவிட்டு வாலியைக் கொன்றதென்னை? அன்றியும், தன்னைமறைந்து நின்றுகொல்லும்படிச் சரந்தொட்ட இராமனை அவனது மறுஜந்மமாகிய கிருஷ்ணாவதாரத்தில் அவ்வாலி வேடுவனாகிச் சரந்தொட்டுப் பழிக்குப்பழிவாங்கிய தென்னை? இப்படியேகண்ணன், வாமனன் முதலியோரிடத்திலும் நிகழ்ந்ததன்மைகளைப் பாரதபாகவ தாதிகளில் பார்த்துணர்க.

இந்தவிசாரத்தால், பசுவாகிய மூலவிஷ்ணுவுக்குப்பத்துப் பிறவிகள் சாபத்தால்வந்ததுண்மையெனவும், அப்பிறவிகடோறுஞ்சீவகுணத்துக்கிசையஇதாகிதங்கள்புரிந்ததுண்டெனவும்வெளிப்படுமாற்றால், அந்நன்மைதீமைகளை அம்மூலவிஷ்ணுவுக்கும் அவதார விஷ்ணுக்களுக்கும், அவ்வவ்வவசரங்களிலேறியுங்குறைந்துமிருந்த கன்மவேறுபாடுகளுக்கிசைய நுகர்வித்துச் சித்திரப்பதுமைகளென்ன ஆட்டுவிக்கும் பரசிவனுக்கு முன்னர் அஸ்வதந்திரத் தன்மையே சுவபாவசித்தமாக வுடைய அவ்விஷ்ணுவையும், அவரவதாரங்களையும் நிர்விகாரத்தன்மையெய்தும் அமலமாகிய நித்தியராகமயங்கல் தோஷகிரஸ்தமாய் நிரசிக்கப்பட்டது. இதனால், தர்மசம்ஸ்தாபனார்த்தமே விஷ்ணுபிறக்கின்றாரென்பது உசித மாகாதெனவறிக. மற்றென்னெனின், கண்ணன் கீதா வுபதேசஞ் செய்கையில், சோகம் பாவனைமேற்கொண்ட தன்மையுண்மையால், தானேசிவம் என்னுமநுபவத்தைவிளக்கு

மவசரம் அதுவாகையால், அந்தப் பிரம்ஹபாவ மேற்கொண்டு நான் தர்ம சம்ஸ்தாபனர்த்தம் பிறக்கின்றேனென்று கூறினதாம். என்பது, என்னைச் சிவபெருமா னதிட்டித்து வேண்டிய நன்மைகளை நான் பிறக்குந்தோறும் என்னை யிடமாகக்கொண்டு உலகில் நிகழ்த்துவனொன்பது உண்மைக் கருத்தாம்.

இன்னும் இராமனுடைய தர்மசம்ஸ்தாபனத்தை நோக்குழி நகைப்புக்கேயிடந் தருகின்றது. வாலிமஹாசிவபக்தாக்ரேசனென்பது இராமனறியாதவனல்ல. அப்படிப்பட்ட சிவபக்த சிரோமணியைச் சுக்கிரீவன் றயையை யபேக்ஷித்துக் கொல்லத் துணிந்தது அதிசயம்! அதிசயம்!! ஓர் பெண்ணபிமானத்தால் சிவபக்தாபராதம் செய்யத்துணிந்தது பரமதருமம் போலும். இதனால், இராமன் சிவபக்தி பாரம்ய முடையவனுயிருப்பினும், அவனதுபக்தி போதநஷ்டமாகாத தென்பது வெளிப்பட்டது. மெய்ப் பொருணயனர் அதிபாதகனுகிய சமணனெருவன் சிவ வேடந்தாங்கி வந்தபோது தம்முயிர் கழியினும் அடியார்க்கிடுக் கண்விளைத்தல் தீது என்னுமநுபவத்தை விளங்கக் காட்டினமையாலும், ஏனுதிநாயனர் தம்முடனெதிர்த்துவாள்கொண்டுபோராடுமெதிபாதக னெருவன்முகத்தில் விபூதியைக்கண்ட மாத்திரத்தில் சிவனடியாராகிய விவர்க்குத் தீங்கிழைத்தல் பிழையென்றெதுங்கினமையாலும், இயற்பகை நாயனர் சிவவேடத்தார் வேட்டனவற்றை யில்லையென்னது கொடுத்துவரு மன்புமேலீட்டால் தமதுமனைவியாரையுமோர் சிவனடியார்க்களித் தமையாலும், புகழ்ச்சோழ நாயனர் தமதுசேனைகள் யுத்தமுகத்தனுசசத்துரு ஜயம்பெற்றுத் தம்மாலிறந்த வீரர்தலைகளைப்பொதிபோட்டுக் கொண்டுவந்து முன்னே நிறுத்தி யொவ்வொரு வீரர்தலையாகக்காட்டி வருகையில் ஓர்தலையில் சிறியதொருஜடையிருக்கக் கண்டமாத்திரத்தில் பதைபதைத்துள்ளம்நடுங்கி நான் புரிந்துவரும் அரசுமிகமேலானது என்றுதம்மை நொந்தவராகிச் சிவனடியார்க்கிழைத்த வித்தீமைக்குச் செயற்பாலதிதுவேயென வச்சிரசைச்சிரமேல்வகித்துக்கொண்டபடியே அக்கினியைவளர்த்தி அதிலிறங்கி னமையாலும், இன்னுமிப்படியே மிகமேலான தருமங்களையுலகம் பிழைக்கும் பொருட்டுப் பலசிவனடியார்கள் விளக்கினமையாலும், தருமசம்ஸ்தானர்த்தம் அவதரித்த ஸ்ரீமான்

கள்தன்மை வெளிப்பட்டது. இவ்வவதாரமூர்த்திகள் தர்ம சம்ஸ்தாபனமும், இராமனது தர்மசம்ஸ்தாபனமும் இத்திறப்பகுதியன வென்று பரியாலோசனையில் வெளிப்படுகையால், தர்மசம்ஸ்தாபனார்த்தமே யுகங்கடோறும் நான்பிறக்கின்றேன் என்று கண்ணன் கூறியது அவனிடம்பொருந்தி யிருக்கக் காணக்கூடாமையால், மேல், விளக்கியசோகம்பாவனைக்கருத்தே வெளிப்பட்டவாறறிக.

இப்படியே விசாரமுகத்தி லொவ்வொன்றும் தர்மசம்ஸ்தாபனத்துக்கிடங் கொடா தொழிகையால், சேதனர்செய்கை மேற்கொண்டு, கன்மாநுசாரமாய்க் கட்டுண்டொழுகிய இராமனாதியர்தோற்ற லயங்களைப்பரியாலோசிக்கில், அவர்க்குநித்தியத்துவம்நாட்டலாமென் றுசைமேற்கொண்டெழுவார்செயல் அவலப்பட்டழிதல்காண்க.

---

ஆயின், அந்த இராமனுடைய நாமத்தையே காசியிலுயிர் விடுமான்மாக்களுடைய வலக்காதில் ஸ்ரீ விசுவேசுவரர் உபதேசித்து அவர்களுக்கு முத்தியளிக்கின்றாரென்று பாஞ்சராத்திரிகள் கூறுவதென்னையெனின், அவ்வாபாசவிருத்தாந்தத்தை யீண்டு விசாரிப்பாம்.

## தார்கசித்தாந்தம்.

தானங்களெனுசொற்றானுந்தனைமுதலெடுத்துக்கூறு
மானங்களுடையதாகிமாதேவன்வடிவுற்றார்க்கு
ஞானங்களோடுநல்கிநலமுறவைகுமொண்பூங்
கானங்கள்பொலியுந்தெய்வக்காசியைவணக்கஞ்செய்வாம்.

இ-ள். எந்தத்தலமாந்மியத்தையெடுத்துச் சொல்பவர்களும் அவற்றிற்கு மாந்மியம் விளங்கும்பொருட்டுத் தன்னையே முதலிலெடுத்துக்கூறுஞ் சிறப்புடையதாகித் தன்பக்கல்சார்ந்து மகாதேவரைப்பிரதிட்டித்து வழிபடுவார்க்கு ஞானமோட்சங்களை யளித்து எல்லாநலங்களும் பிரகாசிக்கும் அழகியபூஞ்சோலைகளால்விளங்குந் தெய்வத்தன்மை பொருந்திய காசியென்னும் பதியை வணங்குவாம். எ-று.

தெய்வக்காசியென்பதனால், தாரகக்ஷேத்திரமென்பது பெற்றும். இந்தப்பதியில் தேகத்தை விடுமுயிர்களுக்கு நிரியாண தசையில் ஸ்ரீ விசுவேசர் அவர்கள் வலக்காதில் தாரகமந்திரத்தை யுபதேசித்தருள்வரென்று வேதமுதலிய நூல்கள் சாற்றலால். தாரகமந்திரமென்பது உடனே பாசத்தினின்றுந் தாணடச்செய்யுமாற்றலுடைய மந்திரமென்றும். அது தசரதனுடைய மூத்த சேயின் பேரெனச் சிலர்சாற்றுவர். அவனுடையபேரை எல்லாமுடையானாகிய பெருமானுபதேசித்தல் அடாது. அவனே பாசத்தின்மூழ்கி யோனிவாய்ப்பட்டழுங்கியும், பெண்டைப்பறிகொடுத்து அசுரன்வாதையிற்பட்டு நொந்தும், பின்னர்ப்பலவவதிக்குள்ளாகிச் சரயுநதியில் வீழ்ந்திறந்து மொழிதலால். அப்பெயர் இராமனென்பதேயாக, அது தசரதன்மகன்பேரென்பதுமடாது. ஜமதக்கினிக்கும், வசுவதேவனுக்குமப்பேரையுடைய பிள்ளைகளுளவாதலால். தசரதன்சேயைப்போலவேயேனையவிருவரும் விஷ்ணுவினுடைய அவதாரங்களாதலால். மூவரும் விஷ்ணுவினவதாரங்களேயாக, இருவரைக்கழித்து ஒருவனைக்கொண்டது பிழையாம். ஜமதக்கினிசேய் விஷ்ணுவி னற்பாமிசமாதலும், வசுதேவன்சேய்விஷ்ணுவின்சுவேதரோமமொன்றுதலு நோக்கித் தசரதன் சேயைக்கொண்டதெனின், தசரதன் சேய்க்குப் பூர்வஞானமின்மையும், வசுதேவனிளையசேயாகிய கண்ணனுக்குப் பூர்வஞானமுடைமையும் பெறப்படுதலால் மூவரையும் விடுத்துக் கண்ணனையேன் கொள்ளக்கூடாது? கண்ணன் பூர்வஞான முடையவனா யிருப்பினும், அவன் விஷ்ணுவின் கிருஷ்ணரோம மொன்றுதனோக்கிக் கழித்தனர்போலும். மற்றையவதாரங்கள் சிங்கம், ஆமை, மீன். பன்றி குதிரையாதிகளாய் முடிதலா லவற்றைஅறவேயொழித்தனர்போலும். இவ்வாபாசங்களாலோரவதாரமுஞ் சால்புடைத்தன்றும். இதனால், தசரதராமனை யிழுத்துவிடுத்தது தவறாய்முடிந்தது. அன்றியும், அவதாரபரமாகிய இராமமந்திரம் தாரகமாகிறபோது மூலமந்திரமாகிய நாராயணமந்திரம் தாரகமாகாததென்னை? மூலமந்திரத்துக்குத் தாரகத்வஞ் சித்தியாதபோது அவதார மந்திரத்துக்கவ்வாதிக்கமுண்டாமென்பதெப்படி? மோக்ஷப்பிரதாயகமாகிய மூலமந்திரத்தைநோக்க இராமமந்திரத்துக்கு மோக்ஷப்பிராதா

னியத்துவமின்மையும், உடனே பாசவிச்சேதஞ் செய்யுந்தன்மையால் இராமதாரகத்தைநோக்க மூலமந்திரத்துக் கஃதின்மையும் வெளி படலால், ஒன்றைநோக்க வொன்றழிந்து இரண்டுமந்திரங்களு மவல மாதல்சாலும். இவ்வுண்மை விசாரத்தால்மூலமந்திரமுந் தாரகமந் திரமுமாகிய மோக்ஷமந்திரமொன்றே யாதல்பெறப்படும். அஃது ஏகாக்ஷரமாகிய பிரணவமென்று உண்மைநூலனைத்துங்கூறும். பிர ணவம்தாரகமுமோட்சமந்திரமுமாயின், ஸ்ரீ பஞ்சாட்சரம் மோக்ஷ மந்திரமும் தாரகமுமாதலிழுக்காமேயெனின், பிரணவமும், ஸ்ரீபஞ் சாட்சரமும் ஏகமேயாகிச்சூக்குமமும், தூலமுமாய் விளங்கிச் சூக்கும பஞ்சாக்கரம், தூலபஞ்சாக்கரம் என்றுவெளிப்படலால் ஒன்றிலொன் றுமுரணுவாம். இவ்வுண்மை சூதசம்ஹிதையிற்காண்க. ஆகவே, ஸ்ரீ விசுவேசராண்டுபதேசித்தருளுவது தமது ஸ்ரீபஞ்சாட்சரமாகிய பிரணவ தாரகமென்பது நிச்சயிக்கப்பட்டது. இவ்வுபதேசத்தைப் பெற்றுநீங்குமான்மா சிவசாரூப்பியமெய்தல் வேதமுதலியகலைகள் சா ற்றலால். இதனுல் அச்சிவப்பேற்றை யுதவுமந்திரம் பரசிவசம்பந்த மொன்றேயன்றி யிதரதேவதாசம்பந்தமொன்று மெய்தாமைதெளிக. " மாதேவன்வடிவுற்றார்க்கு ஞானங்களோடு நல்கி" யெனவிச்செயுளிற் போந்தமையுமிதனைவிளக்கும். எனவே, தன்னிடத்தினிரியாணத்தை ப்பெற்றபேர்க்குத்தாரகோபதேசத்துடன்அதன்பிரயோசனமாகிய ம காதேவருடைய சாரூப்பியத்தையு மருளுந்தகைமைத்தென்பது வெ ளிப்படை. இன்னும் விரிக்கிற்பெருகும்.

இனி, விஷ்ணுவானவர் நரசிங்கமாகவந்தபோது சரபமாகவந்த சிவனைவென்றும், திரிவிக்கிரமனுகவந்தபோது தன்னுடையபாதத்தி ற்பிறந்த கங்கையைச் சிவன் தரித்துக்கொண்டதனுல் அவரைப் புனி தமாக்கியும், கிருஷ்ணனுகவந்தபோதுபாணுசுரன்சண்டையில்சிவனை முதுகுகாட்டச்செய்தும் தமதுபரத்துவத்தை விளக்கினரென்று பா ஞ்சராத்திரிகள் கூறுவதற்குப் போக்கேதெனின், அவ்வாபாசங்களை முறையே யீண்டு மறுத்துக்கூறுவாம்.

## நரசிம்ஹவதம்.

முதல், விஷ்ணுநரசிங்கமானது இரணியவதையின் பொருட் டென்பது சர்வசாஸ்திரசம்மதம். இராவணனைக்கொல்ல இராமனு

தித்தபடி. ஆகவே, சரபத்தைவென்றுவென்பது அசங்கதம். இராவணனோடு கும்பகர்ணனையுங் கொன்றபடி ய[illegible]தோவெனின், இராவண்கும்பகர்நாதிகள் மஹாபராதிகளாயுலகத்தை யுபத்திரவிப்பதறிந்து இராமனுதித்தபடி இரணியனோடு சரபமும் உலகத்தையுபத்திரவப்படுத்தியதால் நரசிங்கம்வந்ததில்லை. இரணியன்பொருட்டுமாத்திரமே! இரணியன்பொருட்டேயாயினும் நரசிங்கமாய்த்தான்வந்த பிறகு தன்னை யெதிர்த்தகாரணம்பற்றி ஆண்டுவந்த சரபத்தையும் அழித்ததெனின், சரபத்தையஞ்சுவதாகிய சிங்கம் அதன்பாலாதிக்கத்தைச் செலுத்தியதென்பது அவலமாம். அது சாமான்ய சிங்கசரபங்கட்கேயன்றிக் கடவுளாகிய நாராயணனிடங்கொள்வது குற்றமெனின், இரணியனைத்தன்யதார்த்தவடிவத்தால்மாய்ப்பதில் அந்த நாராயணருக்குக் கடவுட்டன்மை யெங்கேயொளித்திருந்து? கடவுள் தன்மையால் கூடாமைபற்றியேயன்றோ அவனுடையவரத்தையஞ்சி நரவடிவும், சிங்கவடிவுங்கொள்ளநேரிட்டது? இதனால, அவர் கடவுளல்லரென்பதுந்தானேபோதரும். ஆயின், எம்மவர்சிலரொழுகிய நூல்களில் விஷ்ணுபகவான் கண்டபேருண்டம்என்னும் பட்சிவடிவந்தாங்கியே சரபத்தை யழித்ததாகக் கூறியிருப்பதால், அது ஈண்டுப்பொருந்துமேயெனின், அப்போது சிங்கமே சரபத்தைவென்றது என்னும் வாதம் பொய்யாயொழிந்தது. அது அழியினும் இது நிலைக்கட்டு மேயெனின், ஆனல் இதையுஞ்சற்றேபார்ப்போம். கண்டபேருண்டம் சரபத்தையழித்தது என்னுமிடத்து விஷ்ணுவுக்கு அவதாரங்கள் பதினொன்றும். விஷ்ணுவினவதாரம் பதினொன்றென்றுவது, அதுகண்டபேருண்டஞ்சேர்ந்தென்றுவது எந்தநூல்களில், யாவர்கண்டனர் ? அதிகாரிகளுளரேல் வெளிவரட்டும் பார்ப்போம். இனித்தசாவதாரம் என்பதுபோய் ஏகாதசாவதாரம் விஷ்ணுவுக்குக் கூறவரும்போலும். அவரவதாரம் பதினொன்றுகாவிடினும் நரசிங்கத்தினவதாரம் கண்டபேருண்டமென்றுலாகாதோவெனின், அப்போது பன்றிக்கும், ஆமைக்கும், குதிரைக்கும் வேறு வேறுஅவதாரங்கள் சொல்லவரும். அப்பன்றி முதலியவற்றையும் சிவனழிக்கவெழுந்தமையால். ஆகவே, சரபத்தைச்சிங்கம், அல்லது வேறு எந்தக்குரங்கவதாரமாவது அழித்ததென்பது சாமஞ்சஸமாகாதெனவறிக.

பைப்பலாதசுருதியில் (యోఘోరంవేషమాస్థాయశరభాఖ్యంమహేశ్వరః। నృసిమ్హంలోకహన్తారంసంజఘానమహాబలః। హరింహరంతంపాదాభ్యామనుయాంతిసురేశ్వరాః। మావధీఃపురుషంవిష్ణుంవిక్రమస్వమహేశ్వర। కృపయాభగవాన్విష్ణుంవిదదారనఖైఃఖరైః। చర్మాంబరోమహాదేవోవీరభద్రోబభూవహ) என்னும்வாக்கியத்தால் மஹாதேவராகிய வீரபத்திரர் கோரமாகிய சரபவடிவந்தாங்கிவந்து லோகஹந்தாவாய்நின்ற நரசிம்ஹனையடித்துக் கால்களாற் கிரகித்த காலையில் தேவர்க்களெல்லாம் சுவாமியைத்துதித்து விஷ்ணுவை ஹிம்சிக்கவேண்டாம் ஆக்கிரமித்துக்கொள்ளும் என்று பிரார்த்தித்தார்களென்றும், அப்போது சுவாமியானவர் தயையினால் நரசிம்ஹம்வருந்தாதபடி நகங்களாற் பிளந்து சர்மத்தை அம்பரமாக அரையில் தரித்தருளினரென்றும் பெறப்பட்டது. இப்படியே பிரம்ஹாண்டபுராணம், உபரிபாகத்தில் (తతస్సంత్యక్తవాన్విష్ణుర్జీవితంస్వాపరాధతః। తద్వక్త్రంతస్యకృత్తించహృత్వాశరభవిగ్రహః। అతీంద్రియత్వమగమద్వీరభద్రఃక్షణాత్తతః) என்னும் வாக்கியத்தால் விஷ்ணுவானவர் தன்னால்நேர்ந்தஅபராதத்தால் வீரபத்திரரால் சிக்ஷிக்கப்பட்டிறந்தாரென்றும், அவரது முகத்தையும், தோலையுங் கிழித்துக்கொண்டு சரபாகிருதியாய்வந்த சுவாமியானவர் இந்திரியாகோசரத்தை யுடனேயடைந்தாரென்றும் பெறப்பட்டது.

மேற்போந்த உபநிஷத்வாக்கியமென்ன, உபப்பிரம்ஹணமாகிய புராணவாக்கியமென்ன, இத்யாதிசப்பிரமாணவிருத்தமாய், இராமனை இராவணன் வென்றானென்றபடிச் சிவாபராதமான ஹேயசித்தாந்தத்தை அவலம்பிக்கவெழுதல் தலையெடுக்காதெனவறிக. சரபத்தை விஷ்ணு அழித்தாரென்று கூறித்திரியும்பாஞ்சராத்திரிகள் அச்சரபம் ஏன்ஆவிர்ப்பவித்தது? எப்போது ஆவிர்ப்பவித்தது? என்பதற்கு யாதுவிடைகூறுவர்? இரணியனைக்கொல்ல நரசிம்ஹம்தூணில் வந்தபோது சரபமிருந்ததுண்டா? இல்லையே! இரணியனுடையதுன்மார்க்கத்தைக்கண்டு நரசிம்ஹம்வந்ததுபோல, நரசிம்ஹத்தின் கொடுமையை அறிந்தே சரபம் ஆவிர்ப்பவித்ததெனவறிக. இரணியனைவதைத்து, அவனுடைய இரத்தத்தைப் பானம்பண்ணிய வெறியால் மயக்கெய்தித் தேவர்களையெல்லாம் உபத்திரவப்படுத்தத்தொடங்குகையில், அவருக்கு அம்மயக்கத்தை யொழித்துத் தேவர்

க்களுக்கு உபகரித்தற்பொருட்டே சிவன்சரபாகிருதியாய் வெளிப்பட்டானென்பதுமேற்போந்த வாக்கியத்துவயங்களில் (నృసింహం లోకహ ణూరం) எனவும். (స్వాపరాధతః) எனவும் வந்தபிரயோகங்களால் கண்டறிந்தடங்குக.

இவ்வுண்மைகளையறியாமல் சரபத்தை விஷ்ணு அழித்தானென்றும், அப்போதுஉமாதேவியார் பதிபிக்ஷைகேட்டாளென்றும், அதனால் மறுபடியும் சிவனை யுயிர்ப்பித்துக்கொடுத்தானென்றும் பிதற்றித்திரியும் பேடிவாசகங்கள் சபேடிகை செய்யப்பட்டமையால், அந்தவிஷ்ணுவினுடையகௌரவத்தைக் கமலாலயமென்னும் க்ஷேத்திரத்திற்சென்று விசாரித்து மகிழ்வாராக.

விஷ்ணுவானவர் ஓர்காலத்தில், தனதுகையில் வில்லொன்று தாங்கிக்கொண்டு, அதை வலதுகாற்பெருவிரலாலும், மோவாய்க்கட்டையாலும்பற்றி நிற்கையில், அதிற்பூட்டியிருந்த நாரியைத்தனது விரோதிகள் செல்லுருவாய்வந்துஅறுத்துவிட்டமையால், உடனேநிமிர்ந்தவில்லினுடையவேகத்தால்தன்னுடையதலையறுபட்டுத்திருக்கண்ணமங்கையென்னும்பதியில்வீழ்ந்தகாரணத்தால், இறந்ததன்னுடையபதியாகியவிஷ்ணுவையுயிர்ப்பித்துக் கொள்ளவேண்டித்திருவாரூரின்கண், கமலையென்னும்பேரையுடைய விஷ்ணுபத்னிதவங்கிடந்தவுண்மையைஅந்தத்தலம்இன்றும்சாட்சிகூறிக்கொண்டிருக்கும். கமலையிருந்துபூசித்தஆலயம் கமலாலயமென்பது வெளிப்படை. (நாகமிசை நடித்தவருக் குயிர்வேண்டித்திருதவஞ் செய்மனைக்கோயில், சேருமனத்தவராகுமருவாரூர் தனையெரித்தார்திருவாரூரே) என்பதனானுங்காண்க. இதனால், பதிபிக்ஷை, தாலிபிக்ஷைமுதலியனபெற்றுப் பிழைத்தவர்கள் இலட்சுமி, சரஸ்வதிமுதலிய தெய்வப்பெண்களேயன்றி உலகமாதாவாய்விளங்கும் உமாதேவியார்மாட்டு இத்திறத்துஆபாசங்களைமனத்தால்நினைப்பதும் அபராதத்துக்கிடமாகி நிரயத்துன்பத்தில்வீழ்த்துமென்பதுசித்தம் (ஓதவிடமுண்டுபெயநிறத்தாமரைமேற், கோதையர்க்குத் தாலிகொடுத்தவரார்) என்பது முதலிய வாக்கியங்களைச் சிந்தித்துப் பிழைப்பாராக. இன்னும் விரிக்கிற்பெருகும்.

இனித்திரிவிக்கிரமனுடைய பாதநிஸ்ருதமாகிய ஜலம் சிவனால் தரிக்கப்பட்டதில்லையென்பதும், அவரால் தரிக்கப்பட்ட கங்கைஇதுவென்பதும், அதற்குக்காரணம் இன்னதென்பதும் தெளிவுபெறக்கூறுநிற்பாம்.

## கங்காதாரணப்பிரக்யானம்.

(கங்கோற்பத்திகூறியது.)

வாமனபுராணம் (௫௩) வது, அத்தியாயத்தில், "శ్వేతాంగీపద్మపత్రాక్షీనీలకుంచితమూర్ధజా। శ్వేతమాల్యాంబరధరాకుటిలానామచాపరా" என்கிற வாக்கியத்தால் வெண்மையாகிய நிறமுடையவளும், தாமரையைப போல் கண்களையுடையவளும், நீலநிறத்தோடு சுருண்டு விளங்குங் கூந்தலையுடையவளும், வெண்மையாகியமாலையும், வஸ்திரமுமுடையவளும், குடிலையென்னும் பேருடையவளும் என்று உமைக்குச்சியேஷ்டையான ஹிமவானுடையபெண்ணைப் பிரஸ்தாபித்து, "దివాకరైశ్చరుద్రైశ్చవసుభిశ్చతపస్వినీ। కుటిలాబ్రహ్మలోకంతునీతాశశికరప్రభా। అథోచుర్దేవతాస్సర్వాః కింత్వియంజనయిష్యతి। పుత్రంతారకహంతారం బ్రహ్మన్నాఖ్యాతుమర్హసి। తతోబ్రవీత్సురపతిం నేయంశక్తాతపస్వినీ। శార్వంధారయితుంతేజోవరాకీ ముచ్యతామియం। తతస్తుకుటిలాక్రుద్ధా బ్రహ్మాణంప్రాహనారదః। తథాయతిష్యేభగవన్ యథాశార్వంసుదుర్ధరం। ధారయిష్యామ్యహంతేజస్తథైవశృణుసత్తమ। తపసాహంసుతప్తేన సమారాధ్యజనార్దనం। యథాహరస్యతద్వీర్యం ధారయిష్యేపితామహ। తథాదేవకరిష్యామిసత్యంసత్యంమయోదితం। తతఃపితామహఃక్రుద్ధఃకుటిలామతిదారుణాం। భగవానాదికృద్బ్రహ్మాసర్వేశస్సమహామునే। యదామద్వచనేపాపేనస్థితంకుటిలేత్వయా। తస్మాన్మచ్ఛాపనిర్దగ్ధాత్వమప్యాపోభవిష్యసి। ఇత్యేవంబ్రహ్మణాశప్తాహిమవద్దుహితామునే। ఆపోమయీబ్రహ్మలోకంప్లావయామాసవేగినీ। తాముద్వృత్తజలాందృష్ట్వాబబంధప్రపితామహః। ఋక్సామాథర్వయజుర్భిఃవాఙ్మయైర్బంధనైర్దృఢం। సాబద్ధాసంస్థితాబ్రహ్మన్ తత్రైవగిరికన్యకా। ఆపోమయీప్లావయంతీబ్రహ్మణోవిమలాజటాః" என்றற்றொடக்கத்துவாக்கியங்களால் அந்தக்குடிலையென்கிறபெண்ணைத் துவாதசாதித்தியர், ஏகாதசருத்ரர், அஷ்டவசுக்கள் முதலாகிய தேவகணங்களெல்லாம்வந்து பிரம்ஹலோகத்துக்கு அழைத்துக்கொண்டு போனார்களென்றும், அங்கேயுள்ள தேவர்க்களெல்லாம் பிரம்ஹாவைநோக்கித் தாரகாரியாகிய குமாரஸ்வாமியை யுண்டுபண்ணப்போகிறவள் இவள்தானோவென்று கேட்டகாலையில, பிரம்ஹா தேவர்க்களைநோக்கிச் சிவனுடையஉக்கிரதேஜஸைத்தரிக்க இவளால்முடியாது, இவளை விட்டுவிடுங்கோளென்று கூறினனென்றும், அதன்மேல் குடிலையென்பவள் கோபத்தையடை

ந்து பிரம்ஹாவைநோக்கிச் சிவனுடையஉக்கிரமானவிரியத்தைத்தாங் கும்படியானசக்தியை நான் விஷ்ணுவ்வநோக்கித் தவஞ்செய்து பெறுகிறேன் இதோபாரொனறுகூறுதலும், பிரம்ஹதேவர்கோபித்து நீயென்வார்த்தையைக் கடந்தாயாகலின் ஜலரூபமாகக்கடவையென்று சபித்தாரொன்றும், அப்படியே சாபக்கிரஸ்தையாய்ச் சலரூபத்தையடைந்த குடிலையானவள் உக்கிரவேகத்தோடு பிரம்ஹலோக முழுதும் ஆவரித்தகாலையில், ருக்யஜுஸ்ஸாமாதர்வணங்களாகிய மந்திரங்களால் அதிக்கிரமியாதவண்ணங் கட்டிவைத்தாரொன்றும், கட்டப்பட்ட குடிலையானவள் பிரம்ஹாவினுடைய நின்மலமாகிய ஜடைகளில் பாய்ந்துகொண்டிருந்தாளென்றும் விஸ்தரித்துக் கூறப் பட்டிருக்கின்றது. இப்படியே, இராமாயணம் (பாலகாண்டம்) 'ఏతేవై శైలరాజస్య సుతేలోకనమస్కృతే। గంగాచ సరితాం శ్రేష్ఠా వుమాదేవీచ రాఘవ" என்கிறவாக்கியத்தால் ஹிமவானுக்கு லோகபூஜ்யைகள்ாகிய பெண்களிருவருண்டென்றும், அவர்கள்கங்கையும், உமையுமென்று சொல்லப்படுவர்களென்றும் பெறப்பட்டதை நோக்குங்கால் உமாஜ யேஷ்டையானகுடிலாபதஸ்தானத்தில் கங்காபதமிருப்பதால் குடிலையே கங்கையென்பது நிர்ப்பாதிதமாய்ப்பெறப்பட்டது. இவ்வுண்மைதோன்ற "అథజ్యేష్ఠాం సురాస్సర్వే దేవతార్థచికీర్షయా। శైలేంద్రం వరయామాసుర్గంగాం త్రిపథగాం నదీం। దదౌధర్మేణ హిమవాన్ తనయాం లోకపావనీం। స్వచ్ఛందపథగాం గంగాం త్రైలోక్యహితకామ్యయా। ప్రతిగృహ్య తతో దేవా స్త్రైలోక్యహితకారిణః। గంగామాదాయ వై గచ్ఛన్ కృతార్థేనాంతరాత్మనా" என்னும் வாமனபுராணவசனத்தால் சகலதேவர்க்களும் தேவகாரியங்களைச்செய்யவேண்டிய விச்சையினுல் ஹிமவானைநோக்கிச் ஜியேஷ்டபுத்திரியான மூன்றுபிரிவோடுங்கூடியகங்கையை வரித்தார்களென்றும், ஹிமவானும் சந்துஷ்டனுய் மூவுலகிற்கு மிதத்தைச் செய்யவேண்டிய வெண்ணத்தோடு லோகபரிசுத்திகரமான தன்னுடைய பெண்ணைக் கொடுத்தானென்றும், பின்புதேவர்க்கள் கங்கையை யழைத்துக் கொண்டு சபலமானமனசோடு போனர்களென்றுங்கூறப்பட்டிருக்கின்றது. இப்படி ஐககண்டமாய் இராமயணமும், வாமனபுராணமுங் கூறுமுண்மையால் அவற்றில்பேதமின்மைவெளிப்பட்டது. அன்றியும், "దేవతార్థచికీర్షయా" என்றும், "వరయామాసుః" என்றும் "ధర్మేణ" என்றும் வந்தபிரயோகங்களால் தாரகவதாதிரூபமான தேவகாரியத்

தைச்செய்யும்பொருட்டுக் குமாரசுவாமியவதரிக்கவேண்டுமென்னும் விருப்பத்தால் "తద్గౌరీం కన్యాం శివస్య ధర్మప్రజార్థం వృణీమహే" என்கிற நியாயப்படிச் சிவபத்னியாய்க்கன்னியாவரணப்பிரகாரத்தால் வரித்தார்களென்றும், ஹிமவானும் அப்படியேகன்னிகாதான தர்மமாய்க்கொடுத்தானென்றும், அர்த்தம்வெளிப்பட்டது. மேல் (திரிபதகாம்நதீம்) என்றுவந்தபிரயோகத்தால் மூன்றுபிரிவோடுங்கூடிய நதியென்றுகூறியது பின்னரடையப்போகிறகதியைநோக்கியேயன்றிப் பழமைபாராட்டியன்றென்க. "భగవన్ శ్రోతుమిచ్ఛామి గంగాం త్రిపథగాం నదీం। త్రైలోక్యం ప్రథమాక్రమ్య గతా నదనదీపతిం" என்றுகூறிய்இராமவாக்கியத்தால் மூன்றுபிரிவையடைந்த கங்கையின்வரலாற்றையும், அது சமுத்திரகாமினியான வுண்மையையுங்கேட்க அபேட்சிக்கிறேன் என்று வெளிப்பட்டது. "శైలేంద్రో హిమవాన్నామ ధాతూనామాకరో మహాన్। తస్య కన్యాద్వయం రామరూపేణప్రతిమం భువీత్" என்றுகூறிய விசுவாமித்திர வசனத்தால் ஹிமவானென்கிற சைலராஜனுக்கு ரூபத்தாலொப்பற்ற விரண்டுகன்னிகைகளுண்டென்று பெறப்பட்டது. மேலிரண்டுவாக்கியங்களாலும், (திரிபதகாம்நதீம்)என்றும் (ரூபேணப்ரதிமம்புவீத்)என்றும் வந்தபிரயோகங்களால் வாமனபுராணபத்தநதியே மூன்றுபிரிவோடுங்கூடிய நதீரூபப்பிராப்தியும், அதிகசௌந்தரியசாலியாயிருப்பதனுல சிவவீரியத்தைத் தாங்குதற்குயோக்யமானசக்தியுமுடையவளென்பதாய்க் கன்யாரூபமாய்ப் பிரம்ஹலோகத்தையடைவிக்கப்பட்டாளென்கிற அர்த்தம் கிரகிக்கப்பட்டது. மூன்றுபிரிவாவது ஒன்றுபிரம்ஹலோகத்தில் நதீரூபப்பிராப்தியும், ஒன்றுபகீரதப்பிரீத்யர்த்தமாய்ப்பூமியில்வந்ததும், மற்றொன்றுபாதலத்திற்பிரவேசித்ததுமாகநிச்சயமென்க, ஆயின், பிரம்ஹலோகத்தில் சலரூபத்தையடைந்ததுகூறாமல்விட்டதென்னையெனின், அது ஸ்ரீராமனுல்கேட்கப்படாமையால்விடப்பட்டதாயினும்இடம்வந்துழியெல்லாஞ்சூசிக்கப்பட்டேயிருக்கின்றது. குமாரசுவாமிஅவதாரத்தைவிரும்பிப்பிரம்ஹதேவனையடைந்த தேவர்க்களைநோக்கி "ఇయమాకాశగంగాయస్యాం పుత్రం హుతాశనః। జనయిష్యంతి దేవానాం సేనాపతిమరిందమం। జ్యేష్ఠా శైలేంద్రదుహితా జనయిష్యంతి తేసుతం। ఉమాయాస్తద్బహుమతం భవిష్యతి న సంశయః" என்றுகூறியபிரம்ஹவாக்கியத்தால் இந்தஆகாசகங்கையினிடத்தில் தேவசேனாதிபதியை அக்னிபகவானுண்டுபண்ணப்போகிறானென்றும், ஹிமவானுடைய

ஜியேஷ்டபுத்திரியால் அந்தப்புத்திரனுண்டாவது உமாதேவியாருக்குஞ்சம்மதமாகப் போகிறதென்றும பெறப்பட்டதில் "ఇయమాకాశగంగా" என்றுபிரம்ஹலோகசாந்நித்யம் கங்கைககுக் கூறப்பட்டது. அன்றியும், "ఇయం హైమవతీ గంగా జ్యేష్ఠా హిమవతస్సుతా" என்றுபகீரதனை நோக்கிப் பிரம்ஹதேவர் கூறியவசனத்தால் இவள்ஹிமவானுடைய ஜியேஷடபுத்திரியாகியகங்கையென்று வெளிப்பட்டதனுலும் இவள் என்னுஞ்சாமீப்யம் சித்தித்ததென்க. பிரம்ஹலோகத்தினின்றுங் கூடவந்ததாகவேயின்னுமோராளமாய்க் கூறப்பட்டிருத்தலால் பிரம்ஹலோகத்திலேயே நதீரூபபிராப்தி சித்தித்ததென்பது இராமாயணத்தாலும் வெளிப்பட்டது.

இதுகாறுங் கூறிவந்தநியாயங்களால் கங்கை ஹிமவானுடைய ஜியேஷ்டபுத்திரியாய் மேனகையென்னுந்தாய்வயிற்றுத்தவளென்றும், உமையாகியசகோதரியைப்பெற்றுக்குடிலாநாமத்தோடு வளர்ந்தவளென்றும், தேவர்க்களால் பிரம்ஹலோகத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கேபிரம்ஹசாபத்தினல் நதீரூபபிராப்தியடைந்தவளென்றும், அக்னியினல்பானம்பண்ணப்பட்ட சிவவீர்யத்தைத்தரித்துக்குமாரசுவாமியையுண்டுபண்ணினவளென்றும் நிச்சயிக்கப்பட்டது.

கங்கைபூமியில் வந்ததுமதனைச்
சங்கரர்சடையிற் றரித்ததுமுரைத்தது.

"కరిష్యామి మహాభాగ వచస్తేనాత్ర సంశయః। వేగస్తు మమ దుర్ధార్యం పతన్త్యా గగనాచ్యుతం। న క్షమస్త్రిషు లోకేషు కశ్చిద్ధారయితుం నృప। అనన్యవిబుధశ్రేష్ఠాన్నీలకంఠాన్మహేశ్వరాత్" என்னும் பாரதவசனத்தால பூஜ்யனுகியபகீரதனே! உன்சொற்படியே நான் செய்கிறேன். சந்தேகம்வேண்டாம், ஆகாசத்திலே நின்றும் விழாநின்ற வெனதுவேகத்தைத்தரிப்பதற்குச் சர்வதேவச்சிரோஷ்டப்பிரபுவாகிய சிவபெருமானன்றித்திரிலோகத்திலும் வேறெவனுஞ்சக்தனன்று என்று கங்கைகூறியதாக வெளிப்பட்டது. இதனுல் பகீரதன் பூமியில் வரும்படித்தவங்கிடந்து கங்கையை வேண்டினனென்றும், அப்படியே வரவிசைந்தும் தன்னைப்பூமியில் நின்று தாங்குஞ்சக்தியுடையா ரொருவருமில்லாமைகண்டு சிவபெருமானெருவரோ அது செய்யவல்லவரென்று கங்கை கூறினளென்றும் பெறப்பட்டது.

இன்னும், "కోపిధారయితుంవేగం పతంత్యామేమహీతలే । నచేద్భూమితలంభిత్వా నృపయాస్యేరసాతలం" என்கிறவசனத்தால் பூமியில்விழாநின்ற என்னுடையவேகத்தை எவன்தரிப்பானென்றும், என்னைதரிக்காவிடில்நான் பூமியைப்பிளந்துகொண்டுபாதலத்தைச்சேருவேனென்றுங் கங்கைகூறினதாக வெளிப்பட்டது. இந்தவாக்கியத்தால் பகீரதனை நோக்கி இந்தவுலகத்தில் என்னைத்தாங்குவா ரொருவருமில்லையென்றது பதியாகியசிவனைநீக்கிக்கொள்ளப்பட்டது. இதற்குப்பிரத்யுத்தரம், ஷ்ரீ பாகவதம், பகீரதவசனம்: "ధారయేద్భృశతీవేగంరుద్రస్త్వాత్మా శరీరిణాం। యస్మిన్నోతమిదంప్రోతంవిశ్వంశాటీవతంతుషు" என்னும் வாக்கியத்தால் அத்யுக்ரமாகிய கங்கையைத்தரிப்பது தேவாசுரமனுஷ்யர்களிலொருவராலும் சாத்தியமாகாமையை நோக்கிச்சர்வஜகத்காரணரும், சமஸ்தசரீர அந்தராத்மாவுமாகிய சிவபெருமான் உன்துவேகத்தைத்தரிப்பாரென்று பெறப்பட்டது. இதனால், மேல்வாக்கியத்தில் கங்கைகூறியது ஜகத்காரணரும், அந்தராத்மாவுமாந்தன்மையொழிந்த சேதனகோடிகளையென்றேயினிது வெளிப்பட்டது, அன்றியும், "గంగాయాఃపతనంరాజన్ పృథివీనసహిష్యతే । తాంవైధారయితుంవీర నాన్యంపశ్యామిశూలినః" என்னும் இராமாயணவசனத்தால் பகீரதனை நோக்கிக் கங்கையானது ஆகாசத்திலேநின்றும் பூமியில்விழுந்தால் பூமிசகிக்கமாட்டாது. அதனைத்தரிப்பதற்குச் சூலபாணியாகிய சிவபெருமானைக் காட்டிலும், வேறொருவனையும் நான் நினைக்கவில்லையென்றுபிரம்ஹாதேவர் கூறியதாகவெளிப்பட்டது. இதனால், கங்கையெப்படிப் பூமியில்வரப்போகிறதென்று ஏங்கித்தவங்கிடந்த பகீரதனுக்குப் பிரம்ஹாவெளிப்பட்டு அவனுக்கு அது அடையுமுபாயங்கற்பித்தருளினமை பெறப்பட்டது.

மேல்வாக்கியங்களால் கங்கைபூமியில்வருவதற்குப் பகீரதனே காரணமென்றும், அவன் வேண்டாக்கால் கங்கையினுடைய பிரஸ்தாபம் பூமியிலொன்றுமில்லையென்றும், அவன் வேண்டியபடி அவன் பொருட்டே கங்கைபூமியில் வரவிசைந்தும் அவளைத்தாங்குனரில்லாக்கால் உலகத்தையழித்துப் பிலமுகத்திற்பாய்ந்து பெருங்கேடு செய்வளென்பது தெரிந்து அவளையடக்கித்தரிப்பதற்கு ஆற்றலுடையவர் சிவபெருமானொருவரேயென்று பகீரதன் கண்டானென்றும் வெளியாகின்றது.

இனி, "ధారయిష్యే మహాబాహో గగనాత్ప్రచ్యుతాం శివాం। దివ్యాం దేవనదీం పుణ్యాం త్వత్కృతే నృపసత్తమ" என்னும் பாரதவசனத்தால் பகீரதனை நோக்கி; நரேந்திரனே! ஆகாசத்திலேநின்றும் விழப்போகிற பரிசுத்தமானகங்கையை உன்பொருட்டுநான் தரிக்கின்றேனென்று சிவபெருமான்கூறினராகவெளிப்பட்டது. இராமாயணத்தில்; "తతో హైమవతీ జ్యేష్ఠా సర్వలోకనమస్కృతా। తదా సాతిమహద్రూపం కృత్వా వేగం చ దుస్సహం। ఆకాశాదపతద్రామ శివే శివశిరస్యుత" என்னும் வசனத்தால் சர்வலோகநமஸ்கிருதையும், ஜ்யேஷ்டையுமாகிய ஹிமவானுடைய புத்திரியானவள் பெருத்தரூபத்துடன் அத்யுக்ரவேகமாய் ஆகாசத்திலேநின்றும் மங்களகரமான சிவபெருமானுடைய சிரசில் விழுந்தாளெனவும் "సా తస్మిన్ పతితా పుణ్యా పుణ్యే రుద్రస్య మూర్ధని। హిమవత్ప్రతిమే రామ జటామండలగహ్వరే" என்னும் வசனத்தால் அந்தப்புண்ணியரூபியாகிய ஹைமவதியானவள் இமாசலத்துக் கொப்பானதும், பாதலத்தைப்போல் ஜடாமண்டலத்தையுடையதுமாகிய ஸ்ரீருத்ரமூர்த்தியினுடைய சிரசில் விழுந்தாளெனவும், "గంధర్వోరగయక్షాశ్చ సమాజగ్ముర్దిదృక్షవః। తతః ప్రపాత గగనా ద్గంగా హిమవతస్సుతా" என்னும் வசனத்தால் கந்தர்வாள், யக்ஷாள் முதலியவர்களெல்லாம் பார்க்கும்படி ஆகாசத்திலேநின்றும் சைலராஜ சுதையாகிய கங்கைவிழுந்தாளெனவும்பெறப்பட்டது. அன்றியும், "సముద్ధతమహావర్త్తా మీనగ్రాహసమాకులాం। తాం దధార హరో రాజన్ గంగాం గగనమేఖలాం" என்னும் வசனத்தால் சுழிகளோடுங்கூடி மச்சமகரங்களைவாரிக்கொண்டு ஆகாசத்திலேநின்றும் விழுந்த கங்கையைச் சிவபெருமான் தரித்தருளினரொன்றும், "ప్లావనార్థం నరశ్రేష్ఠ పుణ్యేన సలిలేన చ। గంగాయా ధారణం కృత్వా హరో లోకనమస్కృతః" என்னும் வசனத்தால் சகரர்களனைத்துப் பரிசுத்தமாக்கும்பொருட்டுச் சர்வலோகவந்திதராகிய சிவபெருமான் கங்கையைத்தரித்தருளினரொன்றும் பெறப்பட்டது.

மேல்வாக்கியங்களால் பகீரதன் செய்ததவத்தைமகிழ்ந்து சிவபெருமான் வெளிப்பட்டு உன்வேண்டுகோளின்படிக் கங்கையையடக்கித்தரிக்கிறேனென்று வாக்குக்கொடுத்ததற்கிசைய அதிவேகத்துடன் தன்னுடைய சிரசில்விழுந்த கங்கையைத் தரித்தருளினரொன்று பெறப்பட்டது. அன்றியும், பகீரதன் கங்கையைப் பூமியில்வரித்த காரணமும் வெளிப்பட்டது. எங்ஙனமெனின், சகரர்களனைத்துப்

பரிசுத்தமாக்கும்பொருட்டு என்றுவந்தசம்பந்தத்தைப் பரியாலோசிப்பாம். இராமாயணம், பாலகாண்டம் "ஸது:கவசமாவிஷ்ட" என்றற்றொடக்கத்து வசனங்களால் அசமஞ்சனுடைய புத்திரன் அம்சுமானென்பவன் கபிலருடையஉளங்காரத்தினல் பஸ்மராசியாய் விழுந்திருக்கும் சகரபுத்திராளேக்கண்டு துக்கித்து, அவர்களுக்கு உத்தரகிரியை செய்யவேண்டிஜலத்தைத்தேடுகையில், ஜலம் எங்கும் லபிக்காமல்வருந்துகிறசமயத்தில், கருடபகவான்அங்குவந்து ஓ அம்சுமானே! இவர்களுடையவதம்லோகசம்மதமானதினல் துக்கிக்கவேண்டாம். கபிலருடையகோபத்தினல்தகிக்கப்பட்டார்களாதலால் இவர்களுக்கு லௌகிகமான உதககிரியைசெய்யற்பாலதன்று. இமவானுடைய ஜ்யேஷ்டபுத்திரியான கங்கையைக்கொண்டுவந்து அந்தக் கங்கையாலுதககிரியை செய்தால் பஸ்மராசியாய்க்கிடக்குமிவர்கட்கு லோகபாவனியான கங்கை சொர்க்கத்தைக்கொடுப்பாளென்று சொன்னதாகப் பெறப்பட்டதன்றியும், "த்ரிம்ஶத்வர்ஷஸஹஸ்ராணி" என்றற்றொடக்கத்துவசனங்களால்அம்சுமான் முப்பத்திராயிரம்வருடம் தவஞ்செய்தும் இஷ்டசித்தியடையாமல் காலமடைந்தபிறகு, திலீபனென்பவன் முப்பதினயிரம்வருடம்அரசாண்டு கங்கையை அடையுமுபாயமறியாமல் காலங்கழித்தானெனவும், பிறகு பகீரதன் முயன்று கங்கையைப்பூமியில்வரித்துப் பஸ்மராசியாய்க்கிடந்த சகரர்களைக் கங்காசலத்தில் மூழ்குவித்து அவர்கள்சொர்க்கத்தையடையும்படிச் செய்தானெனவும் பெறப்பட்டது.

இதனல்,கங்கைபூமியில்வருங்காரணம், பகீரதன்அவளைவரித்தகாரணம், சிவன்அவளைப்பரித்தகாரணமுதலியபகுப்பியாவும்நன்கு வெளிப்பட்டது. இதுநிற்க,சிவபெருமானுடையசிரசில்விழுந்தகங்கையானவள்என்னுடையவேகத்தினல் சங்கரனைத்தள்ளிக்கொண்டுபாதலத்திற் பிரவேசிக்கிறேனென்றுசிந்தித்தாளெனவும், அப்போது சிவபெருமானதையறிந்துஅவளைமறைக்க நினைத்தமாத்திரத்தில் கங்கை பூமிக்குவரும்படிமிகவும்பிரயாசத்தோடியெத்தனித்தும் ஜடாமண்டலத்தில் மோகத்தையடைந்து அவ்விடத்தினின்றும் வெளிப்படக்கூடச்சக்தியில்லாமல் அங்கேயே அனேகவருடங்கள்சுற்றிக்கொண்டிருந்தாளெனவும், அப்போது பகீரதன்அந்தக்கங்கையைக்காணுமல் மறுபடியும் சிவனைநோக்கி உக்கிரமானதவஞ்செய்ததைமகிழ்ந்து சிவ

பெருமான் இமயமலையிலிருக்கும் பிந்துசரசுஎன்னுமிடத்தில் கங்கையைவிட்டாரெனவும்,அப்படிவிடப்பட்டகங்கையேழுநதிகளாகப்பிரிந்து ஹ்லாதினி, பாவனி, நளினிஎன்னும்பேரையுடையமூன்று நதிகள் கிழக்குநோக்கியும், சுசக்ஷு,சிதை,சிந்து, என்னும்பேரையுடையமூன்று நதிகள்மேற்கு நோக்கியும் போயினவாக, ஏழாவதுபகீரதன் இரதத்தின்பேரிலேறி முன்னடக்கஅவனுடன்கூடநடந்தது எனவும் இராமாயணம்,பாலகாண்டத்திற்கூறனேபெறப்பட்டது. இன்னும்இராமாயணம்பாலகாண்டம், “తచ్ఛఙ్కరశిరోభ్రష్టం భ్రష్టంభూమితలేపునః। వ్యరోచతతదా తోయంనిర్మలంగతకల్మషమ్। తత్రదేవర్షిగన్ధర్వావసుధాతలవాసినః। భవాఙ్గపతితంతోయంపవిత్రమితిపస్పృశుః” என்றற்றெடக்கத்துவசனங்களால்சங்கரருடையசிரசினின்றும்பூமியில் விழுந்தஅந்தக்கங்காசலம்பாபமன்றியில் நிர்மலமாய்ப்பிரகாசித்தது. அந்தஜலத்தில்தேவர்கள், முனிவர்கள்முதலானவர்களும் பூமியிலுள்ளவர்களும்பவாங்கத்தினின்றும்விழுந்தது ஆகையால் பரிசுத்தமென்றுஸ்நானம்செய்தார்கள்எனவும், சாபத்தினுல்சுவர்க்கத்தினின்றும் பூமியில் நழுவிவிழுந்தவர்களும் அந்த ஜலத்தில் ஸ்நானம்பண்ணிச் சாபத்தினின்றும் விடுபட்டவர்களாய்ப் பாபத்தையுதறிவிட்டுமறுபடியுந்தங்களுடைய லோகங்களை யடைந்தார்களெனவும், சமஸ்தலோகமும்அதில்ஸ்தானம்பண்ணிச் சோகரகிதமாகிச்சந்தோஷத்துடன்விளங்கிற்றுஎனவும் பெறப்பட்டது. (நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால்வழியோடிப் - புல்லுக்குமாங்கேபொசியுமாம்) என்றபடிப் பகீரதனுக்காக அவனுடையைபாட்டன்மார் உத்தரகிரியையின் பொருட்டுப் பவாங்கத்தினின்றும் பரிசுத்தத்தைப்பெற்றுப் பூமியிலிழிந்தகங்கையின் பிரயோசனம் பகீரதனுக்கேயன்றி வேற்றிடங்களிலும் சித்தித்தமைகாண்க. இம்மட்டேயன்றி, பாரதம் ஆரணியபர்வத்தில் : மஹாத்மாவாகிய அகஸ்தியமுனிவரால்பானம்பண்ணப்பட்டும், லோகபரிசுத்திகரமானதால் சகலலோகோபகாரியாகவுமுள்ள சமுத்திரத்தைப்பூரிக்குமுபாயத்தைக் கேட்கும்படி வந்ததேவர்க்களைநோக்கிப்பகீரதன் தனதுபிதாமகஉத்தாரணத்தின்பொருட்டு கங்கையைக்கொண்டுவரப்போகிறுன். அதனுல்சமுத்திரம் பூர்த்தியாகப்போகிறது. அதனுல்நீங்கியதாபத்தையடையக்கடவீர்களாகவென்றுசொல்லப்பட்டது. இந்தவிசாரத்தால் சிவபெருமான் கங்கையைத்தரித்தருளினது பகீரதபிதாமகனுடைய உத்தாரணமாத்திரமேயன்றிக் கங

கையின்வேகத்தால்பூமிபிளந்து அழியாதவண்ணம்பரிகாரமாகலோக சம்ரக்ஷணார்த்தமாகவும், அகஸ்தியபகவானுல் பானம்பண்ணப்பட்ட சமுத்திரத்தைப் பூரிக்கும்பொருட்டுமென்னு முண்மை வெளியாகின்றது.

இங்ஙனமாக, விஷ்ணுபாதத்தினின்றும்அதுபெருகிய பாவனத்தைக்கருதிச் சிவன்தரித்தாரென்று கூறுந்துர்வாதத்தைநிரசிப்பாம். காளகூடபட்சணமானது மதுரமென்று பட்சிக்கப்படாமல் லோகசம்ரக்ஷணார்த்தமாகப் பகவானுகியசங்கரனுல் எப்படிப்பட்சிக்கப்பட்டதோ அப்படியே கங்காதாரணமும் அவரால் செய்யப்பட்டதென்பது சத்தியம். பாகவதத்தில், “తదుగ్రవేగందిశిదిశ్యుపర్యధో। విసర్పదుత్సర్పదసహ్యవీర్యః। భీతాఃప్రజాఃదుద్రువురంగసేశ్వరాః। అరక్ష్యమాణాశ్శరణంసదాశివం” என்னும் வசனத்தால் திக்குகளிலும் ஆகாசத்திலும் பூமியிலும் பரவிச்சகிக்கக்கூடாத வீரியத்தையுடைய காளகூடத்தி னுக்கிரவேகத்தைக்கண்டு பயந்தவர்களாகி யொருவராலுங்காபாற்றப்படாதவர்களாய்த்தங்கள் பிரபுக்களுட்படப் பிரசைகள் பரமசிவனைச் சரணமாக அடைந்தார்கள் எனவும், “నతేగిరిత్రాఖిలలోకపాల। విరించవైకుంఠసురేంద్రగమ్యం। జ్యోతిఃపరంయత్రరజస్తమశ్చ। సత్త్వంనయద్బ్రహ్మనిరస్తభేదం” என்னும் வசனத்தால், ஹேபரமசிவா! உனது ஜ்யோதியானது திக்பாலகாள், பிரம்ஹா,விஷ்ணு,இந்திரன் இவர்களாலும்அடையக்கூடாதது. சத்வரஜஸ்தமோகுணரகிதமாகவும், பேதரகிதமாகவுமுள்ளது எனவும் பெறப்பட்டது. பின்வசனத்தில், குணவிசேஷங்களாகிய உபாதியோடுகூடிய பிரம்ஹ விஷ்ணுருத்ரபேதரகிதமென்பதும், இவர்களுடைய் சமஷ்டிரூபமானபரமசிவாத்கமென்பதும் நிரஸ்தபேதம் என்பதால் பெறப்பட்டது. இப்படிப்பாகவதத்திற் கூறப்படுமுண்மையால், அநுக்கிரகார்த்தமாகவே காளகூடபக்ஷணம் வெளிப்பட்டதுபோல கங்காதாரணமும் அந்நியசாத்தியமாகாமையால், மேலிடங்களில் காட்டியபாகவத பாரதராமாயணப் பிரமாணங்களாலும் அநுக்கிரகார்த்தமென்றே கொள்ளப்பட்டது.

ஆயின், அப்பாஞ்சராத்திரப் பேயர் விஷ்ணுபாதநிஸ்ருத ஜலமே சிவன்தரித்தா ரென்பதற்குஉதாவது பிரமாணமுண்டோவென்பதைப்பரியாலோசிப்பாம்.

விண்டுவின்பாதகங்கையைசீல
கண்டர்தரித்திலரென்றுகடிந்தது.

பாகவதம் முதல் ஸ்கந்தத்தில், பதினெட்டாவது அத்தியாயத்தில், "అథాపియత్పాదనఖావసృష్టం । జగద్విరించోపహృతార్హణాంభః । సేశంపునాత్యన్యతమోముకుందా । త్కోనామలోకేభగవత్పదార్థః" என்னும் வசனத்தைக்கூறி, இதற்கு அவர் கூறும்பொருளோவெனின், யாதொருவருடைய பாதநகத்திலிருந்து பிரம்ஹாவினல் விடப்பட்டதாயுள்ள பூஜாதீர்த்தமானது ஈசுவரனுடன்ஜகத்தைப் பரிசுத்தம்பண்ணிற்று, அதனல், பகவான் என்கிறபதத்துக்கு அர்த்தமாக வுலகத்தில் யாரைச் சொல்லலாம் என்பதேயாம். இதில் ஈசனென்பது சிவன் என்று அவர்கருதும் பொருளாம். இங்ஙனங்கொள்வது பிசகென்பதை நிரூபிப்பாம். உலகத்துக்குப்பதியாய் விளங்கும் பிரம்ஹாவுக்கு அதிகமாகிய ஞானமும், வைராக்யமும், ஐசுவரியமும், தர்மமும் ஸ்வபாவசித்தமென்று ஹைரண்யகர்ப்பமுதலிய ஆகமங்களிலும், இன்னுஞ்சிலபுராணங்களிலுங் கூறப்பட்டமையால், உலகத்துக்குப்பதியென்னும் பொருளைத்தரும் ஈசனென்னும் பிரயோகம் ஆண்டுப் பிரம்ஹதேவனைநோக்கியேகூறியதெனவறிக. ஆகவே, ஈசனுகிய பிரம்ஹாவுடன் கூடியிருக்கிறஜகத்தைப் பரிசுத்தம்பண்ணிற்று என்றுசொல்லுதலமையும். அந்தவசனத்தில் திரிவிக்கிரம விஷ்ணுசரணஸ்ருதகங்கையை ஈசுவரன்தரித்தானென்று அர்த்தம்வாராமையாலும், அப்படி யிதரபுராணங்களிலும் பிரமாணமில்லாமையாலும், அன்னேர்விரிக்கும்அர்த்தம் அநர்த்தமேயாம். ஈசனென்னும்பதம் சிவனையேபற்றும்ரூடியால் அது பிரமனிடமேறுவது பொருந்தாதெனின், அப்போது விஷ்ணுவுக்கும் அவ்வீசபதம் ரூடியால் செல்லாதாக, அவ்வீசத்வமுதலிய ஷட்குணநிறைவால் சமர்த்திக்கத்தக்க பகவச்சப்தம் அவ்விஷ்ணுவுக்கு நிலைப்பது எங்ஙனங்கூடும்? ஈசத்வத்தைச்சிவனுக்கு ரூடியாக்கினமையால், அதையிழந்தவராகியவிஷ்ணுவுக்குப்பகவானென்கிறபேரும் இரவன்மாத்திரமாகவே யேர்ப்பட்டொழிந்தது. பிள்ளைவரங்கேட்கப்போய்ப் புருஷனையிழந்தவளொத்துப் பகலட்சணம் நாட்டமுயன்று ஈசலட்சணமிழந்தவராயினர். ஈசனல்லாமையால் பகவானல்லாமையும், பகவானல்லாமையால் ஈசனல்லாமையுமாகிய தன்மை வெளிப்படலால், ஒன்றிலொன்று விரோ

தித்து அன்னோர்கூற்றுமுற்றும் பிழைபட்டொழிந்தமைகாண்க. உண்மையில், ஈசனென்பது சிவனுக்கேரூடியாகிப் பிரமவிஷ்ணுக்களுக்கு யௌகிகமாத்திரமாய் வருதல்வழக்காதனோக்கிப் பிரமனையாண்டீசனென்றுகூறியதாம். அப்படியே விஷ்ணுவையும் பகவானென்றதெனவறிக. இதனால், ஈசபதரூடியைப்பெற்றசிவனுக்கே பகவானென்பதும் ரூடியால்சித்தித்தமைகாண்க.

இனி, ஈசனென்பது விஷ்ணுவுக்கே ரூடியெனவும், அதனால், அவ்வீசத்வாதி ஷட்குணங்களைப்பெற்று விளங்குமவரே பகவான் என்றுவெளிப்படுமெனவும்அவர்கூறுவரேல், அதையுஞ்சற்றே பரியாலோசிப்பாம். இப்படிக்கூறவருங்கால், சிவனுக்கே ஈசபதம்ரூடியென்பதொழிந்து சிவனைப்போலவே பிரமனும் அதையௌகிகமாய்ப்பெற்று விளங்கினமை வெளிப்படலால், ஈசனோடுகூடியபிரபஞ்சமென்பது பிரமனோடுகூடிய பிரபஞ்சமென்று யாம்கூறியது நிர்ப்பாதிதமாய்ப் பெறப்பட்டது. அப்போது ஈசத்வம் சிவனுக்குக் கௌணமாதல் எமதுசம்மதமோவெனின், அன்றும். யாம்கூறுவது ஈசத்வம்சிவனுக்கே ரூடியெனவும், விஷ்ணுவுக்கும், பிரமனுக்குங்கௌணமெனவும் அமையும். அப்படியே, அவர்கூறுவது ஈசத்வம் விஷ்ணுவுக்கே ரூடியெனவும், சிவனுக்கும், பிரமனுக்குங்கௌணமெனவும் அமையும். இருவர்கொள்கையாலும் பிரமனுக்கு ஈசத்வம் சம்பவித்தமை கௌணமாத்திரமாவாவது அங்கீகரிக்கப்பட்டமையால், மேல்சுலோகத்திற் போந்தஈசசப்தப்பிரயோசனம் பிரம்ஹாவினிடம் சமர்த்திப்பதிலுண்டாகிய பாதகம்விட்டொழிந்தது. பகவச்சப்தநிரூபணம் யாம்பின்செய்யப்போவதில் விஷ்ணுவுக்குண்டாகிய ஈசத்வலட்சணம் வெட்டவெளியாகுமாகையால், ஆண்டுகண்டுணர்ந்தடங்குக. இங்கேவிரிக்கிற்பெருகும்.

இன்னும்,மைத்திரோயோபநிஷத்தில் பிரம்ஹத்தினுடையராஜசாம்சம்பிரம்ஹாவெனவும், சாத்விகாம்சம் விஷ்ணுவெனவும், தாமசாம்சம்ருத்ரனெனவும் சொல்லப்பட்டிருக்கிறபடியே விஷ்ணுபுராணத்தில் பிரம்ஹ விஷ்ணு ருத்ரர்கள் பிரம்ஹத்தினுடைய சக்திகளென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப்பிரமாணங்களால் திரிமூர்த்திகளுக்கு அதிக்கிரமித்தவேறுபொருளுண்டென்று வெளிப்பட்டதன்றியும், தேவேந்திரன்முதலான சமஸ்தமானபேரும் அதி

னுடைய சக்திகளென்றே நிச்சயிக்கப்பட்டது. அவர்களில், பிரதான சக்திகள் பிரம்ஹ விஷ்ணு ருத்ரர்களென்றும், சர்வேசுவரராயும், சர்வவந்தியராயும், அநாதியாயும், பரமாத்மாவாயும், மஹேசுவரராயும், சூலபாணியாயும் விளங்குவதொன்றுமந்தப் பிரமமெனவுங் கூர்மபுராணத்திற் சொல்லப்பட்டமையுங் காண்க. அந்த விஷ்ணுவானவர் பிரம்ஹத்துக்கு அநந்தரசக்தியாயிருக்கின்றவர். அநந்தரமென்றால், இரண்டாவது என்றுபொருணோர்ந்து அதற்குக்கீழாயிருப்பதொன்றென்று அர்த்தகல்பனத்துக்கிடமாய்ப் பிரகாசியாநின்றது. விஷ்ணுபுராணத்திலேதானே பிரம்ஹத்துக்கு ரூபமாகிய பரமசிவனிடத்தில் அநந்தரசக்தியாயுள்ளவர் விஷ்ணுவென்று சொல்லப்படுகையால் பிரம்ஹத்தினுடைய அமிசமாகியவிஷ்ணுவின் பர்தகிஸ்ருதசலத்தைப் பிரம்ஹமாகிய ஈசுவரன்றனக்குப்பரிசுத்தமுண்டாம்பொருட்டுத் தரித்துக்கொண்டானென்பது கேவலம் அசங்கதமாய்முடிதலால், ஈசனென்கிறபதத்துக்குச் சிவன்என்று ஆண்டுரைக்கும்பொருள் வியபிசாரதோஷத்தை யடைந்தொழிதல் கண்டு, பிரம்ஹாவோடே கூடியஜகத்தைப் பரிசுத்தம்பண்ணிற்று என்று பொருள்கொண்டு குணப்பட்டுய்வாராக.

மேல்விவகாரத்தில் திரிமூர்த்திகளை யதிக்கிரமித்த பரம்பொருளொன்றுண்டென்றுவெளிப்படினும், அந்தமூன்றுமூர்த்திகளில்உருத்திரர் தாமசாம்சமுள்ளவரெனவும், விஷ்ணுசத்வாம்சமுள்ளவரெனவுங்கூறினமையால், விஷ்ணுவைக்காட்டிலும் உருத்திரர்க்கபகர்ஷமுண்டாவது சைவாசாரவிருத்தமாமெனின், அதைப்பரிகரிப்பாம். சூதகீதையில், “అస్తిరుద్రస్యవిప్రేంద్రా అంతస్సత్త్వంబహిస్తమః। విష్ణోరంతస్తమస్సత్త్వంబహిరస్తిరజోగుణః। అంతర్బహిశ్చవిప్రేంద్రా అస్తితస్యప్రజాపతేః। రజసాతమసాక్రాంతౌ బ్రహ్మనారాయణౌ ఖలు” என்னும் வாக்கியத்தால் உருத்திரமூர்த்திக்கு அந்தஸ்ஸத்வமும், பஹிஸ்தமசும், விஷ்ணுவுக்கு அந்தஸ்தமசும், பஹிஸ்ஸ்த்வமும், பிரம்ஹதேவருக்கு அந்தர்ப்பஹிசுகளிரண்டும் ரஜசுமென்னும், பிரம்ஹநாராயணர்கள் ரஜஸ்தமசுகளால் ஆக்கிரமிக்கப்பட்டவர்களென்றும் பெறப்பட்டது. சிவதர்மோத்தரத்தில், “అంతస్సత్త్వగుణోపేతో బహిస్తామససంయుతః। శుద్ధసాత్త్వికఇత్యుక్తశ్శంకరో లోకశంకరః। అంతస్తామససంయుక్తో బహిస్సత్త్వగుణాన్వితః। శుద్ధతామసఇత్యుక్తవిష్ణుస్సా

ధ్ప్రియః పఠః" என்னும் வாக்கியத்தால் மேல்சூதகீதையிற்பெறப்பட்ட வாறே நிச்சயிக்கப்பட்டுச் சிவனைச்சுத்தசாத்விகனென்றும், விஷ்ணுவைச்சுத்ததாமசனென்றும் நிச்சயித்திருக்கின்றது. இந்தநியாயங்களால், விஷ்ணுவைச்சத்வாம்சமென்றும், உருத்திரனைத் தாமசாம்சமென்றும் மேற்கூறியசாத்ருசம் வெளிப்பட்டமைகாண்க.

சிவனுக்குஅந்தஸ்ஸத்வமும்,விஷ்ணுவுக்குஅந்தஸ்தமசுங்கூறியதென்னையெனின்,ஞானமோஹங்களுடையராதல்பற்றியென்க. இருவரும் ஞானமோஹங்களுடையவர்களென்பதை நடனமூர்த்தியாகிய சபேசனிடத்தும், சயனமூர்த்தியாகிய கோவிந்தராஜனிடத்துங்கண்டுணர்க. சயனம் நித்திரையைப்பற்றிவந்தமோஹமென்பது சொல்லாமேயமையும். உள்ளத்தின்குணமே வெளித்தோன்றுகையால் சிவனுடையரூபம் சுவேதமும், விஷ்ணுவினுடையரூபம் நீலமுமாய் விளங்கியதுகாண்க. ஆயின், இவர்களில் பாஹ்யகுணம் விஷ்ணுவுக்குச் சத்வமும், சிவனுக்குத்தமசுங்கூறிய தென்னையெனின், ஸ்திதிலயங்களைநோக்கியாம். சிவனுடையசம்ஹாரம்ஆத்மாக்களிளைப்பாறுமிடமாகையால்கேவலம்சத்வமேயாகி வியாவஹாரிகதிருஷ்டியாதாம்சம்போன்றுவிளங்கும். விஷ்ணுவினுடையரக்ஷகம் துக்கஹேதுவேயன்றிச் சுகோதயமாகாமையால் கேவலம் தமசேயாகி வியாவஹாரிகதிருஷ்டியாசத்வம்போன்று விளங்கும். இவ்வுண்மையைச் சுஷுப்திஸ்வப்நங்களால் கண்டறிவாராக. இந்தவிவகாரத்தால் குணமூர்த்திகளுண்மை வெளிப்பட்டதன்றிக் குணாதிதரும், துரீயஸ்வரூபருமாகிய பரசிவமூர்த்தி யுண்மை வெளிப்பட்டதின்றுகையால், அவ்வுண்மையைச் சற்றுவிசாரிப்பாம். பிரம்ஹோபநிஷத்தில் : "అథాస్య పురుషస్య చత్వారి స్థానాని భవంతి హృదయం కంఠం మూర్ధా తత్ర చతుష్పాదం బ్రహ్మ విభాతి జాగరితే బ్రహ్మా । స్వప్నే విష్ణుస్సుషుప్తౌ రుద్రస్తురీయమక్షరమాదిత్యో విష్ణుశ్చేశ్వరశ్చేతి" என்னும் வாக்கியத்தால் புருஷனுக்கு ஸ்தானங்கள் நான்கென்றும், அவை, நாபி, ஹ்ருதயம், கண்டம், சிரசு என்றுவெளியாகிச்சாக்கிரத்தில் பிரமனும், ஸ்வப்நத்தில் விஷ்ணுவும், சுஷுப்தியில் உருத்திரனும், துரியத்தில் அக்ஷரசப்தவாச்யரும், சூரியமண்டலாந்தர்வர்த்தியும், வியாபகசைதன்யருமாகிய ஸ்ரீபரசிவமூர்த்தியும் அதிதெய்வங்களாக விளங்குகிறார்களென்று பெறப்பட்டது. இதனால், நான்கா

வது தத்வம் வெளியாகி "నతత్రదేవారుషయఃపితర-ఈశతే" என்கிறவாக்கி யத்தால் அந்ததுரியதத்துவத்தில், தததிரிக்தமான தேவர்க்களும், ரிஷிகளும், பிதிர்க்களும் ஈசர்களாகமாட்டார்களென்று பெறப்பட்டத னால் அநங்யேசுவரத்வமும், "ఏకోదేవస్సర్వభూతేషుగూఢః" என்கிற வாக்கி யத்தால் ஏகமாயுள்ள அந்ததத்வம் சமஸ்தபூதாவாச்சின்னமாயுள்ள தென்று பெறப்பட்டதனால் சர்வாந்தரியாமித்வமுஞ் சாதிக்கப்பட் டது. தாபநீயோபநிஷத்தில், "అకారంబ్రహ్మాణంనాభౌవుకారంవిష్ణుంహృద యేమకారంరుద్రంభ్రూమధ్యే" என்றற்றொடக்கத்தால் நாபிஹ்ருதயப்ரும த்தியங்களில் அகாராதிமாத்திராத்திரய வாச்சியர்களான பிரம்ஹ விஷ்ணு ருத்ரர்களுககு உபாசனவிதானஞ்சொல்லியபின்னர் "ఓంకా రంసర్వేశ్వరంద్వాదశాంతే" என்று சமஷ்டிப்பிரணவவாச்யமாயும், துவா தசாந்தோபாஸ்யமாயும், சர்வைசுவரியசாலியாயும், மூர்த்தித்திரயா தீதமாயும் பிரதிபாதிக்கப்பட்டு, "బ్రహ్మవిష్ణురుద్రేన్ద్రాస్సమ్ప్రసూయన్తేనకార ణంకారణంతుధ్యేయస్సర్వైశ్వర్యసమ్పన్నశ్శమ్భురాకాశమధ్యే" என்னும் அதர் வசிகாவசனத்தால் பிரம்ஹ விஷ்ணு ருத்ரேந்திராதிகள் பிறப்பிக்கப் படுகிறார்களென்றும், அதனால் அவர்கள் ஜகத்காரணரல்லரென்றும், சர்வைசுவரியசம்பன்னனும், சகலஜகதீசனும், அந்தருபாசனவிதிக ளால் தியானிக்கப்படுபவனும், தஹராகாசமத்தியகதனாகிய சம்புசப்த வாச்சியனுமாகிய பரமசிவனே ஜகத்காரணவஸ்துவென்று பெறப்ப ட்டதனால், மூன்றுதத்வங்களுக்கும் அதிக்கிரமித்ததத்வம் சம்புசப்த ரூடிவாசகத்தால் வெளிப்பட்டது. அந்ததத்வம், "ఉమాసహాయంపర మేశ్వరంప్రభుం। త్రిలోచనంనీలకంఠంప్రశాంతం। ధ్యాత్వామునిర్గచ్ఛతిభూతయోని। సమస్తసాక్షింతమసఃపరస్తాత్" என்கிற கைவல்யோபநிஷத்வாக்கியத் தால் உமாசஹாயத்வமும், பரமைசுவரியசாலித்வமும், பிரபுத்வ மும், திரிலோசனத்வமும், நீலகண்டத்வமும், சமதமாத்யநந்தகல் யாணகுணசம்பந்நத்வமுமுடையதாகிச் சமஸ்தசாட்சியும், தமோதி தமுமாய்விளங்குமென்றும், அதனைத்தியானிப்பவர்க்குச் சம்சாரபந் தவிமுக்தியையநுக்கிரகிப்பதென்றும்பெறப்பட்டதன்றியும், "స్థిరేభిరం గైఃపురురూపఉగ్రః" என்கிறருக்வேதவாக்கியத்தால் அநசுவரமானஅவ யவங்களோடுகூடினதும், அநேகவடிவங்களுடையதுமென்று உக்கிர நாமவாசகத்தாற்பெறப்பட்டதனால்,உமாசஹாயநீலகண்டத்வாதிஸ்வ

ரூப திவ்யமங்களவிக்ரஹதே ஜோநிதியாய் விளங்குவது நான்காவது தத்வமாகிய துரியபதமென்று நிரூபிக்கபபட்டது.

ஸ்ரீபாஷ்யத்தில், (అంగాన్వయాద్యనంతమాంగల్యగుణగణమణిజలధేః పరమశివస్య) என்று ஸ்ரீகண்டாசாரியமூர்த்திகள் அருளிச்செய்தவாக்கியத்தால்அங்காவ்யயங்களாகிய அநந்தகல்யாண குண சம்பந்தத்வமுடையவர் ஸ்ரீசிவபெருமானென்று பெறப்பட்ட வுண்மையானுங்காண்க. இன்னும், "தோலுந்துகிலுங்குழையுஞ்சுருடோடும், பால்வெள்ளைநீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ், சூலமுந்தொக்கவளையுமுடைத்தொன்மைக், கோலமேநோக்கிக்குளிர்ந்தூதாய்கோத்தும்பீ" என்று நம் பரமாசாரியமூர்த்திகளருளியதிருவாக்காலும் அநாதிசித்தத்வம்வெளிப்பட்டது. இவ்வுண்மை விசாரத்தாற்பெறப்பட்ட குணாதீதமாகியபரசிவமூர்த்தியையறியாது திரிமூர்த்தியந்தர்ப்பூதராகியகுணீபூதருத்ரரையேபரப்பிரம்ஹமென்று சைவர்கள்கொண்டிருப்பதாகமயங்குவார் கோளிரிந்தமைகாண்க. சூதசம்ஹதையில், "ఉమార్ధవిగ్రహశ్శుద్ధస్త్రినేత్రశ్చంద్రశేఖరః । నీలగ్రీవః పరానంద ప్రమోదాత్తాండవప్రియః । బ్రహ్మవిష్ణుమహాదేవైరుపాస్యో గుణమూర్తిభిః" என்னும்வாக்கியத்தால்உமார்த்தவிக்ரஹஸ்வரூபரும், திரிநேத்திரரும், சந்திரசூடரும், நீலகண்டரும், ஆநந்தத்தாண்டவமூர்த்தியுமாகியபரமசிவம் குணமூர்த்திகளாகிய பிரம்ஹ விஷ்ணுருத்ரர்களால் உபாசிக்கப்படுகிறார்என்று பெறப்பட்டதன்றியும், "தேவர்கோவறியாததேவதேவன் செழும்பொழில்கள்பயந்துகாத்தழிக்குமற்றை, மூவர்கோனுய்நின்றமுதல்வன்மூர்த்திமூதாதைமாதாளும் பாகத்தெந்தை" என்றுபெறப்பட்ட அருள்வாக்கியத்தையுஞ்சிந்திப்பாராக. இதனால், துரியதத்வம் நிராகாரமுடையதென்றுகூறும் அரூபவாதிகள் கூற்றுங்கண்டிக்கப்பட்டது.

மேல்விவகாரத்தால், திரிமூர்த்திகளில் ஒருவராகிய உருத்திரைப்பிரம்ஹத்தினுடையதாமசமென்றுகூறியஅர்த்தம் வெளிப்பட்டதன்றியும், அவ்வுருத்திரரோ சைவத்திற்பெறப்பட்ட பிரம்ஹமல்லவென்பதும் ஏர்ப்பட்டதாகையால், அந்தக்குணமூர்த்திகளில் ஒருவரும், அந்தஸ்தமசுடையவருமாகிய விஷ்ணுவினுடையபாதநிஸ்ருதஜலத்தைக்குணாதீதரும், திரிமூர்த்திகளுக்கு ஜங்யஸ்தாநீபூதருமாகிய ஸ்ரீ பரமேசுவரர் தமக்குப பரிசுத்தமுண்டாம்பொருட்டுத்தரித்துக்கொண்டாரென்றுகூறுந்துர்வாதம்நிரஸ்தமாயிற்றென்க.

இங்ஙனநிற்க, குணரீதராகிய ஸ்ரீ பரசிவப்பிரபுவுக்குத் திரிமூர்த்திகள் அம்சமாதல் செல்லாதெனின், அதனைவிசாரிப்பாம். திரிமூர்த்திகளும் மாயாசபளிதராகையால் அன்னோர் சக்திசபளிதனாகியசிவனுக்கு அமிசபூதராதல்தவறும். எங்ஙனமெனின், சக்தியென்பது சூரியனில் வேறாகாதவொளியைப்போல் பரசிவனில்வேறாகாததாதாத்மிய சம்பந்தமுடையதொன்றாம். மாயையென்பது சிற்சொரூபனாகியசிவனில்வேறுபட்ட அசித்தாயிருப்பதொரு பொருளாம். ஆகவே, அசித்தாகியமாயையில் சிவனுக்குத்திருமேனிகூறுதல் அடாது. அம்மாயாதேகம்வருதல் மலபத்தராயுள்ள பசுக்களுக்கேயென்று வேதசிவாகமங்கள் கூறுதலால், அம்மாயையைக்காரியப்படுத்தித் தநுகரணபோகங்களாக ஆன்மாக்களுக்குக்கொடுக்குஞ் சிவனுக்குமம்மாயையிற் றிருமேனி யுண்டாதல் செல்லாமைகாண்க. விஷ்ணுவாதிதேவர்கள்யோனிவாய்ப்பட்டுப் பிறந்துழலல்சுருதிசிஷ்டமாகையால், அங்ஙனம் பிறக்குங்கால் ஆன்மவர்க்கங்களாகுமன்னோர்க்குச் சிவன்மாயையைக் காரியப்படுத்தித் தருவனென்பதுசித்தம். அப்படிச்சிவன் அவர்களுக்கு மாயையைக்காரியப்படுத்தித் தருவதற்குத் தான்சத்திசபளிதனாதல் அவசியமாம். அச்சிவமும், சத்தியும்மரமுங்காழ்ப்பும்போல்வதுண்மையாகையால், அவ்விருபொருளொருமை யித்திறத்ததென்றாகித்தறிக. ஆயின், மலபத்தராகிய விஷ்ணுவாதிபசுக்களை நிர்மலராகியசிவனுக்குச் சக்திகளாகச்சொன்னதுயாதெனின், மேற்கூறிப்போந்தசிவசத்திக்குவேறாய்மாயையானது சிவனிடத்தில் பரிக்கிரஹசம்பந்தத்தைப்பெற்று விளங்கலால் தத்சம்பந்திகளாகிய வன்னோரைச்சக்திகளென்று கூறியுதாம். (நங்கையினனமனைத்துஞ்செய்வதுபோனடனைத்தும், நங்கையினல்செய்விக்குநாயகனை) என்னுந்திருவாக்கைப் பரியாலோசிக்கில்நம்முடைய தேகத்தில்கையானது வேறாகாமலிருப்பதால் அந்தக்கையைத்தேகத்தில் தாதாத்மியசம்பந்த முடைத்தென்றுகூறுவோம். அந்தக்கையில் கோலொன்றுதாங்கி யொருவனையடிக்கையில் அந்தக்கோல் ஷ தேகத்தில் தாதாத்மியசம்பந்தமொழிந்து பரிக்கிரஹ சம்பந்தத்தைப்பெற்றுவிளங்கும். இந்தவிசாரத்தால்ஒருவனையடிப்பதற்குக்கையும், கோலும் சத்திகளென்று பெறப்பட்டினும் இரண்டுசக்திகள் தன்மையும் வெளிப்பட்டது. இதனால், தேகமே கையும், கையே

நேசமுமாகி யொன்றிலொன்று வேறுகாததன்மையும், கையிலிருந்த கோலும், அக்கையும் ஒன்றுகாததன்மையும் வெளிப்பட்டது. கையிலிருந்த கோலாலொருவனையடிக்கையில் அடித்ததுகையா? அல்லது கோலா? என்கையில்கையென்றுகூறினும், அல்லது கோலென்றுகூறினுமமைந்து உண்மைவிசாரத்தில் கோல் கையைவிட்டுநீங்கினலொரு சேட்டையுஞ்செய்யச் சக்தியற்றதாகிய தன்மை வெளிப்பட்டமை காண்க. இப்படியே விஷ்ணுவாதிதேவர்களும் இவனுக்குப்பரிக்கிரக சத்திகளாதல் கண்டறிந்தடங்குக. ஆகவே, விஷ்ணுவாதிதேவர்கள் செய்யுங்கிருத்தியங்கள்சிவனுடைய கிருத்தியங்களெனவே நிச்சயிக்கப்பட்டன. அன்னோர் கோன்மாத்திரமாகவே கிரகிக்கவுரியாராகையால் அவரைச்சத்திகளென்று மேற்கூறிய விஷ்ணுபுராணவாக்கியசம்பந்தமித்திறத்ததென விவேகிகள்துணிதல்கூடும். இந்நியாயங்களால் குணுதீதராகியசிவனுக்குக்குணமூர்த்திகள் அம்சபூதராதல்யாண்டமையுமென்னுங் கடா விறைபெற்றொழிந்தமையால், மேல் அவ்விஷ்ணுவின்பாதத்தில்வழிந்தசலத்தை நமதுகர்த்தாதரித்தாரென்று அவர்புதுமைகாட்டித்திரியும்மற்றைவசனங்களையும்பரிகரிப்பாம்.

பாகவதம் மூன்றாவதுஸ்கந்தம், இருபத்தோராவது அத்தியாயத்தில் "యచ్ఛౌచనిస్సృతసరిత్ప్రవరోదకేన।తీర్థేనమూర్ధ్న్యధికృతేనశివశ్శివోభూత్" என்னும் வசனத்தைக்கூறி, அதற்கு அவர்கொள்ளும் பொருளோவெனின், யாதொருவிஷ்ணுசரணத்தைஅலம்பியதீர்த்தத்தைப்பரமசிவன் சிரசில்தரித்துக்கொண்டதனல் பரிசுத்தத்தையடைந்தாரோ, அந்தசரணமே தியானிக்கத்தக்கதுஎன்பதாம். மேல் யாம்விளக்கிய நியாயங்களால் விஷ்ணுபாதஸ்ருதகங்கைசிவனுல்தரிக்கப்படாமை வெளிப்பட்டமையால், அன்னோர் அநர்த்தம்படப் புலம்புமாபாசங்க ளசாமஞ்சசமேயாம். அதனையின்னும்பரியாலோசிப்பாம். சங்கரசம்ஹிதையில், "యదాప్రభృతవాన్శంభుస్తం దేవంభృతశాకృతిం। తాడితే సతివేత్రేణప్రహారంద్విగుణంపునః।పశ్చాద్భాగేభుజగతాంజంగమస్థావరాత్మనాం। సర్వేష్వపిచలిజ్గేషుదృశ్యతేవేత్రతాడనం। గృహప్రభృతిషూద్భూతాతత్కృతావ్రణవేదనా। తత్రస్థాశ్చజనాస్సర్వేవేత్రతాడనవేదనాం। అనుభూయాశుదదృశుస్సర్వేస్వపిశరేష్వపి। తీరంచపూరితమభూత్విష్ణోర్మ్వాంశంవిశేషతః। బహూనాంకింనృపాంగేపిసంజాతావ్రణవేదనా। రాజాచసచివాస్సర్వేపౌరజానపదాశ్రయాః। సన్తాడితావిస్మితాశ్చవిశే

ఫేణభయాకులాః" என்னும் வாக்கியத்தால் எப்போது அரிமார்த்தன பாண்டியனுனவன் பிட்டுவாணிபஞ்செய்பவள் பொருட்டுக் கூலியாளாகவந்தபகவானைப் பிரம்பினுல்அடித்தானே அப்போதேஅசையும்பொருள், அசையாப்பொருள்யாவும் அவ்வடியையுண்டன. வீடு, மரம், மலை, பானை, சட்டி, சுரர், நரர், பசு, பட்சிமுதலியவற்றின் பின்புறத்திலும் அந்தப்பிரம்படியைக்கண்டு பிரஜைகள் வருந்திஞர்கள். அன்றியும், அரிமர்த்தனனும்ரணத்திஞன் மிகவும்பீடிக்கப்பட்டான். மந்திரிகள், பட்டணத்திலுள்ளவர்கள், தேசத்திலுள்ளவர்கள் அனைவரும் பின்புறத்திலுண்டாகியகாயத்திஞல் விசேஷபீடையும், ஆச்சரியமும், பயமுமுள்ளவர்களானுர்கள். உடனே அந்தப்பிட்டுவிற்பவள் பங்காகிய வெட்டுமடையும்உறுதியாகக்கட்டப்பட்டதாய்த்தோன்றிற்றுஎன்றுபெறப்பட்டது. இந்தவசனத்தால் ஜடசித்துக்களாயுள்ள சர்வப்பிரபஞ்சாதிஷ்டான மூர்த்தியாகிய பரசிவன் றன்மை வெளிப்பட்டமையால், இன்னகல்யாண குணகநிதியாகியவப்பரமேசுவரன், அவனசைவித்தாலசைந்தும், அறிவித்தாலறிந்தும் இயங்குமோர்ஜந்துவாகிய விஷ்ணுவின்காலலம்பியஜலத்தால் பரிசுத்தத்தையடைந்தானென்பது கேவலம் அசங்கதமாயிற்றென்க.

அன்றியும், ஆதித்யபுராணத்தில் "బ్రహ్మాణ్డానామసంఖ్యానాం బ్రహ్మవిష్ణుభవాత్మనాం। ఉద్భవే ప్రళయే హేతుర్మహాదేవ ఇతి శ్రుతః" என்னும்வசனத்தால் கணக்கில்லாதபிரம்ஹவிஷ்ணுஸ்வரூபமாகிய பிரம்ஹாண்டங்களுடையவுற்பத்தி, பிரளயம்இவைகளுக்கு ஹேதுவாயிருக்கின்றவரும், அநேககோடிபிரம்ஹாண்டங்களில் பிரம்ஹவிஷ்ணுருத்ரர்களையுற்பத்தி லயம்பண்ணுதற்குக் காரணமாயிருக்கின்றவரும், மஹாதேவர்என்றுபெறப்பட்டது. சாந்தோக்கியசுருதியில் "త్వం దేవేషు బ్రాహ్మణోఽస్యహం మనుష్యేషు బ్రాహ్మణః। వై బ్రాహ్మణం ఉపధావతి। ఉపధావామీతి। విష్ణుర్వై క్షత్రియో బ్రహ్మా వైశ్య ఇతి" என்னும்வாக்கியத்தால்பிரம்ஹாவைசியனெனவும், விஷ்ணு க்ஷத்திரியனெனவும், ஈசுவரன் பிராம்ஹணனெனவும்வெளிப்பட்டது. இந்தப்பிரமாணங்களைப்பரியாலோசிக்கில் அநேகபிரம்ஹாண்டங்களிலொன்ருகியஇந்தப்பிரம்ஹாண்டத்திலடங்கினவராயும், பிராம்ஹணவர்நத்துக்கிரண்டாவதாகிய க்ஷத்திரிய வர்நத்தையுடையவராயும், பிரம்ஹத்தையுபாசித்துக்கொண்டிருக்கின்றவ

யாயும்விளங்கும் விஷ்ணுவின்காலலம்பிய சலத்தைச்சகலாண்டகோடிகளுக்கும்யஜமானனாகியபரமசிவன் பாவனார்த்தமாகச்சிரசில்தரித்துக் கொண்டாரென்பது கேவலம்அயோக்யமாதல்காண்க. அந்தச் சுலோகத்தில், சிவ:, சிவோபூத்என்றுசொன்னமையால் சிவ:—வேதமானது, சிவோபூத்—விஷ்ணுவின் காலலம்பியஜலத்தைச் சிரசில்தரித்து இதரமாகிய சப்தஜாலங்களுக்குள்ளே தான் உத்கிருஷ்டத்தை அடைந்ததுஎன்றேஅர்த்தம் கிரகிக்கப்படுமென்க. எனவே, வேதம் அந்தச்சலத்தைச்சிரசிலேதாங்கி அதன்மகிமையைப்பிரதிபாதிக்கின்றது என்று பொருள்சாலும். "సితాసితే సరితే యత్ర సంగతే తత్రాప్లుతాసో దివముత్పతంతి" என்னும் வேதமந்திரத்தில் கருமையும் வெண்மையுமாயுள்ளநதியெங்குசேர்ந்ததோ அவ்விடத்தில்மூழ்கினபோர் சொர்க்கத்தையடைவார்களென்று பெறப்பட்டதேசான்றும். மேற்போந்த நியாயங்களால் யாம்கூறியஅர்த்த மன்றிக்கே அன்யதாபொருள் கூறுவதற்குப் பிரமாணங்காணாமையாலும், பாரதராமாயணவாமனபுராணாதிகள்விரோதிக்கின்றமையாலும் எம்மசித்தாந்தமேசால்புடைத்தெனவறிக.

இனிப்பாகவதம் எட்டாவதுஸ்கந்தத்தில், "తత్పాదశౌచం కలికల్మషాపహం। స్వధర్మ... ఉరుగాయమంగళం। యద్దేవదేవో గిరిశశ్చంద్రమౌళిః। దధారమూర్ధ్నా పరయాచ భక్త్యా" என்னும்வசனத்தால், தேவதேவராயும், சந்திரமௌளியாயும் விளங்கும் ஈசுவரன் கலிகல்மஷங்களைப்போக்கடியாநின்ற அந்தவிஷ்ணுவின் காலலம்பியசலத்தைச் சிரசில்தரித்தார் என்றுஅர்த்தங்கூறிமகிழ்வர். இதுவும் அநர்த்தமேயாம். இதற்குப் பொருள், யாதொருகங்கையைச்சந்திரமௌளிதரித்தாரோ அதற்குச் சாத்ருசமாகிய வாமனசரணக்ஷாளனசலத்தைப் பலிச்சக்கிரவர்த்தி தரித்தானென்றுமேலோர் தெளிந்துரைப்பரென்க. மேல்தேவதேவ னென்றுகூறினமையால் தேவர்களுக்குத் தெய்வமாகியசிவன் தேவர்களி லொருவராகிய விஷ்ணுபாதசலத்தைத்தாங்குவது அசப்யமெனவறிக. ஒருவாக்கியத்திலேதானே சிவனையும், விஷ்ணுவையும் பிரஸ்தாபித்துச்சிவனைத்தேவதேவனென்றுசொல்லுகையில், விஷ்ணு தேவனென்பதுசொல்லாமேயமையும். ஆகவே, தேவராகியவிஷ்ணுவைநோக்கத் தேவதேவராகிய சிவன் அபகர்ஷராதல் செல்லாதுசெல்லாது.

"తమీశ్వరాణాంపరమంమహేశ్వరం । తందేవతానాంపరమంచదైవతం" என்னும் சுருதிவாக்கியத்தானும்சிவனேமஹேசரெனவும்,தேவதேவராகியமகாதேவரெனவுங்கூறினமைகாண்க. தேவதேவராகியசிவனுக்கும்பெருமையுடைமையால் அவ்விஷ்ணுபாதசலம் சிவன் தரித்தாரெனின், தேவதேவராகிய சிவனுக்கும்பெரியதேவரானபோது அவ்விஷ்ணுவைத் தேவதேவதேவரென்று சொல்லவரும். அப்படியேமஹாதேவதேவரென்றுஞ் சொல்லவரும். தேவதேவரென்பது மஹாதேவரென்று வெளிப்பட்டவுண்மையால். இப்படிப்பரிஹசிக்கும் பண்பிற்சான்ற அவ்விஷ்ணுவாதிக்யம்சாலவழகுடைத்து! அழகுடைத்து!! கலிகல்மஷங்களைப்போக்கடிக்கும் பாதசலம் என்றமைகொண்டும், தேவதேவரா யுள்ளவருக்குக் கலிகல்மஷங்கூறுதல்குற்றமாகி, அதற்குமேல், சாமானியதேவனுக்குக் கலிகல்மஷத்தைப்போக்குந்தன்மையுண்டெனலுந்தாழ்வாகி, பலிச்சக்கிரவர்த்தியினுடைய கலிகல்மஷங்களைப் போக்குந் தகுதியுடையானெனலேயுரியதாகி, அவ்வாற்றலுடைமை நோக்கியே ஷ திரிவிக்ரமசரணஸ்ருதகங்கையைப்பலிச்சக்கிரவர்த்திதரித்தாரென்றுயாம்கூறியது சமர்த்திக்கப்பட்டதென்க. இன்னும் விரிக்கிற்பெருகும்.

பாகவதம், ஒன்பதாவதுஸ்கந்தத்தில், "శ్రీరాజ్ఞా[illegible] ఈశః స్వః । యద్ధారావహితోగంగాంపాదపూతజలాంహరః" என்னும் வசனத்தால், சர்வலோகஹிதராகிய பரமசிவன், அரசனாகியபகிரதனால் வேண்டப்பட்டவராகி, விஷ்ணுவினுடைய பாதத்தினாற் பரிசுத்தத்தைப்பெற்ற தீர்த்தமாகியகங்கையைச் சிரசில்தரித்தார் என்று பொருள்கூறுவர். மேலிடங்களில் கங்கையைநோக்கிப் பகிரதன் சர்வாத்மரூபியாயிருக்கும் பரமேசுவரர்தானே உன்னுடையவேகத்தைத்தரிக்கவேண்டியதுஎன்றும், வஸ்திரத்தைநெய்யும், நெய்யற்கோல்போல் உளர்த்துவாதோ லோகங்களாயுள்ள சமஸ்தமானவண்டங்களும் அவருடையசுவாதீனமாகவேயிருக்கிறது என்றும் சொன்னமையாலும்,இந்தவசனத்தில், சர்வலோகஹிதரென்றுபெறப்பட்டமையாலும், எல்லாஅண்டங்களையுந் தாமே சுதந்தரமாகவுடையவரெனவும், அவ்வண்டங்களில் வசிக்கும் உயிர்களுக்குத்தாமே ஹிதத்தைச் செய்கின்றவரெனவும், அப்படியேபகிரதனுடைய வேண்டுகோளால் கங்கை பூமியில் வருங்காலுலகத்துக்குண்டாகும்ஆபத்தைத்தவிர்க்கும் பொ

ருட்டேஹிதத்தைநாடி அந்தக்கங்கையைத் தாம்தரித்தருளினரென வும் நிராடங்கமாய்ப்பெறப்படுகின்றது. இந்தவுண்மையால் மேலபச வ்யார்த்தம் பாழ்பட்டொழிதலால், அதற்கு மேலோர்கூறும் பொருளைச்சிந்திப்பாம். "యోసౌసర్వగతోవిష్ణుః చిత్స్వరూపీనిరంజనః। సఏవద్రవరూపేణ గంగాంభో నాత్రసంశయః" என்னும் பிரமாணவசனத்தால் யாதொருசர்வகதரான விஷ்ணுவானவர்சிற்சொரூபரும், நிரஞ்சனருமாயுள்ளாரோ, அவர்தானே திரவரூபமாகிய கங்காஜலமாயிருக்கிறார், இதில் சமிசயமில்லை; என்று பெறப்படலால் மேல்சுலோகத்துக்குப் பதம்என்றால், அம்சம்என்று கிரகித்து விஷ்ணு அமிசமாகிய ஜலத்தைச்சிவன் சிரசில்தரித்தாரென்பதே சமர்த்திக்கப்பட்டதென்க.

இனி, இராமாயணம் அயோத்யாகாண்டத்தில, "విష్ణుపాదచ్యుతాందివ్యామపాపాం పావనాశనీం। తాంశంకరజటాజూటా ద్భ్రష్టాంసాగరతేజసా" என்னும் வாக்கியத்தால் விஷ்ணுபாதத்தினின்றும் நழுவினதாயும், பரிசுத்தமாயும், பாவங்களைப் போக்கடிப்பதாயும், சங்கருடைய ஜடாமண்டலத்திலிருந்திழிந்ததாயுமுள்ளது கங்கையென்றுபொருள் கூறுவர். மேலிடங்களில் விஸ்தரித்துக் காட்டிய இராமாயணப்பிரமாணங்களால் கங்கோற்பத்தி, தத்தாரணமுதலியன வினிதுபெறப்பட்ட பிரஸ்தாபங்களில் விஷ்ணுபாத சம்பந்தம் அந்தக்கங்கைக்கு வந்ததாக எங்கும் பெறப்படாதொழிய, அநாமத்தாய் ஈண்டு அவ் விஷ்ணுபாத சம்பந்தமதற்குண்டென்று பிதற்றவந்ததுஎன்னமதி? அதற்குப்பிரமாணமெங்கே? இங்கேயேன்சொல்லாமல்விடப்பட்டது? இராமாயணத்தால்பெறப்படாதகதையைஅவாந்தரகல்பனமாகக்கொண்டு ஈண்டிழுவாடவந்தது செல்லாது செல்லாது. மற்றையதனுண்மைப்பொருளைச்சிந்திக்கில், விஷ்ணுபாதமென்றால்விஷ்ணுபதமென்றுவியாகரணரீதியாய்வரும். விஷ்ணுபதமென்றால ஆகாசத்துக்குப் பெயராகையால் ஆகாசத்திலிருந்து நழுவியகங்கையே அவர்தரித்தாரென்றுஉண்மை வெளிப்பட்டது. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனி, பாத்மபுராணம் உத்தரகண்டம் (சூ௰)வது அத்தியாயத்தில் "అథసర్వేశ్వరోవిష్ణు ర్ద్వితీయంపాదముత్తమం। దివిప్రసారయామాస బ్రహ్మలోకాంతమచ్యుతః। తతఃప్రథమనాదృష్ట్వాచక్రపద్మాదిచిహ్నితం। శ్రీపాదందేవదేవస్య హర్షసమ్ప్లుతచేతసా। ధన్యోస్మ్యతివదన్బ్రహ్మా గృహీత్వాస్వకమండలుం। భక్త్యాప్ర

ఘ్నాళయామాసతత్రసంస్థితవారిణా। అక్షయ్యమభవత్తోయంతస్యవిష్ణోఃప్రసాదతః।తత్తు ర్మేరుశిఖరేవపాతవిమలంజలం। తాందృష్ట్వామేరుమధ్యాత్తుప్రవహన్తీంశుభాననే। ఆత్మ నఃపావనార్థాయశిరసాతామధారయం" என்னும் வாக்கியங்களால் சர்வே சுவரனுகிய விஷ்ணுபகவான் இரண்டாவது பாதத்தைப்பிரம்ஹலோ கபரியந்தம் நீட்டினுனெனவும், அப்போதுபிரம்ஹதேவர் சங்கம், பது மமுதலியரேகைகளாகிய அடையாளங்களால் விஷ்ணுபாதமென்று கண்டு அதிகசந்தோஷத்தையுடைந்து நான் தன்னியனேனென்று சிந்தித்தவராகித் தன்னுடையகமண்டலத்திலிருக்கும்ஜலத்தையெடு த்து விஷ்ணுபாதத்தையலம்பினு னெனவும், அந்தஜலம் விஷ்ணுவின் பிரசாதத்தினுல்அக்ஷயமாய் மேருபர்வதத்தின்பேரில்விழுந்தபோது, அங்கிருந்துபிரவாகமாய் வருகிறநதியைப் பரிசுத்தத்தின்பொருட்டுச் சிரசினுல்தரித்தோம் என்று பார்வதியாரைப் பார்த்துச் சிவன்சொன் னுனெனவும்பொருள்கூறுவர். இந்தவசனத்தில், (அதாரயம்)என்னும் பிரயோக மிருத்தலால், இதற்குஅர்த்தம் வியாகரணரீதியாய் நம்மு டைய சம்பந்திகளாகிய பிரம்ஹாமுதலியவர்களைத் தரிக்கச்செய் தோம் என்றேவெளிப்படாநிற்கும். ஆகையால், மேற்போந்த அச ங்கதார்த்தம் நிரஸ்தமாயிற்றெனக. யாதாமொரு பெரியவாளைவரி த்து அவர்களுடைய பாதத்தை யலம்பிப்பூசிக்கையில் அந்தத்தீர்த்தத் தைப்பூஜித்தபேர்கள் தங்கள் பாவனுர்த்தமாகச் சிரசாதரிப்பதுபரம தருமமாகையாலும்,அப்படியேஅநுஷ்டான முண்டாகையாலும் பிர ம்ஹாவினுலலம்பிய வந்தத்தீர்த்தத்தை அந்தப் பிரம்ஹதேவரே தரித்தாரென்பதுசர்வசம்பிரதிபன்னமாதல்காண்க. இன்னுமிதற்கு வேருெருபொருளைக்கூறுங்கால் (ஸ்வகமண்டலுங்க்ருஹீத்வா) பிரம் ஹதேவர் தம்முடைய கமண்டலத்தையெடுத்து (தத்ர) அந்தபிரம் ஹலோகத்திலுள்ள சரஸ்வின்ஜலத்தினுல் என்றுகிரகத்துப் பின்னர் விஷ்ணுபாதத்தையலம்பினுரெனவும், அப்போதுவிஷ்ணுவின்பிரசா தத்தால்சரஸ்வின்ஜலமானது அக்ஷயமாச்சுதெனவும், அதனுல் பெரு கிவழிந்தஜலம் மேருசிகரத்தில்விழுந்தது எனவும், அதைலோகபாவ னுர்த்தமாய் என்னுடையசிரசில் தரித்தேனென்று சிவன்சொன்னு ரெனவுமமையும். இவைகளன்றி, வாமனசரணக்ஷாளனஜலதாரண ம் சிவனுர்க்குக்கூறுவது பொருந்தாதுபொருந்தாது.

இது நிற்க, விஷ்ணுபுராணத்தில், இரண்டாவது அம்சத்தில் எட்டாவது அத்தியாயத்தில், "వామపాదాంబుజాంగుష్ఠనఖస్రోతోవినిర్గతా । విష్ణోర్బిభర్తియాంభక్త్యాశిరసాహర్నిశంధ్రువః । తతస్సప్తర్షయోయస్యాప్రాణాయామపరాయణాః । తిష్ఠన్తివీచిమాలాభిరూహ్యమానజటాజలే । వార్యోఘైస్సంతతైర్యస్యాః ప్లావితంశశిమండలం । భూయోధికతరాంకాన్తింవహత్యేతదహఃక్షయే । మేరుపృష్ఠేపతత్యుచ్చైర్నిష్క్రాన్తాశశిమండలాత్ । జగతఃపావనార్థాయయాప్రయాతిచతుర్దిశం । సీతాచాలకనందాచచక్షుర్భద్రేతిసంస్థితా । ఏకైవయాచతుర్భేదాదిగ్భేదగతిలక్షణా । భేదంచాలకనన్దాఖ్యంయస్యాశ్శర్వోపిదక్షిణం । దధారశిరసాప్రీత్యా వర్షాణామధికంశతంఇతి" என்னும் வசனங்களால் விஷ்ணுவினுடைய வாமபாதாரவிந்தாங்குஷ்ட நகத்திலிருந்து வெளிப்பட்ட யாதொருகங்கையுண்டோ, அதனைத் துருவன்பக்தியினாலே இராத்திரியும் பகலும் சிரசினாலே தரித்தான் எனவும், பின்னர் அலைகளால் பெருகும் அதில்சப்தரிஷிகள் பிராணாயாமம் செய்துகொண்டிருந்தார்களெனவும், அப்போது, வாயுவின்சமூகத்தினால் ஜலமானது பெருகிச் சந்திரமண்டலத்திற் றங்கினமாத்திரத்தில், அங்கிருந்து ஜகந்துக்களையெல்லாம் பரிசுத்தம்பண்ணவேண்டுமென்று நாலுதிக்கிலும்பிரவேசித்தது எனவும், சுருதை, அளகநந்தை, சக்ஷு, பத்திரை என்னும் பிரிவுகளாகவொன்றேநாலுபேதமாச்சுதெனவும், அவற்றுள், அளகநந்தையென்னும் இரண்டாவது பேதத்தையே ஈசுவரன் பிரீதியாய்ச் சிரசில் நூறுவருஷமாய்த்தரித்தாரெனவும் பொருள்கூறித்திரிவர். இதனைப்பரியாலோசிக்கில், மேல்வாக்கியத்துக்கு அடுத்தவாக்கியங்களில் அந்தஜலமானது ஈசுவரனுடையஜடாகலாபத்திலிருந்துவெளிப்பட்டுச் சகரானுடையஎலும்பைநனைத்துப் பரிசுத்தம்பண்ணினமையால் அவர்கள் சொர்க்கத்தையடைந்தார்களென்றுசொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச்சகரரைப் பரிசுத்தம்பண்ணினஜலம் ஹைமவதி கங்கையேயன்றி விஷ்ணுபதியல்ல. ஆகவே, மேல்வாக்கியத்துக்கு அன்னோர்கூறும்பொருள் பொருந்தாது. மற்றெப்படிப்பொருள்கொள்ளற்பாலதெனின், மேல்வாக்கியத்தில், (விநிர்க்கதா) என்றபிரயோகம் வந்திருத்தலால் வாமபாதாம்புஜாங்குஷ்டநகஸ்ரோதஸ்ஸம்பந்தமற்றதாயுள்ள யாதொருகங்கையைத் துருவன் தரித்தானோவெனக்கொள்ளின், அது ஹைமவதியென்று பொருள்

பட்டுச் சிவன்சிரசாதரித்தது சமர்த்திக்கப்படும். இல்லையேல், இன்னுமநந்தவசம்பவஹேதுபரிகாரமின்றிக்கே யழிவுபெறும். என்னெனின், வாமனுவதாரவிஷயம் வாமனகல்பத்தில்நடந்தேறியது. பகிரதனுடையதபஸ்ஸும், சிவன் கங்கையைத்தரித்ததும் வைவஸ்வதமந்வந்தரத்தில் வராககல்பத்தில் நடந்தேறியது. இந்தக் காலவித்தியாசங்களைப்பார்த்துழி மேல் பிரக்ஷிப்தாபாசம் வெட்டவெளியாகுகையால், மேல்வாக்கியத்தால் விஷ்ணுபாதசம்பந்தம் சிவன்தரித்த கங்கைக்குண்டென்று காட்டவந்த கல்பனுர்த்தம் பாதிதமாயிற்றென்க. அன்றியும், ஸ்ரீமஹாபாரதத்தில், "తచ్ఛ్యుతాత్యంతకాంతప్రపాదా ద్బ్రిష్టాధనిమ్నగా। సరస్సాగరంసాశుపావనీసాగరంగమేతి" என்னும் வசனத்தால, அப்படிப்பட்டரேகைகளாலலங்காரமாய்விளங்கும் பாதத்திலிருந்துவெளியாகிய நதியானது மேருவில்விழுந்து சமுத்திரத்தையடைந்ததுஎன்று சொல்லப்பட்டது. இந்தப்பிரமாண பரியாலோசனையாலும் சமுத்திரகாமினியாய்விட்ட விஷ்ணுபதிக்குப் பரசிவதாரணமாகிய ஹைமவதி கங்காசம்பந்தமில்லையென்பது இனிது நாட்டப்பட்டது. மேல்காட்டிய பாகவதம் திரிதீயஸ்கந்த முதலியவற்றில் விஷ்ணுபதிகங்கையைச் சிவன்தரித்தானென்றுசொல்ல வொருவாறுபொருள்தரினும், பஞ்சமஸ்கந்தத்தில் பாகவதத்திற் சொல்லியபடியே விஷ்ணுபாதத்தினின்று மிழிந்தகங்கை மேருவில்விழுந்து அப்படியே சமுத்திரத்தை யடைந்துவிட்டதென்றே சொல்லப்பட்டிருக்கின்றது. அதையீண்டு விரிவஞ்சியெழுதாதுவிடுத்தாம். பஞ்சமஸ்கந்தம் திரிவிக்கிரமன்கதையையே பிரதிபாதிக்கவந்ததொன்றாக, வதிற் பெறப்படாத விஷ்ணுபதிகங்காதாரணம் மற்றைஸ்கந்தங்களின்வழியாய்ச்சித்திக்குமென்பது எங்ஙனமிசையும்? மற்றைஸ்கந்தங்களில் திரிவிக்கிரமன்கதை வந்ததேயில்லை. ஆகவே, ஆங்காங்குவிஷ்ணுமகிமாவர்நன பிரசம்சாமாத்திரமென்பது வெளிப்படை. பிரசம்சையெனினும் பொருளிருந்தன்றோ வமையுமெனின், அதைவிரிப்பாம். இராமனென்பவன் காவேரியில்சௌசம்பண்ணினான். சோமனென்பவன் யமுனையில் ஸ்நானம்பண்ணினான். அவ்விரண்டும்நதிகளேயன்றி வேறில்லை. இங்ஙனமாக, பீமனென்பவ னேர்ப்பட்டு இராமனுக்குக்கௌரவத்தைநாட்டவெண்ணிஇராமன்நதியில் சௌசம்பண்ணினான், சோமன்நதியில் ஸ்நாம்பண்ணினான் என்று கூறு

மிடத்து அந்தநதிகளின்பேரைக் காட்டாதொழிந்தமையாலும், அவ்விருவரும்படிந்ததுநதியேயாகையாலும், இராமன் சௌசம்பண்ணினநதியிலேதானே சோமன்ஸ்நானம்பண்ணினன்என்றுவெளிப்பட்டு இராமன் சௌசம்பண்ணினதுகொண்டே அதற்குமாஹாத்மியம்வந்ததெனவும, அந்தமாஹாத்மியவிசேஷத்தால் தான் பரிசுத்தத்தையடையவே சோமன் அதில்மூழ்கினனெனவும் பெறப்பட்டுச் சோமனைக்காட்டிலும் இராமனுக்குப் பிரசம்சாபாவத்தால் கௌரவங் கற்பித்தலமையும். இரண்டுக்கும்நதியென்னும்பெயர்வந்ததுகொண்டே அப்பேரொருமையால் இராமனுக்கு மாஹாத்மிய முண்டாயின்மை காண்க. அப்படியே கங்காபத நாமசாமான்யத்தால் விஷ்ணுகாலிற்பிறந்தது கங்கையெனவும், சிவன்சடையிற்றரித்தது கங்கையெனவுங்கூறி அவ்விஷ்ணுபாதகங்கையே சிவன்தரித்த கங்கையென்று விஷ்ணுவுக்கு மாஹாத்மியமுரைத்தலுமமையும். விஷ்ணுகாலலம்பியகங்கை பிரம்ஹகமண்டலுதீர்த்தமும், சிவன்சடையிற் றூங்கியகங்கை ஹைமவதி தீர்த்தமுமாகையா லொன்றுக்கொன்று காலத்தினாலும், தேசத்தினாலும், ஸ்வரூபத்தினாலுஞ்சம்பந்த முண்டானதில்லையென்றுமேதாவியர் துணிந்துரைப்பரென்க. இதனால், அப்பாஞ்சராத்திரபாலிசர் கூறும்வருமபசித்தாந்தம் நிரஸ்தமென்பது கண்டுகொள்க. இன்னுமவர் வேறுவாக்கியங்களைக்காட்டி மேலாபாசக்கோளைநாட்டமுயலினும் அவையுமுன்காட்டிய வாக்கியங்களுக்கு நேரிட்டகதியையே பெற்றொழிதல்திண்ணம் ! திண்ணம் !!

இதுநிற்க, இதுவரையில் யாம்காட்டிப்பரிகரித்த வாக்கியங்களையாமொருபிரமாணமெனக்கொண்டு சமாதானஞ் சொல்லவரவில்லை. அவற்றுளனுமோர்திரணமு மெழும்பினதில்லை யென்று காட்டப்புகுந்ததேயாம். மேற்போந்த பிரமாணங்களில் பாகவதம் என்னுநூல் அஷ்டாதசத்திற் சேராதபெற்றியொன்றே அதுஅப்பிரமாண மென்பதனைவிளக்கும். அப்பெயரையுடையநூல் தேவிமாஹாத்மியங்களைப்பிரதிபாதிக்குமோர் புராணமெனத்துணிந்து தேவிபாகவதமென்று உலகமுழுதுங் கொண்டாடப்பட்டுவருந்தன்மையால். இந்தத்தேசத்தின்மாத்திரமே கிருஷ்ணர் சரித்திரத்தைப் பாகவதமென்று சிலபேதையர் குழிறிவழிகின்றார்கள். இதில்விவாதநேரிட்டுத் தேவிபாகவதம் பிரமாணமா ? கிருஷ்ணபாகவதம் பிரமாணமா? என்னு

மாசங்கையில் பகவதியாரொன்னு மம்மையாரைப்பிரதிபாதிக்கும் புராணமே பாகவதமெனவும், அவர்க்கு அப்பெயர் பகவானுடையபத்தினியாதலேநோக்கிவந்ததுண்மையெனவும், இலக்குமிமுதலியதேவதாஸ்திரீகளுக்கு அப்பெயர்தனித்து வழங்காமைக்குக்காரணம் அன்னோருடையமுதல்வர்க்குப்பகவச்சப்தமுரிமையல்லாமையாலெனவும், கிருஷ்ணபகவான், விஷ்ணுபகவான் என்று நூல்களில் வழுங்குவன வியாசபகவான், அகஸ்தியபகவான் எனவழங்கு மவ்வளவுமாத்திரமேயெனவும், அன்னஹேதுவால் விஷ்ணுவாதிதேவர்கள் ஷட்குணைசுவரியசம்பந்தத்வமுடைய பகவச்சப்தப் பிரதிபாத்யராதல் செல்லாதெனவும், தேவியேபகவதியாரெனவும், அவரையுடையபரசிவப்பிரபுவே பகவானெனவும் பரிஷ்கரிக்கப்பட்டு வேறு ஹேயசித்தாந்தத்தையவலம்பிப்பவராய்ப் பாகவதம் என்னும் பெயர்வழக்கால் கிருஷ்ணர்கதைமுதலியவற்றை யாதாமொருவர் பிரஸ்தாபிப்பரேல் அவர்க்கு அவர்குற்றத்துக்குத்தக்கபடி தண்டம்விதிக்கப்படுமெனவும் வடதேசத்தில் ஜோதிபுரமென்னும் பட்டணத்தரசன் வியவஸ்தைபண்ணித்தீர்மானித்திருக்கின்றமையு மிதற்கோர்நிதரிசனமாம். இவ்வுண்மையறியாது "ఉద్బబర్హాత్మనః కేశౌ" என்னும் பாரதவசனரீதியாய் விஷ்ணுவின்கறுப்புமயிரொன்றினவதாரமாக வெண்ணப்படுங் கிருஷ்ணரைப் பகவான்எனவும், அவர்சம்பந்திகளைப் பாகவதரெனவும், அவர்கதையைப் பாகவதமெனவும் வழங்குவது பொருந்தாது பொருந்தாது.

இது அப்பிரமாணமென்பதை யின்னும் பரியாலோசிப்பாம். எங்ஙனமெனின், இது அஷ்டாதசத்திலொன்றாகுமேல் அஷ்டாதசபுராணங்களுக்குங்கர்த்தா சத்தியவதிசுதரென்றபடி இதற்குமவரே கர்த்தாவாதல்வேண்டும். அங்ஙனமேல், இந்தப்பாகவதத்தில் ஆரம்பத்தில் மங்களசுலோகங்களில் சுகரை நான்நமஸ்கரிக்கிறேன் என்று சத்தியவதிசுதராகிய வியாசர்கூறியதுபழுதாம். பிள்ளையைப் பிதா வணங்குவது கேவலவிருத்தமாகையால். அப்படிவியாசர் சுகரைக் காட்டிலுந் தாழ்ந்தவரல்லாமையால். இதுமாத்திரமேயன்றி அந்த நூலில்விதுர மைத்திரேயசம்வாதம்சொல்லப்பட்டிருக்கிறது. மைத்திரேயர்வேதத்திற் பெறப்பட்டவரும், பராசரமுனிவரால் விஷ்ணுபுராணமுபதேசிக்கப்பெற்றுக்கொண்டவருமாகியவுண்மை வெளிப்

பட்டு அப்போதே அவர்முத்தியடைந்தாரென்பதற்கு விரோதமாய்
விதுரன்காலத்தில்அவருண்டாயிருந்ததாகக்கூறிய துசர்வாபுத்தமென
வறிக. இதுநிற்க, அந்தப்பாகவதம் பரிக்ஷித்துக்குச் சுகப்பிர்ம்ஹரிஷி
சொல்லப்பட்டதாக எழுதப்பட்டிருக்கிறது. சுகர் சிதையின்பிதாவா
கியஜனகரிடம் தத்வோபதேசம்பெற்றுத் தமக்குஞானம் சித்திக்கப்
பெற்றதன்மைய்ய நாரதரால்பரிட்சிக்கப்பெற்றுக்கொண்டு அப்போ
தே ஆகாசமார்க்கத்தெழும்பிச்சூரியமண்டலத்தில்தமதுதேகத்தைத்
தகித்துவிட்டு அதேகமுத்தியாய்ச்சாயுஜ்யத்தையடைந்தாரென்பது
உண்மை. அதன்பிறகேராமனவதாரமும், சிதைவிவாகமும்பெற
ப்படுமாயின், இராமன்காலத்திலேயே பிரஸ்தாபமில்லாதொழிந்து
போன சுகப்பிரம்ஹரிஷி பரிக்ஷித்துக்காலத்தி லுண்டாயிருந்தமை
யெங்ஙனங்கொள்ளப்படும்? இராமன்காலத்துக்கும், பரிக்ஷித்துக்
காலத்துக்குமுண்டாயிருந்த் காலபேதத்தைநோக்குழி மேலுண்மை
விளங்கும். வைவஸ்வதமன்வந்தரத்தில் பத்தொன்பதாவது கிரே
தாயுகத்தில் இராமனவதரித்தது. அந்தயுகத்திலேயே சுகரவதார
முமாம். கிருஷ்ணாவதாரமோவெனின், மேற்படிமன்வந்தரத்தில்
இருபத்தெட்டாவது துவாபரயுகத்தில் நடந்தேறியது. இந்தக்கா
லத்திலேயே பரிக்ஷித்துப் பிரஸ்தாபம் பெறப்பட்டது. ஒன்பது
சதுர்யுகங்களுக்குப்பின் பிறந்தவராகிய பரிக்ஷித்துக்கு ஒன்பதுசது
ர்யுகங்களுக்கு முன்னரேவிதேகமுத்தியடைந்த சுகர்பாகவதமுபதே
சித்தபுதுமையேபுதுமை. இன்னும், ஷ பாகவதாரம்பத்தில் வியா
சமுனிவர் அநேகபுராணங்களையும், பாரதத்தையுஞ்செய்து முடித்
தபின்னர் நாரதனைக்காணநேரிட்டதென்றும், அப்போதுநாரதர்
வியாசனைப்பார்த்து நீசெய்தபுராணங்களிலும், பாரதத்திலும் அதி
கமாய்ச்சிவமகிமைகளைச்சொல்லியிருக்கிறபடியால் அவையசாமஞ்சச
மென்றும், தத்தோஷபரிகாரமாய் விஷ்ணுபாரம்யத்தை விளக்கிச்
சிவாபகர்ஷத்தைநாட்டி யொருபுராணஞ்செய்வது அவசியமென்று
கூறினரென்றும், அதன்பிறகே பாகவதமென்னுநூல் விஷ்ணுபரமா
கச்செய்யப்பட்டதென்றும எழுதப்பட்டிருக்கிறது. வியாசர்எல்லா
விதநூல்களையுஞ்செய்துமுடித்துக் கடைசியாய்ப் பாரதத்தைச்சொ
ன்னரென்றும், அதன்பிறகுஒருநாளும்அவரால்செய்யப்பட்டதில்லை
யென்றும் பாரதத்திலேதானே பெறப்பட்டிருக்கிறது. அதற்கு

விரோதமாய்ப் பாரதத்திற்குப்பிறகு பாகவதஞ்செய்யப்பட்டதென்பது விருத்தம், அப்படிச்செய்யப்பட்ட நூலில் சிவாபகர்ஷங்களே யிருக்கவேண்டியதற்குப்பதிலாய்க் கிருஷ்ணர் கைலாசயாத்திராகமனஞ்செய்தது முதலியசிவோத்கர்ஷங்களும், காளகூடோற்பவசந்தர்ப்பாதிகளில் விஷ்ணுவாதிமூர்த்திகளுக்குண்டான வபகர்ஷங்களுமேபெறப்பட்டிருக்கின்றன. இப்படிமுரணியிருப்பதேயன்றிவிருத்திராசுரவதம், காயத்திரீபிரசம்சை, அந்தத்தில்கிருஷ்ணர்சரித்திரவர்ணனைமுதலியவற்றைக்கூறும்புராணமெதுவோஅதுவேபாகவதமென்றுபாத்மபுராணத்தில்பாகவதலட்சணம்படிக்கப்பட்டிருப்பதற்கு விரோதமாய்க்காயத்திரிபிரஸ்தாபமேபெறப்படாமலும், புராணமுதலிலேதானேகிருஷ்ணர்சரித்திரத்தைக்கூறியும்பிரக்ஷிப்தமாய்க்காணப்படுமவ்வாபாசத்திரட்டைப்பாகவதமென்றலெங்ஙனங்கூடும்? இன்னுமநந்த விரோதங்களுண்டாயிருத்தலை விரிவஞ்சிவிடுத்தாம். ஆகவே, அதுபாகவதமென்பதும், அதனை வியாசர்செய்தாரென்பதும், அதுஅஷ்டாதசத்திலொன்றென்பதும்சர்வாபத்தமென்று துணியப்பட்டது. மற்றையுண்மைவிசாரத்தில் பொப்பதேவன் என்னுமோர் பாபிஷ்டனால் அவன்வினையிருந்தவாறு புலம்பப்பட்டதொருவழுத்திரட்டாமென்று மேலோர்கூறுவர். அது பாகவதமல்லவென்பதைப் பன்னிரண்டாயிரங்கிரந்தத்தால் பங்காளதேசத்தில் கௌடபண்டிதர்கள் தாபித்துநூலொன்றுவெளியிட்டிருத்தலாலீண்டியா மிவ்வளவினிறுத்தினம்.

எப்படிப்பாகவதம் அப்பிரமாணமெனவேர்ப்பட்டதோ, அப்படியேவிஷ்ணுபாத்மோத்தரமும்அப்பிரமாணமென்றதைக்காட்டுவாம். சிலதினங்களுக்குமுன்னர்ப் புதுச்சேரியானொருத்தன் பாத்மோத்தரபுராணம்என்றொருசுவடியைத்தமிழில்பத்தியரூபமாக வெளியிட்டனன். அவன்புத்தகத்துக்குப் பேரிட்டபுதுமையேஅவன்புத்திவிசாலத்தைக்காட்டும். அவ்வவலட்சணத்திரட்டுமூலகிரந்தத்தின்மொழிபெயர்ப்பெனவவன்கூறியபிரமையால்சிலர்மயங்கினுமவன் கொட்டியவவ்வளவுஆபாசங்களும்மூலவழுத்திரட்டினும்பெறப்பட்டதில்லை. அவ்வபண்டித சிரோமணிக்கு அப்போதே பிராயச்சித்தமாகப் (பாத்மோத்தரசாபாசதர்ப்பணம்)என்னுநூலொன்று வெளிப்படுத்திச் சிலமுதியோர் சபேடிகைசெய்ததேபோதும். அவனுக்குமூலமாயிருந்த கி்

வாண பாத்மோத்தரமுங் கல்பனுமாத்திரமென்பதைக் காட்டுவாம். பாத்மபுராணம் பூர்வம், உத்தரம்என்னுமிரண்டுபகுதியில்பாத்மபூர்வத்தில்முழுதும் சிவோத்கர்ஷமஹிமாவர்நனமன்றிவேறில்லை. முக்கியாம்சங்கள் இராமனுக்கு விரஜாதீக்ஷைசெய்வித்தலும், கீதாவுபதேசஞ்செய்தலு மாகியவைகளேயாம். இவைகளுக்கு நேர்விரோதமாய் உத்தரபாகத்தில் சிவநிந்தையேவிஷயமாக வெப்படிப்பிரதிபாதிக்கும்? அனேகருக்கு அவ்விஷத்தில் மயக்கமுண்டாகி, ஒருபாகம் சிவோத்கர்ஷமும், மற்றொருபாகம் சிவாபகர்ஷமுங்கூறுதல் யாண்டமையுமென்னும் பரியாலோசனையிலிருக்கையிலேதானே, அஷ்டாதசபுராணங்களையுமிப்போதிச்சென்னையிலச்சிட்டுவரும் பண்டிதர்சிலர்க்கு மிந்தில்சமிசயம்நேரிட்டுப் பாத்மோத்தரம் யாம் அச்சிடுவதற்கு வெளிதேசத்திலுள்ள பலருந்தங்கள் தங்கள் வசத்திலுள்ளபிரதிகளையெமக்குபகரிக்கவேண்டுமென்று அறிக்கைசெய்தனர். அப்படியே பலவிவேகிகள் அனுப்பியபிரதிகளைப்பார்த்துழிச் சில விஷ்ணுசம்பந்தமுடையனவாகிப் புளியோரைமாந்மிம், சூட்டுக்கோல்மாந்மியமுதலியவைகளைப்பிரதிபாதிப்பனவும், சிலபிரதிகள் பூர்வபாகத்துக்குவிரோதமில்லாமல் பரசிவமகிமைகளையே பிரதிபாதிப்பனவுமாகக் காணப்பட்டன. இதனுல், பாத்மபுராணம் அடஙகலும் சிவபாரம்யமுடையநூலெனவேதுணியப்பட்டுப் பிரகிருதத்தில் பாஞ்சராத்திரிகள் கையாண்டுவரும் விஷ்ணுபாத்மோத்தரம் அவாந்தரமாய்க்கற்பிக்கப்பட்டதொன்றுமென்பது நிச்சயிக்கப்படுகையால், அவ்வசங்கதாலங்காரபிரக்ஷிப்தமாகியபாத்மோத்தரத்தால் சிவன் விஷ்ணுபதியைதரித்தாரொன்றுகூறியது அநாதரணியமென்றேதவிர்க்கப்பட்டது.

இனி, விஷ்ணுபுராணமேனும் பிரமாணமாகுமாவென்பதைச் சற்றேபரியாலோசிப்பாம்.சங்கராசாரியர்(తథాచ విష్ణుపురాణే)என்றுகூறினராகலின், அன்னியசமயியாகியவவர்க்குமொப்பமுடிந்த நூலாமதுவென்றுகொள்ளவரும். அவ்வாசாரியரும்,தீக்ஷிதஸ்வாமிகள்முதலினோருமாண்டாண்டுத் தமதுபாடியமுதலியவற்றில் விஷ்ணுபுராணவாக்கியமெனவிதந்து எடுத்துக்காட்டியுள்ள வுபப்பிரம்ஹணங்களிப்போது பாஞ்சராத்திரிகள்கையாண்டுவரும் விஷ்ணுபுராணத்திற் காணப்படாமையாலன்னவாக்கியங்களை யொழிவுகோடலாகப்பெற்றபுதுமைத்தென்றே அப்புராணம் வெளிப்படாநிற்கும். எப்படி யொழிவு

கோடலைச் சிலவமிசத்தானெய்திற்றே வப்படியே மூன்னில்லாத நவீனச்சார்புகோடலுஞ் சில வமிசத்தானெய்திற்றென்பது சொல்லாமே யமைதலால், உள்ளது அகன்றும், இல்லதுசேர்ந்து மாபாசத்தை யடைந்தவசங்கதப்பகுதியுடைத்தே அஃதென்பது நிச்சயிக்கப்பட்டது. இதனால், சங்கராசாரியர்கூறிய விஷ்ணுபுராணம் தலைமறைந்து போலிவிஷ்ணுபுராணமே யிப்போது தலைகாட்டித்திரியு முண்மையுணர்ந்தபேர் பாஞ்சராத்திரிகள்கூறுமப்புராணத்தை யாதரிக்கமாட்டாரெனவறிக. அன்றே யிதுவேயன்றிப் பிரமாண்டபுராணம் என்னுமோர்கற்பிதப்போலிப்புராணங்கண்டு, அதில் அந்தியஜன், கூரன் முதலியகுடிகேடர்கதைகளும், புளியோரை, சர்க்கரைப்பொங்கல்முதலிய மொத்தையுருட்டுக் கதைகளும், கைகொண்டமட்டும் வரைந்து வைத்துள்ளவராக லினித்திறத்தனவாய பலவாபாசங்களைக்கொட்டுமவர்புராணங்கள்யாவுமேயசப்யமுடையனவென்றறிக. இவ்வுண்மையால் அப்போலிப்புராணத்தில் விஷ்ணுபதீகங்காதாரணத்துக்காதாரம்போல்வதாய்க் காணப்படு மேகதேசவாக்கியமும் பிரக்ஷிப்தமாதல் துணியப்பட்டது. இப்படியே பாஞ்சராத்திரமுதலியனவும் வேதபாஹ்யமாதல்கண்டு சத்துக்கள்பரித்யஜிப்பர். அன்னபிரமாணங்களே அசாமஞ்சசமாகையிலவற்றிற்போந்தனவாகவப்பாஞ்சராத்திரப்பாலிசர்கூறும் ஹேயசித்தாந்தம் சாமஞ்சசமாதலெங்ஙனங்கூடும்? ஆகவே, யாவும் அப்பிரமாணமென்பது வெளிப்படை. இப்படிவிசாரமுகத்தால் அசாமஞ்சசமாய்ப்போகும் பாகவதாதிகளால் பிரக்ஷிப்தமாய்க்கற்பிக்கப்பட்ட விஷ்ணுபதீகங்காதாரணம் சிவனுர்க்குக் கூறுவது தலையெடுக்காமையால் அன்னதோஷபரிகாரத்தை யின்னும் பரியாலோசிப்பாம்.

மேல் (சடு - சசு - சஎ - சஅ) வது பக்கங்களில்யாம்காட்டிய இராமாயணவசனங்களால கங்கைஹிமவானுக்குமேனையென்னுந்தாய்வயிற்றில் குடிலையென்னும்பெயர்தாங்கி உமையாகியசகோதரியோடுபிறந்தவோர் பெண்ணென்றும், அந்தப்பெண்ணைக்கன்னிகாதானதர்மமாய் ஹிமவான்கொடுத்தானென்றும், அவளுக்குச் சலரூபமாகிய வடிவம்பிரம்ஹலோகத்தில் சாபத்தினுல் வந்ததென்றும், அந்தச்சலரூபமாகிய கங்கையே பகீரதன்வேண்டுகோளால் சிவனுல்தரிக்கப்பட்டதென்றும்பெறப்பட்டவுண்மைக்குமாறுய், வாமனனது அங்குஷ்ட

டாகந்தாக்கியதால் அண்டபித்தியுடைந்து அங்கேநின்றும் கங்கையெ
ன்னும்பெயரால் பிரவ்ஹித்தசலத்தையே சிவன்தரித்தானென்றும்,
பிரமன்தன்னுடையகமண்டலசலத்தால் வாமனனது பாதப்ரக்ஷாள
னஞ்செய்கையில் அவன்காலினின்றுமொழுகிய சலத்தையேசிவன்த
ரித்தானென்றும், வாமனனுடையபாதத்தினின்றே கங்கைபிறந்தபோ
து அதைச்சிவன் தரித்தானென்றும் பலவாறு அன்னோர்கூறுமாபாசங்
களசங்கதமாதல்காண்க. மேல்தர்மதாவலம்பனத்தில், விஷ்ணுவினு
டைய காற்பெருவிரனகம்பட்டுடைந்த வூர்த்துவாண்டகடாகத்தினி
ன்றும்பெருகியசலத்தைச்சிவன்தரித்ததுண்மையா? பிரமன்றன்னு
டையகமண்டலதீர்த்தத்தால்வாமனன்பாதத்தைக்ஷாளனஞ்செய்கை
யிலப்பாதத்தினின்றுமொழுகியசலத்தைச்சிவன்தரித்ததுண்மையா?
அல்லது, வாமனனுடைய பாதத்தினின்றே பிறந்துபரிசுத்தத்தைப்
பெற்றசலத்தைச் சிவன்தரித்ததுண்மையா? இவைமூன்றும் ஒன்
றிலொன்று முரணியுதைத்துக்கொள்ளுமுண்மையால், மூன்றும்பிர
க்ஷிப்தமென்பது சொல்லாமேயமையும். இதனால், மேல்வர்ணனைகள்கு
ணவாதமாத்திரமேயன்றி யதார்த்தகதன மாகாதெனவறிக. இந்தவ
ர்ணனையெலலாம் திரிவிக்கிரமன்பாதசம்பந்த சலத்துக்கே யாகையால்,
தஜ்ஜலோற்பவம் அத்திரிவிக்கிரமன் காலத்துக்கு முன்னில்லாமை
யைநாட்டவரும். அங்ஙனமேல், மத்ஸ்யகூர்மவராகநாரஸிம்ஹ அவ
தாரகாலங்களிலும், அதற்குப்பின் மன்வந்தரங்களிலும் கங்கையின்
மஹிமாவர்ணனம் அநந்தமாய்ப்புராணங்களில் விஸ்தரித் துரைக்கப்ப
ட்டமையென்னை? ஆகவே, கங்காவதரணம்மத்ஸ்யகூர்மாதியவதாரங்
களுக்குப்பூர்வமேயாம் மேலேபிரவசனித்துக்காட்டியவிராமாயணரீ
தியாய்ச்சித்தித்தமை சர்வசம்பிரதிபன்னமாதல்காண்க.

இன்னுமந்தப்பாலிசர்கூறும்விசித்திரத்தைச்சற்றே பரியாலோ
சிப்பாம். கங்கைபகீரதனோடுவருகையில் மார்க்கத்தில் ஜன்ஹுஎன்
னுமுனிவர் அதையுள்ளேகிரஹித்துவிட்டபோது பகீரதன்காணாது
தியங்கிப்பிரார்த்திக்கையில், அந்தமுனிவரதனைக்காதின்வழியாகவெ
ளிப்படுத்திய காரணாபேக்ஷியாவெப்படி ஜாந்ஹவிஎன்னும் பெயரை
அந்தக்கங்கையடைந்து ஜன்ஹுபுத்திரியென்றுபசரிக்கப்பட்டதோ,
அப்படியேவிஷ்ணுபாதத்தினின்றும்பிறந்து ஹிமாசலத்திற்பிரவகித்
தஹேதுவால்ஹைமவதியென்னும் பெயரை அந்தக்கங்கை யடைந்
துஹிமவத்ஸுதையென்றுபசரிக்கப்பட்டதேயன்றி வேறில்லையென்

றுகுழறுவர்.. மேல்யாமுதகரித்த வாமனபுராணவசனத்தால் மேனையென்னுந்தாய்வயிற்றிற்பிறந்த வோர்பெண்ணென்றும், அவள்பிரம்ஹலோகத்திற்போனபிறகு அவளுக்கு நதீரூபப்பிராப்திவந்ததென்றும், நெடுங்காலத்தின்பிறகு அங்கேநின்றும்பிரவகித்துப் பகிரதன்பொருட்டுப்பூமிக்குவருகையில் ஹிமாசலமார்க்கமாய் வந்தனளென்றும் பெறப்படுகையால், பிரம்ஹலோக சாந்நித்தியம் அவளுக்குண்டாவதன்முன்னரே ஹிமவானுக்குப் புத்திரியாந்தன்மை சித்தித்தமைபெறப்பட்டது. (ఇయం హైమవతీగంగా జ్యేష్ఠా హిమవతస్సుతా) என்றுபகீரதனைநோக்கி இவள் ஹிமவானுடைய ஜ்யேஷ்டபுத்திரியாகிய கங்கையென்று பிரம்ஹதேவர் சொன்னமையாலும், (ఇయంమాహైమగంగా) என்றமையாலும், ஆகாசத்திலேநின்றும் பூமியில் வருவதன்முன்னரே அந்தக்கங்கைக்கு ஹைமவதியென்னும் பெயருண்டாயிருந்தமையும், பிரம்ஹலோகசாந்நித்யம் பெறப்பட்டமையும் நிச்சயிக்கப்பட்டது. இந்த விசாரத்தால் விஷ்ணுபாதமே அதற்குற்பத்திஸ்தானமென்றும், அங்கேநின்றும் பிரவகித்துவருகையில் மார்க்கத்தில் ஹிமாசலப்பிரவேசசந்தியிற்றானே அதற்கு ஹைமவதியென்னும் பெயர்வந்ததென்றும் பிதற்றும்பேடிவாசகங்கள் சபேடிகைசெய்யப்பட்டனவெனவறிக.

இன்னும், (சஅ, சகூ)வது பக்கங்களில் யாம்காட்டியபாரத பாகவத ராமாயணவசனங்களால் தேவச்சிரேஷ்டராகிய நீலகண்டரைக் காட்டிலும்எனது வேகத்தைத் தரிப்பதற்குச்சக்தாளன்யத்ராகிடையாது என்று கங்கைவாக்கியம் பெறப்பட்டமையாலும், பகீரதன் தவங்கிடந்தபோது பிரம்ஹதேவர்வெளிப்பட்டுக்கங்கைபூமியில்விழுந்தால் அவளைத்தரிப்பதற்குச் சூலபாணியாகிய சிவனைக்காட்டிலும் வேறொருவனையும் நான் நினைக்கவில்லையென்று கூறினமையாலும், சர்வஜகத்காரணரும், அந்தராத்மாவுமாகிய சிவபெருமான் உனது வேகத்தைத் தரிப்பாரென்று கங்கையைநோக்கிப்பகீரதன்கூறினமையாலும் விஷ்ணுமுதலியசாமானியர்கள் அதைத்தாங்குவது துஸ்ஸாத்யமென்பது வெளிப்பட்டது: எங்ஙனமெனின், பிரமன் அதைத்தானே தாங்கச் சத்தியுடையானேல் பகீரதனுக்குச் சிவனைநோக்கித் தவம்புரிகவென்று சொன்னதுபழுதாம். விஷ்ணுதாங்கச்சத்தியுடையாரேல் சிவனையன்றி வேறொருவனையும் நான் நினைக்கவில்லையென்ற

து பிழையாம். பிரமனும் விஷ்ணுவுமே தாங்கச் சத்தியற்றபோது இந்திரன்முதலியவேண்மைகளை நினைக்கவேயிடமின்று. இப்படியேயே னையவசனத்தாலும் சிவாதிக்யம் பெறப்படுதல்காண்க. அன்னிய சாத்தியமல்லாதகங்காதாரணம் சிவனார்க்கேயுரித்தென்று கங்கையும், பகீரதனும், பிரமனுந்தெள்ளிதினுரைத்த சீர்ப்பாட்டால் விஷ்ணு முதலியோர்க்கவ்வாதிக்யஹானி சித்தித்தது திண்ணம்! திண்ணம்!!

இதுநிற்க, மேல்(௫0)வது பக்கத்தில் ஹைமவதியானவள் மங்களகரமான சிவனுடைய சிரசில் விழுந்தாளெனவும், (௫௨) வது பக்கத்தில் சங்கரருடைய சிரசினின்றும் பூமியில்விழுந்த அந்தக்கங்காசலம் பாபமன்றியில் நிர்மலமாய்ப்பிரகாசித்தது. அந்தஜலத்தில் தேவர்கள், முனிவர்கள்முதலானவர்களும், பூமியிலுள்ளவர்களும் பவாங்கத்தினின்றும்விழுந்தது ஆகையால் பரிசுத்தமென்றுஸ்நானஞ்செய்தார்களெனவும்,சர்வலோகவந்திதராகிய சிவபெருமான் கங்கையைத்தரித்தாரெனவும் பெறப்பட்ட வாக்கியங்களைப் பரியாலோசிக்கில், சிவபெருமான் மங்களாகரரெனவும், அவருடைய சிரசில் விழுந்தமைகொண்டே கங்கையும் மங்களாகரையாயினளெனவும், அம்மங்களத்வமறிந்தே பரிசுத்தையாகிய வவளையடைந்து தேவர்கள், முனிவர்கள் முதலாயினோருந் தங்கள் பாவங்களினின்றும் விடுபட்டார்களெனவும், அவ்வாதிக்யமுடைய சிவபெருமான் சர்வலோகவந்திதரெனவும் பெறப்படுகின்றது. ஆயின், மேல் (௫0) வது பக்கத்திற்றானே ஆகாசத்திலேநின்றும் விழப்போகிற பரிசுத்தமானகங்கையை உன்பொருட்டு நான்தரிக்கிறேனென்று சிவபெருமான்பகீரதனைநோக்கி கூறினாரெனவும், அந்தப் புண்ணியரூபியாகிய ஹைமவதியானவள் ஸ்ரீருத்ரமூர்த்தியினுடைய சிரசில் விழுந்தாளெனவும், சர்வலோகநமஸ்கிருதையும், ஜயேஷ்டையுமாகிய ஹைமவதியானவள் மங்களகரமானசிவன்சிரசில்விழுந்தாளெனவும் பெறப்பட்டவாக்கியங்களில் கங்கைக்கும் சிவபெருமான் அவளைத்தரிப்பதன்முன்னரே பரிசுத்தத்வமும்,புண்ணியரூபத்வமும்,சர்வலோகபூஜ்யத்வமும் சித்தித்தல்கூறியதென்னையெனின், அங்ஙனங்கூறியதுகொண்டே யுசிதம்பெறப்பட்டதின்றாம். எங்ஙனமெனின், சந்நிதிகடோறும் சிவலிங்கப்பெருமானுடையபூஜார்த்தம்திருமஞ்சனதீர்த்தமுதலாகச் சேகரிக்கப்பட்ட பூஜா

திரவியமனைத்தும் பரிசுத்தமா? அபரிசுத்தமா? பரிசுத்தமென்பது
சர்வ சம்பிரதிபன்னமாக, வவைசிவப்பிரீதிகரமான வநந்தரம் அதிக
பரிசுத்தம்பெற்றதுண்மையன்றோ? பொன்மலர்நாற்றமுடைத்துஎன்
பதே யன்றோவாண்டுப்புகலாநிற்பர்பு தஜனச்சிரோஷ்டர்? சிவப்பிரீதி
கரமாவதன்முன்ன ரவற்றைச்சுத்தமென்று மாத்திரங்கருதுவதன்
றித்தங்கள்பாவனார்த்தமாக வவற்றையங்கீகரிப்பவர்யாவர்? ஆகவே,
அப்பரிசுத்தத்வாதியாரோபணங்கள் இனியடையப்போகிறநலம்பாரா
ட்டிச்சமர்த்திக்கப்பட்டமைகாண்க. இவ்வுண்மையறியாது கங்காதார
ணாநந்தரம் சிவனார்க்குப் பரிசுத்திகரமுரைப்பது மாபாவிகள் கூற்
றெனத்தவிர்க. இந்தவிசாரத்தால் நிர்மலரும், புண்ணியசொரூபருமா
யுள்ளவர் சர்வலோகவந்திதராகியசிவபெருமானென்னுமுண்மைபெற
ப்பட்டமையால், இன்னகல்யாணகுணகவிக்ரஹமாயுள்ள நம்பரசிவப்
பிரபு, கங்கையைத்தரிக்கவே சத்தியற்றவோர்ஜந்துவாகிய விஷ்ணு
பாதநிஸ்ருதசலத்தைத்தரித்துப் பரிசுத்தரானாரென்று கூறித்திரியும்
அஹங்காரவாதம் நிரஸ்தமாயினமைகாண்க. அப்பாஞ்சராத்திரிகள்
குழறிவழியு மவ்வமங்கலமெத்திறச்சீர்ப்பாட்டினதெனின், சண்டாள
னது பாததீர்த்தபரிக்கிரஹத்தால் பிராம்ஹணன் பரிசுத்தம்மெய்தி
னானென்பதே சால்புடைத்தெனவறிக. விஷ்ணு, சிவனிருவர் தார
தம்யங்களையுநோக்குழி மேலுண்மைநிதரிசனம்போதாதாகையால்.

இன்னும், சிவபெருமான்கங்கையைத்தரித்தகாரணம் மற்றொரு
விதமாகவும் புராணங்கள்கூறும். எங்ஙனமெனின், உமாதேவியா
ரோர்காலத்தில் தமதுநாயகராகியசிவபெருமானுடன் ஏகாந்தமாயிரு
க்கையில் சுவாமியைப்பார்த்துச் சூரியசந்திரர்யாவரென வினவினர்.
அதற்குச்சுவாமிமகிழ்ந்துஅவ்விருவரும் நமதுதிருக்கண்களாமென்ற
னர். உடனேதேவியார்லீலாமாத்திரமாகத்தமதுஇரண்டுதிருக்கரங்க
ளாலும் சுவாமியினுடையவிரண்டுகண்களையும்மூடினர். மூடினவள
வில் எல்லாஉலகங்களுமிருண்டன. அப்போதுசுவாமிதமது நெற்றி
க்கண்ணைவெளிப்படுத்தி யொளியைத்தந்து உலகத்தைநிலைபெறச்
செய்தனர். அந்தச்சமயத்தில் தேவியார்பயந்து தமது திருக்கரங்க
ளைவாங்கிக்கொண்டனர். அப்போது, அவ்விருகரங்களிலும் விளங்
கும் பத்துவிரல்களினின்றும் பத்துவிதகங்கைகள்பிறந்து எல்லா
வுலகங்களையுமழிக்கத்தொடங்குகையில் பிரம விஷ்ணுக்கள்முதலிய

பெருந்தேவர்களெல்லாஞ் சிவபெருமானைத்துதித்துத் தங்களையச்சலார்னவத்தினின்றுங்காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டனர். சிவபெருமான் அதற்கிரங்கி அப்படிப்பிரவஹித்த அந்தக்கங்கைகளனைத்தையுமொன்றாக்கித்தமது ஜடாமண்டலத்திற் றரித்துக்கொண்டனர். அதனால், தேவர்களெல்லாம் சந்தோஷித்தவர்களாய்த்தத்தம்பதங்கள் நிலைக்கப்பெற்றுக்கொண்டனர். அபபோது பிரமனும், விஷ்ணுவும், இந்திரனுமாகியமூவரும் சிவபெருமானைவணங்கித்தங்களுலகங்களுக்குக்கொண்டுபோகும் பொருட்டுக் கொஞ்சம்திர்த்தம் தனித்தனி விரும்பினர். அப்படியே சுவாமிதமதுஜடையினின்றுமவர்களுக்குக்கொடுக்கப்பெற்றுக்கொண்டு அம்மூவருந் தத்தமுலகங்களுக்குக் கொண்டுபோய் வைத்துக்கொண்ட மூன்றில் பிரம்ஹதேவரால் கொண்டுபோகப்பட்ட யாதொருபாகமுண்டோ, அதுவே பிரம்ஹலோகத்தினின்றும் பகீரதன்வேண்டுகோளால் பூமியில்வந்தது. அதனையேமீண்டும் சிவபெருமான் லோகசம்ரக்ஷணார்த்தம் சிரசாதாரணம் பண்ணினாரென்றுபெறப்படுகின்றது. மேல்விசாரங்களால் பிரம்ஹலோகத்தில் ஜலரூபத்தையடைந்திருந்த ஹைமவதியையே பகிரதன்வரித்தபோது சிவபெருமான் தாங்கினாரெனவும், விஷ்ணுபதியையே பகீரதன்பிதாமகவுத்தாரணார்த்தமாகவும், தனதுபாவனார்த்தமாகவும் சிவன்தரித்தாரெனவும், உமாதேவியார்கையிற்பிறந்தகங்கையினோர்பாகம் பிரம்ஹலோகத்திலிருந்ததையே பகீரதன்பொருட்டுச் சிவபெருமான்தரித்தருளினாரெனவும் வெளிப்படுங்கால் இம்மூன்றுமொன்றையொன்று உற்பத்திக்கிரமத்தில் விரோதித்துப்பகீரதன்விஷயமாய்ச்சிவபெருமான்தரித் தருளினாரென்பது மாத்திரம் ஏற்படுகின்றது. உற்பத்தியில்விரோதிக்கின்றமையால் மூன்றும்வேறுவேறுகங்கைகளென்பதுநிச்சயம். பகீரதன்பொருட்டுச் சிவனார்தரித்தாரென்றுபெறப்பட்டமையால் எல்லாமொன்றென்றுசொல்லவரும். இம்மூன்றையும் ஐககண்டமாகவெப்படிக்கொண்டதனால் பகீரதன்விஷயத்தில் சமர்த்திக்கப்பட்டதெனின், இம்மூன்றுஜலங்களும் பூபதனமானபிறகு சமுத்திரகாமினியாகிற சந்தியில் ஒன்றோடொன்றாகலந்து ஓரேசலமாகிறவுண்மையால்அவைகளுக்கு மகிமைகற்பிக்கும்பொருட்டே யொவ்வொன்றையுந் தனித்தனி அர்த்தவாதமாகச்சிவன்தரித்துக் கொண்டாரென்று அவ்வப்புராண

ங்கள்கூறினவென்றறிக. பிரம்ஹலோகத்திலே தானேயிம்மூன்றுங்கலந்தொன்றாகிய பகிரதன் பிரார்த்தித்தபோது பூமியில்வந்ததாகக்கொள்ளக்கூடாதோவெனின், கூடாது. அங்ஙனமேல், பகிரதன் ஹைமவதியையேநோக்கித் தவங்கிடந்ததுபிழையாம். அப்போது அந்தஹைமவதியேவெளிப்பட்டுஎன்னைச்சிவபெருமானன்றித் தாங்குவாரொருவருமில்லையென்றுகூறினதுந்தவறும். இந்தச்சந்தர்ப்பத்தில் மற்றைக்கங்கைகள்சம்பந்தம்பெறப்படாமையால் அவைகளுக்குப்பிரம்ஹலோகத்தில்கலப்புண்டென்பதுகூடாது. அதவாகலப்புண்டாயிருக்கலாமென்று ஒருவர்கருதினும் ஆண்டும்பாதகமின்றென்க. எங்ஙனமெனின், பிரம்ஹலோகத்திலேதானே யொன்றாய்க்கலந்தனவாகக்கருதுமம்மூன்றில் பரசிவதாரணார்த்தம் பகிரதன்உத்தேசித்துத்தவங்கிடந்தது ஹைமவதியென்றே மேல்விசாரத்தால் பிரித்துக்காட்டப்பட்டமையால்ஹைமவதியொன்றேபிராதான்யமெய்தப்பெறுமன்றி யேனையவெல்லாமுனு சிந்திக்கும்யோக்ய முடையனவன்றாம். அவைசேர்ந்திருக்கலாமென்றதுகொண்டே விஷ்ணுபதியைச் சிவன் தரித்தானென்பதென்போலுமெனின், சிவபெருமான்ஹைமவதியைத்தரிக்கையில்அப்பிரவகத்திலலைகளாலடித்துக்கொண்டுவந்த மச்சமகரங்களெல்லாம் அவர் சிரசிலிருக்கலாமென்றதுகொண்டு அவற்றையுந்தமதுபாவனார்த்தம்சிரசாவகித்தானென்றுணர்க்கு மூடவாதம்போல்வதேயாம். அப்படியேஅவர்சிரசில்சந்திரனைத்தரித்தானென்பதும், சர்ப்பங்களைப்பூண்டானென்பதுங் கொள்ளவரும். அப்படியுங் கொள்வாமெனின், கௌத்துவம், துளவமுதலியவற்றை விஷ்ணு தரித்தானென்பது மன்னவேயாய் முடியும். அப்படியே அவர் சலத்திற்கிடப்பதும், சர்ப்பத்திற்கிடப்பது மவலப்பட்டொழியும். இன்னபலவேதுக்களால் விஷ்ணுபதி பிரம்ஹலோகத்திலேதானே ஹைமவதியோடு கலந்திருக்கலாமென்று தலையுடைத்துக்கொண்டு வாதிடுந்துர்வாதம் நிரஸ்தமாயிற்றென்க. விஷ்ணுபதியைப்போலவே பார்வதியார்கரத்தில்வந்த கங்கைக்கும் அபகர்ஷங்கூறுவது சைவாசாரவிருத்தமெனின், பார்வதியார் கரத்தில்வந்தகங்கையால் சிவனார்க்கு மகிமையுண்டானும், சிவபெருமானாலக்கங்கைக்குப் பாவனத்வம் வரினும் இரண்டுமொப்பமுடிந்த ஆசாரமேயாம். (சிவன்சத்திதன்னையீன்றுஞ்சத்திதான்சிவத்தையீன்றும்) என்பது சைவவழக்காதலுண்மையாகையால். இவ்வுண்மையை யான்றோர்வாய்க் கேட்டடங்குக.

மேல்விசாரத்தால் பார்வதியார்கரத்தில் தோன்றியகங்கையை முதலொருதடவைபூரணத்தாலும்,இரண்டாவதுதடவைஅமிசத்தாலுஞ் சிவபெருமான் தரித்தாரென்றேர்ப்பட்ட விரண்டில் முதல்கூறியது யதார்த்தமும், இரண்டாவதுகூறியது அர்த்தவாதமுமென்றுமேதாவியர் துணிந்துரைப்பரென்க. அங்ஙனமேல், பார்வதியார்கரத்திற் பிறந்த கங்கையொன்றும், ஹைமவதிகங்கையொன்றுமாகவிரண்டு கங்கைகள் சிவனார்தரித்ததாகக்கூறவருமேயெனின், அவைகளேயன்றிக்கங்கையும், தத்தாரணமும் சிவனார்க்கு அநாதியே நிருபாதிகமா யுண்டென்று வாயுசங்கிதையிற் கூறப்படுதலுங் காண்க. இப்படியே விஷ்ணுபதியாகியகங்கையுமொன்றுஅமைதல்கூடாதோவெனின், மேல்செய்துமுடித்ததீர்க்கவிசாரத்தால் அங்ஙனங்கூறுவதற்கு அணுத்துணையுமிடம்பெறப்படாமையால் அதுநிரஸ்தமென்க. இந்தவுண்மையால், பகீரதபிதாமகவுத்தாரணார்த்தம்ஹைமவதியொன்றேயன்றி வேறுகங்கைகளையுஞ் சிவபெருமான் தரித்தருளினரென்று இதரபுராணங்களில்கூறுவதுஅர்த்தவாதமென்றே நாட்டப்பட்டது.

இதுநிற்க, திரிவிக்கிரமன் தனதுபாதத்தைமேலேநீட்டியபோது அவன்காலிலேநின்றுங்கங்கைபிறந்துபிரவகித்தாலும், அவன்கால்பட்டு ஊர்த்துவாண்டகடாகம்பேதித்து அங்கேநின்றும்ஜலம்பிரவகித்தாலும், அல்லது பிரமன்தனதுகமண்டலுஜலத்தால்அவன்பாதத்தைக்ஷாளனஞ்செய்ததனால்ஜலம் பிரவகித்தாலும்அந்தஜலம்நேரே அவன்கால்வழியாக வழியுமாகையால் தட்டாமல் அந்தத்திரிவிக்கிரமன்றலையிலேதானேவிழுந்திருக்கலாமென்பதுசொல்லாமேயமையும். ஆகவே, அவன்கால்கழுவியஜலம் அவனுக்கே யபிஷேகமாச்சுதென்பதுவெளிப்படை. அன்றியும், அந்தத்திரிவிக்கிரமன்வாமனனாயிருந்து நீண்டவனாகையால், அந்நீண்டதன்மை சிவப்பிரசாதத்தாலுண்டாச்சுதென்றறியாமல் குறளனாய்வந்ததன்னைநெட்டையனாகநீட்டிய சிவனைமறந்து இறுமாந்தனன். அவ்விறுமாப்போடுமீண்டுங்குறுகப்பார்க்கையில் தன்னிறுமாப்புக்குக் குறுக்கம் வாராமையால் தானுங்குறுகச் சத்தியற்றவனே யாயினன். அப்போது சிவபெருமான் பைரவனைவிடுத்து அவன் முதுகெலும்பைமுறித்து அவனிறுமாப்பையும், அவனையுங்குறுக்கிவிட்டனர். "படிவிண்-முழுதளந்தமாயன் முதுகெலும்பைச்செந்நீ-ரொழுகவேவாங்கினர்வேறுண்டோ" என்னுமிர

ட்டையர்வாக்குண்மையைப்பைப்பலாதம், ஸ்காந்தமுதலியபிரமாண வாயிலாய்க்கண்டுணர்க. அவ்வெலும்பே சிவபெருமான்கையில்தரித் திருக்கும் வீணாதண்டமெனவறிக. இப்படியவதிக்குள்ளாகி யழிந் தொழிந்துபோனவோரற்பஜந்துவின்கலலம்பியஜலத்தைச்சிவபெரு மான்தனதுபாவனார்த்தமாகத்தரித்தாரென்று வாய்வம்பாடித்திரியு மூர்க்கவாதம் அடியோடேமாய்ந்துவிட்டதெனவறிக. "மூன்றடிகேட் டோரடியான் மூதுலகையேயளந்தோ, ரூன்றடியினல் விண்ணுலகளந்தான், ருேன்றுபலி, யெங்கிருந்தானத்ததியிலெங்குவைத்தான்மற்றடிமா, லிங்கிதற் கோதுந் தாதரே" என்றெழும்பேரிடிக்குத் தப்பித்துக்கொள்ள வழி காணுது மூலையிற்பதுங்குமப்பாலிசரென்னே வரியாயமாய்ச் சிவலிங் கையிற்றலைப்பட்டழிவது? ஆச்சரியம்! ஆச்சரியம் !! இன்னும்விரிக் கிற்பெருகும்.

---

## பாணாசுரவிருத்தாந்தம்.

இனிப் பாணாசுரன்சண்டையில் சிவபெருமான்கிருஷ்ணனுக்கு முதுகுகாட்டி யோடினரென்னும் விசித்திரத்தைச்சற்றே விசாரிப் பாம்.

பாணனென்பவன் சிவபெருமானைநோக்கித்தவங்கிடந்து யாவ ராலும் வெல்லுதற்கரிய அனேகவரங்களைப்பெற்றுநிகரில்லாமல்வாழ் ந்துகொண்டிருந்தனன். அவன்சிவாநுக்கிரஹவிசேஷத்தால்ஆயிரம் புஜங்களைப்பெற்றவனாகியிந்திராதிகளைத்தனதுபரிசாரகர்களாக்கிக்கொ ண்டு அமரத்வமுதலிய விசேஷங்களோடு வாழ்ந்துகொண்டிருக்கை யில் சிவபெருமான் அவனுக்குக்கொடுத்தவரப்படியே அவனுடைய தலைவாயிலில் காவல்பூண்டெழுந்தருளியிருந்தனர். அப்போதுவிஷ் ணுமுதலிய தேவர்களெல்லாம் அவனைத்தலையெடுத்துப் பார்ப்பதற் கும்பயந்தவராகியெப்படியிவனுக்கமழியப்போகிறதென்னுமேக்கமே விட்டவராய் வருந்தினின்றனர். அவர்களுடையநல்லகாலத்தால் அந் தப்பாணனுக்கோர் விபரீதந்தோன்றித் தனக்குநேரிட்டிருக்குமைசு வரியங்களெல்லாஞ் சிவாநுக்ரஹத்தால்வந்ததைமறந்து சிவபெரு மானிடம் தானேவலிந்துபோய்ச் சுவாமியைப்பார்த்து எனக்கோ ராயிரங் கைகளிருக்கின்றன, என்முன்னேநின்றுபோராடி யென்

னிரண்டுகைகளுக்கு உத்தரவுசொல்வாரோ வுலகிலில்லை, என்னு
டையஆயிரங்கைகளும்பசபசவெனவூறுகின்றன, அவற்றின்றினவட
ங்க யாரோடாவதுசண்டைசெய்யவெனக்காசையெழுகின்றமையால்
நீரேவாரும்சண்டைசெய்யவாருமென்றழைத்தனன். அதைக்கேட்டருளி
யகருணாசாலியாகியபகவான்அதிலொருஅசூயையுங்கொள்ளாதவராகி
க் கர்வபரிகாரமாத்திரஞ் செய்வதற்கெண்ணி “విషవృక్షోపిసంవృద్ధ్యస్వ
యంఛేత్తుమసాంప్రతం” என்னுநியாயப்படித் தாம்கொடுத்தருளியவரங்
களைத்தாமேயழிப்பது தமது பிரபுத்வஹானியெனக்கொண்டு மற்
றொருவரால்அதைமுடிக்கத்திருவுளம்பூண்டு, அவனைப்பார்த்துஎன்
னோடு சமானமானவொருவனால் உன்னுடைய புஜங்களறுந்துவிழும்
படியான சண்டைவிரைவிலேதானே நடக்குமென்றுகூறினர். அப்
படியே பரசிவப்பிரேரணையால் பாணனுடையமகளாகிய உஷையென்
பவள் கிருஷ்ணனுடையமகனாகிய வநிருத்தனை மோகித்து அவனைக்
களவால் கிரகித்துக்கொண்டனள். அந்தஹேதுவால் கிருஷ்ணனுக்
கும் பாணனுக்குங் கலகமுண்டாகிச் சண்டைக்கேதுவுண்டாயிற்று.
அந்தச்சண்டையில் சிவபெருமான் அவனுக்குக்கொடுத்திருக்கும்வர
த்தின்படியே உபகரிக்கும்பொருட்டுத் தமது பிரமதகணங்கள்சூழத்
தாம்பிரவேசித்தனர். அங்ஙனம்பிரவேசித்தபோது கிருஷ்ணனோடு
சண்டைசெய்து அவனைச்செயித்துவிட்டால் பாணனுக்குச்சண்டை
பிரசக்தமாகாமற்போகிறதன்றியில், அவனுடையபுஜகர்வாபஹாரமா
வதுஞ் சித்தியாமற்போகும். அதனால், கிருஷ்ணனோடுசண்டையிட
த்தொடங்கிய சுவாமியானவர் அபஜயமடைந்தவராக நாடகம்புரிந்த
னர். அப்போது, சிவனால் வெற்றியுண்டாகாமற் போனகுறையை
நிவிர்த்திபண்ணிக்கொள்ளும்பொருட்டுப்பாணன்தானேகிருஷ்ணனை
யெதிர்த்தனன். எதிர்த்து இரண்டுபேருஞ்சண்டைசெய்கையில்பா
ணனுடையபுஜங்களறுபட்டுக்கொண்டேவந்து இன்னுமிரண்டுபுஜங்
கள்சேஷித்திருக்குமவ்வவசரத்தில் சிவபெருமான் அமமட்டிலே நிற்
கவெனக் கிருஷ்ணனுக்குக்குறிப்பித்தனர். அச்சிவாக்ஞையால்பாண
னுடைய இரண்டுகரங்களும் கிருஷ்ணனால்துணிக்கப்படாமல் நிறுத்
தப்பட்டன. இந்தவுண்மை விசாரத்தால் சிவபெருமான் ஓடினது
நடனமாத்திரமெனவும், கிருஷ்ணன்பாணனைவென்றதுசிவனுடைய
இச்சையிசைந்தபடியெனவும் வெளிப்பட்டது.

இவ்வுண்மையறியாமல்கிருஷ்ணனுக்குச்சிவபெருமான் பயந்தேயோடினரென்னும்பாலிசரறியாமையைச் சற்றேபரியாலோசிப்பாம். கிருஷ்ணன் விஷ்ணுவினுடைகறுப்புமயிரொன்றி னவதாரமென்பது பாரதத்தால்விளங்கும். பலராமன்அவனுடைய வெள்ளைமயிரொன்றுனபடி. இந்தமயிரவதாரமூர்த்திகள் சிவனேவென்றகதை குருவுக்குக்குதிரைமுட்டைவாங்கிக்கொடுத்தவதிகாரிக்கேயன்றியேனையோர்க்குப்பயன்படாதெனவறிக. அந்தரோமமூர்த்திகளில்நீலரோமமூர்த்தியாகியகிருஷ்ணன்ஜராசந்தன்பால்விரோதப்பட்டு, அவனால் பலமுறையுத்தத்திலபஜயத்தையடைந்துமுதுகுகாட்டியோடிக்கடலிலொளித்துக்கொண்ட கதையைப்பாரத பாகவதாதிகள்கூறுமுண்மையைப் பரிசரித்துக்கொள்ளவகையறியாமலென்னேவவராழிவது ஆச்சரியம்! ஆச்சரியம்!! இதுவேயன்றிமதுகயிடவர்கதையைநினைக்கினுமவர்மானங்குலையுமே! எங்ஙனமெனின், மதுகயிடவரென்னு மிரண்டசுரர்விஷ்ணுவினுடைய காதுகுறும்பிகளிலுண்டாகிஅவரையே யெதிர்த்துப் போராடுகையில் அவ்வசுரர்பால் நல்லபுடைச்சலுண்டு வருந்தினர். அப்போதுவேறென்றுஞ்செய்யச்சக்தியற்றவராகி அவ்வசுரரைநோக்கியென்னைவருத்தவேண்டாம் விட்டுவிடுங்கோள், நீங்கள்கோரியவரத்தைக்கொடுக்கிறேமென்றனர். அதற்கவர்கள் விஷ்ணுவைநோக்கி எங்களைச்செயிக்கவகையற்றவனாகிய நீ எங்களுக்குவரங்கொடுப்பது மிக்கவழகாமென்றுபரிகசித்துவேண்டுமானாலேதாவதுநீயொருவரத்தைக்கேள், நாங்கள்தருகிறேமென்றனர். இதுதான்சமயமென்றுநீங்களிருவருமென்னால்சாகவரந்தரவேண்டுமென்றிரந்தனர். அப்படியேயவ்வசுரர்கொடுத்தவரத்தாலவரைச் சூழ்ச்சியால்கொன்றுவிட்டவராகியமூலவிஷ்ணுவின்மகிமையே சாலநகைக்கவிடந்தருமெனின், அவருடையசாட்சாத்தவதாரமுமன்றிஅவருடையரோமாவதாரமூர்த்திக்குச் சிவபெருமான்பயந்தோடினரென்பது எங்ஙனந்தலையெடுக்கும்? பாரதயுத்தத்தில், சரீரமெல்லாம்ரக்தமயமாகப்பாணங்களால்துளைக்கப்பட்டுவருந்தியபோது ஆயுதத்தைக்கையாற்றீண்டமாட்டேனென்றுகொண்டிருந்தசபதத்தையுங்கடந்து சக்கரத்தைத்தாங்கிச் சண்டையின்மொத்துண்டும், பௌண்டரீக வாசுதேவனென்பவனால் அவமானத்தையடைந்து முழன்றவோர் கருமயிர்ச்சேய்க்குக்கைலாசநாதன்றேற்றேடினனென்னுங்கபோதிக்கதையை யெந்தவைதிகரோவ

ங்கீகரிப்பவர்? இன்னபலவாபாசங்களைப்பிறப்பினும், தொழிலாலும்பெற்றுழன்றுழிந்த வோர் ஜந்துவாகிய கிருஷ்ணனுக்குச் சர்வலோகசரண்யராகிய சிவபெருமான் பயந்தோடினுரென்பது அசப்யமென்பதை யின்னும்பரியாலோசிப்பாம். பாகவதம், தசமஸ்கந்தத்தில் (సహస్రస్తుత్వయా౽౽దత్తం పరంభారాయమే౽భవత్। త్రైలోక్యే ప్రతియోద్ధారం నలేభే త్వదృతే సమం। కండూత్యా నిభృతైర్దోర్భి ర్యుయుత్సుర్దిగ్గజానహం। ఆద్యాయాం చూర్ణయన్నద్రీన్ భీతాస్తే౽పి ప్రదుద్రువుః। తచ్ఛ్రుత్వా భగవాన్ క్రుద్ధః కేతుస్తే భజ్యతే యదా। త్వద్దర్పఘ్నం భవేన్మూఢ సంయుగే మత్సమేన తే। ఇత్యుక్తః కుమతిర్హృష్టః స్వగృహం ప్రావిశన్నృప) என்றற்றொடக்கத்து வசனங்களால் பாணன் சிவபெருமானைப்பார்த்து ஆயிரங்கைகளெனக்குக்கொடுத்ததுமிகவும்பாரமாகவே யிருக்கின்றது, உம்மையல்லாம லிந்தமூன்றுலோகத்திலும் என்னுடன் யுத்தஞ்செய்கிறவனை நானடையவில்லை, திக்கஜங்களுடன் முட்டினுலவைகள் ஓடிப்போகின்றன, பர்வதங்களை முட்டினு லவைகள் பொடிந்துபோகின்றன, ஆகையாலும்மிடத்திலேதானே வந்தேன்என்று சொன்னபோது அதைக்கேட்டபகவான் கோபித்தவராகி, ஏ மூடனே! எனக்குச்சமானமாகியவொருவனுலுன்னுடைய * டக்கயமஅறுபடப்போகின்றது. அப்போது உன்னுடையபாகுக்களுக்குப் பங்கமுண்டாகுமென்றுசொன்னர். அதனுலவன் சந்துஷ்டனுய்த் தன்னரண்மனையைச் சேர்ந்தான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தவர்த்தங்களையூகிக்குமிடத்துச் சிவனையன்றியில் வேறுஒருபொருளையும் பாணன் மதிக்கவில்லையெனவும், விஷ்ணுமுதலியவர்களு மவனுற்றலுக்கஞ்சியே பதுங்கியிருந்தாரெனவும், தன்னுயிரங்கைகளையும் பயன்படுத்தத்தக்கவிடங் காணுமையா லவைகளை வெறுமனேயவன் றங்கியிருந்தது அவனுக்குப் பாரமாகவே காணப்பட்டதெனவும் பெறப்பட்டது. அன்றியும், எனக்குச்சமானமான வொருவனுலுனது டக்கயம் அறுமடுமெனவும், அப்போது உனது புஜங்களுக்குப் பங்கம்வருமெனவும் அவனைநோக்கிப் பகவான் சொன்னுரென்றதனுல், இனிப்பவிஷ்யத்தில் கிருஷ்ணனுலவனது டக்கயமறுபடுதலும், அவனது புஜகர்வாபஹாரமுண்டாதலும் பெருமானதுதிருவுள்ளத்திசைவெனவும், அந்தப்படிக்குக்கிருஷ்ணனைக்கொண்டு முடிக்கப்போகிற தம்மபிப்பிராயத்தைக் குறிப்பானே வெளிப்

* டக்கயம்=துவசம், அல்லது கொடி.

படுத்தினுனெனவும், அவர் திருவுள்ள மிசையாதபோது அந்தக் கிருஷ்ணனுலொன்றும் பாணனை யசைக்கமுடியா தெனவும் வெளிப்பட்டது. கிருஷ்ணனைக்கொண்டே பாணனுடைய புஜகர்வபஞ்சனஞ்செய்யத்திருவுள்ளத்தெண்ணியுரைத்தவராகிய சுவாமி கிருஷ்ணனுக்குப் பயந்தோடினுரென்றல் யாண்டிசையும்?

இன்னும், பாணனைப்பார்த்து என்னேடொத்த வொருவனுலுனது டக்கயம அறுபடப்போகிறது என்று சொன்ன சுவாமி வார்த்தையின் மகிழ்ந்து அவன் தன்னரண்மனைபோய்ச் சேர்ந்தான் என்று வந்தமையால் பாரமாயிருந்த கைகளொழிந்துபோவது அவனுடைய விஷ்டாபத்தியென்றேர்ப்படுகிறது. அதுபற்றியே கிருஷ்ணனைக்கொண்டு அவைகளைத் துணிப்பித்தனரென வறிக. இதனுல் பாணனுக்குபகாரஞ் செய்தலே சித்தித்தமையின், சிவபக்தனுகிய பாணனைக் கிருஷ்ணன் பரிபவப்படுத்தினுனென்பது அசங்கதமென்க. இதனை யுபாத்தியாயரைக்கொண்டு தன் பிள்ளையைத் தண்டிப்பித்தும், மருத்துவனைக்கொண்டு தன் பிள்ளைக்குவந்த புண்ணை யறுப்பித்து முபகரிக்கும் பிதாவின் செய்கையோடுவமித்தறிவர்கற்றுணர்ந்தமேலோர்.* பாணனுடைய திருஷ்டியில் கண்ணன் சிவனடியாளுகவே காணப்பட்டிருப்பனுதலால்சிவனடியாரால் சிட்சிக்கப்படுத லவனுக்குப் பரிபவமாய்த் தோன்ருதெனவறிக. அத்துணையாதிக்யமாவது கண்ணன்பால்சாருமேயெனின், அவன் சிவபெருமானது பரிக்கிரஹசக்திகோடிகளிலொன்ருய் முடிவானெனி னவனுற்றல் தெய்வத்துக்கே வெளிச்சமாம். புழுக்களும் பஞ்சகிருத்யஞ் செய்யுமாற்றல் சிவாக்ஞையாற் பெற்றிருக்கு முண்மையால். அந்தக்கிருஷ்ணனையே யவனிற் ருழ்ந்த பலரைக்கொண்டு பரிபவமுண்டாகச் செய்தபடி மேல் விவகரித்துக் காட்டப்பட்டிருக்கு முண்மையால். இது நிற்க, பாணன் சிவதீக்ஷாவானுய்ச் சைவசின்னந்தாங்கி நின்ற கண்ணனுல் தனக்குப்பாரமாயிருந்த தோள்களறுக்கப்பட்டமை கொண்டங்ஙனமுபகரித்தபடியாலுமதிகசந்துஷ்டனுயவனை வாழ்த்துதலேசெய்வன். பூர்வமே சிவபெருமானு லெடுத்தோதப் பெற்ற பெருமிதமுங்கண் டுபசரிக்கக் கடமைப்பட்டவனுதலால்.

* இன்னும், சிவபெருமானைத்தனது ஏவலாகவிரும்பிய பாணனுக்குப் பாவமேறுதபடிச் சிட்சித்தமையும் பெறும்.

இவ்வுண்மையை யூன்றி விசாரியாத மந்தமதிகளே சிவநிந்தையிற் றலைப்பட்டழிவர்! அழிவர்!! ஆயின், கிருஷ்ணனையெடுத் தோதுங்கால் என்னோடு சமானமான வொருவனுனது டக்கய மறுபடுமென்று பாணனிடஞ் சிவன் சொன்னமையால் கிருஷ்ணனுக்குச் சிவனோடு சாமியமுண்டாகிறதே யெனின், அது ஔபசாரிகமென்க. சாமானியனொருத்தன் கௌரவஸ்தனொருவனைத் தன்னுடனேரிடத்துக்குவந்து தனக்காக வேண்டிய காரியங்களை முடித்துத் தருகவெனக் கேட்குங்காலவனுடன்போவது தனது கௌரவஹானியென்பதை யுட்கொண்டு அவனுக்கிதஞ்சொல்லித் தனக்குப் பதிலாக வேறொருவனை யனுப்பி யிவனென்னில்சமானமானவன், இவன் வருவதுநான்வருவதுபோலவேகொள், என்னிலுமிவனுலுனக்குஅதிககாரியசாதகங்களுண்டாமென்று போக்குக்காட்டி யநுபவமாய் நடந்துவரும் விவகாரத்தாலுங் கண்டறிந்தடங்குக. இதன்முடிவு அவன்காரியசாதகமாக வேண்டியதொன்றே யாதலால் மேல்வியவஸ்தை சர்வசம்பிரதிமாதல் தெளிந்திடுக.

இப்படிக்கொள்ளாது, கிருஷ்ணனுக்குநேருமபகர்ஷ நிவிர்த்தியர்த்தம் கிருஷ்ணனை யென்னோடு சமானமானவனென்றுசிவன் சொன்னதுபசாரமன்று, உண்மையேயெனக்கொள்வாமெனின், அப்போதும் சமானனாகிய கிருஷ்ணனுக்குச் சிவன்பயந்தோடினுரென்றல்பிழையாம். அன்றியும், இரண்டுசமானப் பொருள்களுண்டாகிப் பிரம்ஹம்சமானுதிகரஹிதமாயுள்ள தென்னுஞ்சுருதியும் பொய்ப்பட்டுப்போம். ஆயின், பாணனிடந் தன்னைக்குறைத்துச் சொல்லக்கூடாமையால் சிவன்தன்னிலு மதிகனுகிய கண்ணனைச்சமானனுகக் கூறினுரென்பாமெனின், அப்போது பாணனைச் சிவன்வெல்ல வகையற்றுச் சொன்னுரென்பது பெறும். தானேவெல்லக் கூடுமாயின் வேறொருவனைக் கூட்டவேண்டியவாவசிகமின்மையால். இல்லை, பாணனைச் சிவன்வெல்லுவதுகூடுமெனின், தானேகௌரமாய் முடிப்பதைவிட்டுப் பின்னர்ப்பாணனுக்காகப்பரிந்துபோய்க் கண்ணனிடம் பரிபவப்பட்டுலையவழி தேடியதென்னை? பின்னேதனக்குப் பரிபவமுண்டா மென்று தெரியாமையா லப்படிச் சொன்னுரெனின், கண்ணனல் பாணனுக்குமாத்திரங் கரங்கள் சேதிக்கப்படு மென்றவர் முன்னரே

தெரிந்துகொண்டதெப்படி ? இப்படிவிசாரிக்கவந்த வுண்மையால், சர்வஞ்ஞராயுள்ள சிவபெருமான் பாணனது புஜகர்வாபஹாரம் கண்ணனாலுண்டா மென்றறிந்து அவ்விருவர்வினைக்கேற்பவவரையொருங்குகூட்டி யொருவனைத் தோற்கச் செய்தும், மற்றொருவனைக்கெலிக்கச்செய்துந்தமதருள் விலாசத்தை நடத்தினரென்றே மேலோர்துணிந்துரைப்பர். இல்லை, பாணனையேகெலிக்கச்சிவனசத்தனுமெனின், அவனுக்குவந்த வாக்கப்பாடெல்லாஞ் சிவனே கொடுத்தானென்பது சாஸ்திரப் பிரசித்தியாகையாலது செல்லாது ! செல்லாது !! இன்னும்பாணன் சிவன்பக்கல் சார்ந்து இந்தமூன்று லோகத்திலும் என்னுடன்யுத்தஞ் செய்கிறவனை நானடைய வில்லையாகையா லுன்னிடம் வந்தேனென்பதும் பொய்யாய்முடியும். என்னெனின், மூன்றுலோகத்திலு மெனக்குச்சமானமான பேரில்லை யென்றதனுல் விஷ்ணுவுங் கழிப்புக் கணக்கிலேதானே யொதுக்கப்பட்டார். அவரிறுதியாகக்கழித்துப் போட்டுத் தன்னின்மேலான வாற்றலுடைமை சிவனிடத்திலே தானேகண்டு வந்திருந்து கொண்டா னுகையா லவனைச் சிவன் வெல்லவல்லாரல்லரென்பதுபுல்லர்சொல்லாய்முடிந்தது. அவன் வாக்கால் சிவனையொழிய வவனுக்குத் திரிலோகத்திலுஞ் சமானராவது, அதிகராவது இல்லையென்று பெறப்பட்டதோடு, சிவன் வாக்கால் தானவனை வெல்லக்கூடாத வபிப்பிராயம் வெளிப்படுமாயின், சிவனிறுதியாக யாவரும்பாணனுற்றலுக் கஞ்சுபவராகிப் பாணனே யாவரினுமேலானபரமென நிச்சயிக்கவரும். அங்ஙனமேல், அன்ன ஆதிக்யசிலனைக் கண்ணன்வென்றதுங் கட்டுக்கதையாய்ப்போம்.

இங்ஙனநிற்க. "బాణోపిప్రణిపత్యార్థం మైత్ర్యాచాహత్రిలోచనం। దేవబాహుసహస్రేణ నిర్విణ్ణోస్మ్యహంపునః। కశ్చిన్న మైషాంబాహూనాం సాఫల్యజనకోనహి। భవిష్యతివినాయుద్ధం భారాయమమకింభుజైః। మయూరధ్వజభంగస్తే యదాబాణభవిష్యతి। హతాశజగదానందం ప్రాప్స్యసేత్వంతదారణం" என்னும் பாகவதவசனத்தால் பாணனுனவன் பரமேசுவரனை யடைந்து மிகுந்தபிரேமையோடு அவரைப்பார்த்து ஹேஸ்வாமின் ! இந்த ஆயிரங்கைகளால் நான் துக்கித்துக் கொண்டிருக்கின்றேன், இந்தக் கைகளுக்குச் சாபல்யத்தை யுண்டுபண்ணுவா ரொருவரையுங்காணேன், யுத்தமில்லாமல் இந்தப்பாகுக்களால் நானடையும்பிரயோஜனம்யாது?

என்றுகேட்டதற்குப் பகவானாகிய பரமேசுவரர் உனது மயில் கொடி யெப்போது அறுந்து விழுமோ, அப்போது ஜகத்துக்கு ஆநந்தமாகிய யுத்தமுண்டாகுமென்று சொல்லியருளினரென்று வெளிப்பட்டது. இந்தவுண்மையால் பாணன்தனது கைகளுக்குச் சாபல்யத்தை யுண்டுபண்ணுகிற யுத்தமுண்டாகாமையால் துக்கிதனா யிருந்தானெனவும், யுத்தத்தையே விரும்பிக்கேட்டா னெனவும், அப்போதுபகவான்யுத்தமுண்டாகப் போகிறகாலத்தைக் குறிப்பித்தருளினா ரெனவும் வெளிப்பட்டது. அவனோடு தாமே சண்டைசெய்வதி லவனுக்கின்பஞ் செனியாமையு முணர்ந்தே யவனோடொத்த வேறொருத்தனைக் காட்டியதென்க. எங்ஙன மெனின், பூனையோடு பூனையும், புலியோடு புலியும், ஆனையோடு ஆனையும், சிங்கத்தோடு சிங்கமும் போர்புரிதலா லவ்வவற்றின்றிமிர் விட்டுப்போம். பூனையுஞ்சிங்கமும் போர்புரியத் தொடங்கி னெவ்வாறு முடியும்? சிங்கத்தின் வலிவத்தனையும் பூனையின்மேற்றாக்கலா லதுநிருபமானவளவால் நசுக்குண்டுபோமாகையாலதுசண்டையாகாதெனவறிக. இந்தநிதரிசனப்பிரகாசத்தால் பாணனைக்கிருஷ்ணனோடு சண்டையிற் புணர்த்தியபரமன் செயல் பண்புடைத்தாதல் வெளிப்பட்டது.

இன்னும், "బాహుషుచ్ఛిద్యమానేషు బాణస్య భగవాన్ శివః। భక్తానుకంపీ సమ్పూజ్యశ్చక్రాయుధమభాషత। అయం మమేష్టో దయితో నువర్తీ మయాభయం దత్తమముష్య దేవ। సంసాద్యతాంతద్భవతః ప్రసాదః యదా హి తే దైత్యవధే ప్రసాదః" என்னும்வசனங்களால் பாணனுடைய கைகளறுபடும்போது பக்தாளிடத்தில் தயையுடையவரும், சத்பூஜ்யருமாகிய சிவபெருமான் சக்ரதரனாகிய கிருஷ்ணனைப்பார்த்து இந்தப்பாணன்நமக்கு அதிக இஷ்டனும், அநுவர்த்தியால் வேண்டியவனுமாகையால் இவனுக்குநாம் அபயங்கொடுத் திருக்கின்றோம், இவனைவதஞ் செய்கிறவிஷயத்தில் எமது அநுக்கிரகத்தை நீ யெப்படியடைய வேண்டுமோ அதைத்தேடிக்கொள்வா யென்றருளிச்செய்தவுண்மைவெளிப்பட்டது. இதைவியவஸ்தை பண்ணுமிடத்தில், பாணனுக்குச் சிவபெருமானாலபயங்கொடுக்கப் பட்டதனால் அவன்ஒருவராலும் வதஞ்செய்யப்பட மாட்டானெனவும், அதையறியாமல் கிருஷ்ணன் அவனைவதஞ்செய்யவே முயன்றானெனவும், அதைப் பார்த்தருளியபகவான் கிருஷ்ணனை நோக்கி யிவனைவதைக்கவேண்

டுமொனுல் என்னுடைய வநுக்கிரகத்தை நீ பெறவேண்டு மென்று ரைத்தாளெனவும்பெறப்பட்டது. எனவே, யொருவராலுங்கொல் லப்படாமலிருக்க வரத்தைப்பெற்றவிவனை நீகொல்வதோ சாத்ய மன்றெனவும், எமது அநுக்கிரகத்தைப் பெற்றுவது நீ கொல்ல லாமோவென்றால்,அவனுக்குநாம் அபயங்கொடுத்தபின்னரதற்கு விரோதமாயுனக் கநுக்கிரகத்தைச் செய்யமாட்டோ மாகையால் அதுவுங்கூடாத காரியமெனவும், ஆகையால், அவனைக்கொல்ல வேண்டுமென்னு மெண்ணத்தைவிட்டு அவன்றினவடங்கவவனு டன்சண்டைபண்ணக் கடவாயென்று பகவான்கிருஷ்ணனுக்குண ர்த்தினமையேபெறும். இங்கே, என தநுக்கிரகத்தைத் தேடிக் கொள்ளென்றது நாமநுக்கிரகஞ்செய்ய மாட்டோமென்று பொ ருள்தந்து நின்றமைகாண்க. இம்மட்டேயன்றி "అస్మత్సంశ్రయదృప్తో పి, నాయంవధ్యస్త్వయాస్వయం, మయాదత్తవరోదైత్యః, తతస్తంక్షమయామ్యహం" என்னும் விஷ்ணுபுராண வசனத்தால் இந்தப்பாணன்கர்வமடைந் து திரிந்தாலும் நம்மாலே யநுக்கிரகிக்கப்பட்டவனுயிருத்தலால் இவனபராதத்தை க்ஷமித்திருக்கின்றேம், இவன் உன்னாலே சுவ தஹாகொல்லத்தக்கவனல்லவென்றறியக்கடவாயென்றுகிருஷ்ண னைப்பார்த்துப்பகவான் சொல்லியருளினராக வெளிப்பட்டது. மேல்உன்னால்சுயமாய்க்கொல்ல முடியாதென்றபோது நாமநுக்கி ரகித்தால் முடியுமெனவும், அவனுக்கு முன்னமேதானே நாமபயங் கொடுத் திருப்பதால் அவனுக்கு விரோதமா யிப்போதுனக்கு வரத்தைக்கொடுக்க மாட்டோமெனவும் வெளிப்பட்டமையால், எம்மநுக்கிரகத்தளவே நின்செயலனைத்து மென்று சிவபெருமா னருளிச்செய்தமை பெறப்பட்டது. இதனால் பாணனது கரங்க ளொடிந்துவரக் கண்ணன்சேதித்த மாம்மியம் சிவாக்ஞாபுரஸ்ஸர மென்றே துணியப்பட்டது. அங்ஙனஞ்சேதிக்கப்பட்டமையால் பாணன்றனதுபசையடங்கிமகிழ்ந்தமையால் சிவபெருமானவனு க்குபகரித்தமையே பெறப்பட்டு அவனுக்குத்தாமபயங் கொடுத் திருந்தவுண்மைக்கு விரோத முண்டாகாமையும்வெளிப்பட்டது.

இவ்வுண்மையையறியாமல் பாணனுக்குச் சிவன்கொடுத்த வரம் பாழாய் விட்டதெனவும், சிவன் கண்ணனுக்குப்பயந்து தனதுமக்களோடு ஓடியொளித்தானெனவுங்கூறியழிவார் கோள் குணமின்மையாய் முடிந்தது. பிள்ளைப்பெருமாள் என்னும் அங்

தியஜமதப்பிரஷ்டனொருவன் றனதுமாலப்பிரபந்தத்தில் (ஐங்கரன், முடுகியோட முருகனோட முக்கணிசன் மக்களைத், தேடியோடவாணனுயிரங் கரங்கள் குருதிநீர் சிந்தியோட) வென்றுடனிருந்து கண்டவனைப்போலப் பிதற்றியிருக்கின்றானாகையால், அவன் பேதமையைக்காட்டி மறுக்கு நம்மான்றோர் திருவாக்குகளை யீண்டுச் சிந்திப்போமாக. (முருகனோட முக்கணிசனோட வென்று முன்னியே, திருகுளைத்தபேதையே சினந்துவாணனாறுடைந், தருகொடிந்து வீழவாயிரங்கரங்களன்றுமா, லொருமை வெற்றிகண்டதால முண்டகண்டனாணையே.) என்று கூறி (அங்கியோட வம்புயன் மயங்கியோட வங்சஜன், மங்கியோட வாசவன் மலங்கியோட மாலவன், சங்கியோட மாதருங் கலங்கியோடவேசவம், பொங்கி நீடவேமகம் பொடித்த தார்புகன்றிடே.) என்று விஷ்ணுவும், அவனது பெண்டிரும், அவனது மக்களும் யாகத்தி லோடியழிந்தமையும் பிரவசனஞ் செய்திருத்தலால், சிவாதிக்யநலம் வெளிப்பட்டவாறறிக.

ஆயின், யுத்தாநந்தரம் கிருஷ்ணனைச் சிவபெருமான் சர்வோத்கிருஷ்டமாகத் துதிசெய்த தென்னையெனின், அதுகிருஷ்ணனைக் கௌரவப்படுத்தும் பொருட்டெனவறிக. எங்ஙனமெனின், பிரம்ஹதேவரைச் சிறையிட்டருளியமுருகக்கடவுளிடம்பிரணவோபதேசம் பெறவேண்டிச் சிவபெருமான் தாம்சிஷ்யபாவத்திலிருந்து அவரைவணங்கியுந் துதித்தும் பாராட்டியவுரிமைகளைக் கொண்டுஎந்தமூடனோ முருகக்கடவுளைநோக்கச் சிவபெருமான்றாழ்ந்தவரொன்றுரையாநிற்பன்? பாணனுக்கே சிவபெருமானுட்பட்டிருப்பாரெனின், கிருஷ்ணனுக்கவர்பணிவுகோடலும், அவனுக்கு அஞ்சினவராகநாடகம் புரிதலும் சிவாபகர்ஷமாவதெப்படி? பாணன் சிவபக்தாக்ரேசரனாதலின்படியே அவனுக்குச் சிவபெருமான் பணிவுற்றவராயினர். அப்படியே யன்றோ கண்ணனிடமுங்கொள்ளற்பாலது? கண்ணன் உபமன்னியரிடம் தீக்ஷிதனாகிச் சிவபூஜாநிஷ்டனாயிருந்தானாகையால். பூர்வோத்தரசந்திக்தங்களை நோக்காமல் யாதொரு விஷயத்தையும் முடிவுரைக்கக் கூடாதாகையால் முன்பின் சந்தியறியாது கண்ணனுக்குச் சிவபெருமான்பயந்தோடினரெனவும், அவனைத் துதிசெய்தாரெனவும் வாய்வம்பாடுதல் வசையுண்டு போயிற்றென்க.

இப்படி யறிவதொழிந்து பாணன் சண்டையில் கிருஷ்ணனுக்குச் சிவன் முதுகுகாட்டி யோடினரெனக் கூறித்திரியும்

பாலிசர் பின்வரும் வினக்களைப் பரிகரித்துக் கொள்வாராக. விஷ்ணுவை யாகபதியாகக்கொண்டு வைஷ்ணவயாகஞ்செய்த தக்கனது தலையுருண்டகாலையில், அதுவிஷ்ணுவால் தடுக்கப்படாததென்னை? விஷ்ணுபுத்திரர்களாகிய பிரமன் மன்மதனிருவருக்குஞ்சிவனால் கேடுவந்தபோது அக்கேட்டைத்தவிர்த்துத் தனது மைந்தரை யந்த விஷ்ணுபகவான் காத்துக்கொள்ளாததென்னை? சிவபக்தராகிய ததீசி முனிவர்மேல் விட்டபோது பொடிந்துபோன சக்ராயுதம் சிவனைத்துரத்திற் றென்பதெப்படி? "శంఖుకర్ణగణేశేనభిన్నస్తు కేశసంచయః" என்றபடிச் சங்குகர்நனென்னும் பாரிஷதனாகிய சிவகணத்தலைவனால் சிகையறுப்புண்டொழிந்த விஷ்ணுவுக்குச் சாட்சாத் சிவபெருமான் பயந்தோடினா னென்பதெப்படி? ஷெ ததீசி பகவான் றனதுகாலின் கட்டை விரலையசைத்தபோது பலபலவென் றுதிர்ந்த விஷ்ணுக்களோ டொருசேரக் கழிக்கப்படும் மூலவிஷ்ணுவுக்கு அம்முனிவர்க்குபாஸ்யமானராகிய சிவபெருமான் பயந்தோடினாரென்பதெப்படி? இப்படியநந்த முளவற்றைப்பரிகரிக்க வகைதேடாது கிருஷ்ணனுக்குச் சிவன்றோற்றார், சிவன்றோற்றானென்று கூபமண்டூகம்போற்கத்திக் கழிவார்கோள் குணமின்மையாய் முடிந்தமைகாண்க. இன்னும் விரிக்கிற்பெருகும். இதுவரையாம் கூறிவந்ததெல்லாம் விஷ்ணுபரத்வபோதகமாகிய பாகவதத்திற் பெறப்பட்டபடிக்குஞ் சிவாபகர்ஷம் சித்தியாமையைக் காட்டவேண்டியேயாம். முக்யவிர்த்தியால் அந்தப்புராணமுழுது மப்பிரமாணமென்பதே யெம்மமுடிவுாயென்க. இதனைமேல் கங்காதாரணப் பிரக்யானத்திலினிது விளக்கி யிருக்கின்றோ மாகையாலாண்டுகண்டுணர்க.

இந்தமுடிவால் மேலெடுத்துக்கொண்ட நாசிம்ஹவதம், கங்காதாரணப்பிரக்யானம், பாணுசுர விருத்தாந்தமாகிய மூன்றுக்கு முபசமனமுண்டானதா லின்னவநந்த சிவபாரம்யப்பிரவசனங்களை ஸ்ரீமதுபயவேதாந்த பிரவர்த்த காசாரியரும், சிவாகமசித்தாந்த ஞானநிஷ்டருமா யெழுந்தருளியிருந்த காட்டாவூர், ஸ்ரீசுந்தரசிவாசாரிசுவாமிகள் செய்தருளிய சிவாதிக்யரத்நாவளி முதற்பாகத்தினும், எம்மால்செய்யப்பட்ட ஷெ சிவாதிக்யரத்நாவளி இரண்டாவது பாகத்தினும் பரக்கக்காணலாமென்க.

## பிரமாணத்திரட்டு.

இங்ஙனநிற்க, மேற்கூறிப்போந்த சிவபாரம்யஸித்தியாற் பெறப்படும்பதிஞானங்கைவரப்பெற்றவர்க்கே பரசிவஸித்தியுண்டாமென்பது திண்ணமாகையாலன்னமாஹாத்மியங்களையுணர்த்துஞ் சிலசுருதிகளை யீண்டெழுதிக்காட்டுவாம்.

"ఏకమేవాద్వితీయంబ్రహ్మ" என்றபடியே "ఏకఏవరుద్రోనద్వితీయాయతస్థే" என்றுகூறினமையால் பிரம்ஹபத ருத்ரபதங்கள் பரியாயபதங்களாக வெளிப்பட்டன. இப்படியே "సర్వంఖల్విదంబ్రహ్మ" என்று பெறப்பட்டதற்கேற்ப "సర్వోవైరుద్రః" என்று வெளிப்பட்டது. ஈண்டும் பிரம்ஹருத்ரசப்தங்கள் பரியாயமாயின. இவ்வுண்மையால் பிரம்ஹமே ருத்ரனெனவும், ருத்ரனே பிரம்ஹமெனவு மறியலாச்சுது. இந்தவியவஸ்தையால் உருத்திரனைக்காட்டிலும் வேறொருபிரம்ஹங்கிடையாதென்பது தீர்மானம். "ఏకోహవైనారాయణఆసీత్" என்றதும் பிரம்ஹபரியாயமாகாதோவெனின், இதில்(அத்விதீயம்)என்னும் விசேஷணமில்லாமையால் ஏகார்த்தம்பயவாது. அதனாலிது பிரம்ஹப்பிரதிபாதககசுருதிக்குப் பரியாயமென லமையாது. ஆகவே, இந்திர சந்திரர்களைப் பிரதிப்பாதிக்கு மன்னவற்றோடு சேருந்தகைமைத்து.

"యస్మాత్పరంనాపరమస్తికించిత్" எனவும், "నతత్సమశ్చాభ్యధికశ్చదృశ్యతే" எனவும் போந்த வாக்கியங்களால் யாதொருவனைக் காட்டிலும் உத்கிருஷ்டனுஞ் சமானனுமில்லையோ அவன் சிவனென்று வெளிப்பட்டது. இந்தவுண்மையால் சிவனுக்கு உத்கிருஷ்ட ஸமத்வமுடைய தேவதையைப் பிரதிஷேதித்துச் சிவனுக்கே ஸர்வோத்கர்ஷத்வம் சாதிக்கப்பட்டது. இதனையே "పరాత్పరతరోబ్రహ్మా తత్పరాత్పరతోహరిః। తత్పరాత్పరతోఈశః తస్మాత్తుల్యోధికోనహి" என்னும் வாக்கியமும் நிறுத்தும். இங்கே பெறப்பட்ட ஈசபதம் பிரம்ஹ விஷ்ணுக்களுக்கு வேறானதொருபொருளைக் காட்டலா லவ்விருவரும் ஈசர்களாகாரென்பது போதரும். ஈண்டு ஈசசப்தம் ருத்ரஸ்தானத்தில் விநியோகம் பெற்றமையா லவ்வுருத்திரன் ஈசுவரனுக்கு விபூதியென்பது ஸித்தம். ஈசுவரன், உருத்திரனென்ற தேத்யாதிநாமங்களிருவர்க்குங் காரணகாரியத்வத்தால் ஸித்திக்கும். இதனால், திரிமூர்த்திகளி லொருவராகிய வுருத்திரரோ சிவாகமஸித்தாந்தத்தாற் போந்த பரமபதியென்று துணிபற்க. சைவசித்தாந்தத்

தில் திரிமூர்த்திபுத்திரனரான துரியமூர்த்தியை யங்கீகரித்திருப்பதுபோல் பாஞ்சராத்திரத்தில் துரியவிஷ்ணுவை யங்கீகரித்ததில்லை. இந்தவுண்மையால், சைவநூல்களில் விஷ்ணுவுக்குக் கூறும் அபகர்ஷங்களெல்லாம் அந்த லொருவிஷ்ணுவையே சாரும். வைஷ்ணவநூல்களில் உருத்திரருக்குக் கூறும் அபகர்ஷங்களெல்லாங் குணருத்ரரையேயன்றித் துரியருத்ரரைச் சாரா. இன்னும், ஏகாதசருத்ரர், சதருத்ரர், சஹஸ்ரருத்ரரிருப்பும் வேதத்திற்கூறப்படுதலால் துரியசிவனிடம் அபகர்ஷமேறவே யிடமில்லை. அபகர்ஷோத்கர்ஷங்களை யொரேபொருளிடங்கூறுதல் அமையாமையால், வைஷ்ணவநூல்களிற் பெறப்படு முத்கர்ஷங்களு மந்தர்யாமிபாவத்தால் சிவைகநிஷ்டமேயாம். இப்படிப் பராசரபுராணத்தில் வியவஸ்தைபண்ணி யிருத்தல் காண்க.

துரியமூர்த்தியைத் திரிமூர்த்திகளுக் குற்பத்திஸ்தானமானவரும், வேறானவருமாகச் சொல்லியிருக்கும் வாக்கியத்தையும், அகாரவுகார மகார வியஷ்டிப்பிரணவ வாச்சியர்கள் திரிமூர்த்திகளெனவும், ஓங்காரமாகிய ஸமஷ்டிப்பிரணவ வாச்சியர் துரியருத்ரரெனவு முணர்த்தும் வாக்கியத்தையும், மேல் (௯எ) (௯அ) வது பக்கங்களிற் காட்டியிருக்கின்றோம். இன்னும், "శివమద్వైతం శాంతం చతుర్థం మన్యంతే" என்னும்வசனத்தாலும் அவர் மூன்றுமூர்த்திகளுக்குமப்பாற்பட்ட நாலாவது மூர்த்தியென்பது ஸித்தித்தது. இந்தநாலாவது மூர்த்தியே "త్రిషు ధామసు యద్భోజ్యం భోక్తా భోగశ్చ యద్భవేత్। తేభ్యో విలక్షణస్సాక్షీ చిన్మాత్రోఽహం సదాశివః" என்னும் வாக்கியத்தால் ஜாக்கிரமுதலான மூன்றுஸ்தானங்களிலும் எது புஜிக்கத்தக்கதோ, எவன் புஜிக்கிறவனோ, எதுபோகமோ அவைகளுக்கு விலட்சணமும், ஸாட்சியும், சின்மாத்திரமுமான நான் சதாசிவன் என்று கூறினர். "శివ ఏకో ధ్యేయశ్శివంకరస్సర్వమన్యత్పరిత్యజ్య" என்னும் வசனத்தால் அன்னியமாயுள்ள சகலமானவற்றையுந் தள்ளிவிட்டுச் சிவமென்னுந் தன்மையான் மங்களத்தைச் செய்கின்ற சிவபெருமானொருவரோ தியானஞ்செய்யத்தக்கவரென்று பெறப்பட்டமையால், துரியப்பொருளாகிய வச்சிவமூர்த்தியையே முமுக்ஷுக்களடைகின்றனர். சகலமானவற்றையுந் தள்ளவேண்டிய தென்றதில் "హేయోపాదేయవర్జితః" என்று விஷ்ணுவரையில் குறிப்பித்தமை தெளிக. மேற்போந்த "తేభ్యో విలక్షణస్సాక్షీ" என்னும் வாக்

கியத்தையும், "సాక్షీచేతా కేవలో నిర్గుణశ్చ" என்னும் வாக்கியத்தையும் ஸமந்வயஞ்செய்து பார்த்தால் ஸ்ரீசிவபெருமானே விஷ்ணுமுத லான ஸகலபிரபஞ்ச அந்தராத்மாவா யுள்ளவனென்பது தெற் றென விளங்கும். சிவனைச் சேவிக்காமல் துக்காந்தரூபமாகிய மோக்ஷத்தைபடைவது கூடாதென்பதை "యదాచర్మవదాకాశం వేష్టయిష్యంతిమానవాః। తదాశివమవిజ్ఞాయదుఃఖస్యాంతోభవిష్యతి" என்னும் வாக்கி யங்காட்டலா லிவ்வாக்கியத்திற் கூறியிருக்கும்படியே யெவனுனு லாகாசத்தைச் சர்மமாகச்சுருட்டி மேலே போர்த்துக்கொள்ளு வானே வவன்றானன்றோ சிவனைச் சேவிக்காமல் மோக்ஷத்தை யடையக்கூடும்?

மேல்விவகரித்த வாக்கியங்களால் சிவஸேவையாற்றானே முத்தியுண்டாமென்று வெளிப்பட்டதை வற்புறுத்திக்காட்டுமே னைய வாக்கியங்களையும் பரியாலோசிப்பாம். "ఈశంజ్ఞాత్వా అమృతా భవంతి" என்னும் வசனத்தால் சிவபெருமானையே ஜகஜ்ஜந்மாதி காரணமென்றும், முமுக்ஷுஜநப்பிராப்யபதமென்றுந் தெரிந்து கொண்டவர்கள் முக்தராகின்றார்களென்று பெறப்பட்டது. இந்த ஈசசப்தமானது அந்யதாபொருளைப் பயவாதபடி "జ్ఞాత్వాశివంశాంతిమత్యంతమేతి" என்னும் வசனத்தில் சிவசப்தத்தா லவ்வீசனே சிவ னென்பது தோன்றச் சிவனை யறிந்தவர்கள் ஜநநமரணப் பிரவாக துஸ்தரமாகிய ஸம்ஸாரதுக்கத்தி னின்று மத்யந்த சாந்தியடை கின்றார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. சிவனைக்காட்டிலும் ஈசுவரனென்றுவெளிவருதற்கு வேதமொருவருக்குமிடங்கொடா மையால் அப்பரமசிவப்பிரதிபாதகமாகிய ஈசுவரசப்தத்தைக்கோ ஷிக்கும் வேறுசுருதியொன்றையீண்டுவெளிப்படுத்துவாம். "ఈశానస్సర్వవిద్యానామీశ్వరస్సర్వభూతానాం బ్రహ్మాధిపతిర్బ్రహ్మణోధిపతిర్బ్రహ్మాశివోమేఅస్తు సదాశివోం" எனப் போந்த வாக்கியத்துக்கு லட்சியப்பொருளி னைத்தென்பது வெளியாக "ఋతంసత్యంపరంబ్రహ్మపురుషంకృష్ణపింగళం। ఊర్ధ్వరేతంవిరూపాక్షం శంకరంనీలలోహితం। ఉమాపతిఃపశుపతిః పినాకీహ్యమితద్యుతిః" என்று பரிஷ்காரப்படுத்தி யிருத்தலேபோதும்.

மேல்வாக்கியங்களில் வித்தையெல்லாவற்றிற்கு மீசனென வும், பூதங்களெல்லாவற்றிற்கும் பதியெனவும், பிரம்ஹாவுக்கதி பதியெனவும், பிராம்ஹணருக் கதிபதியெனவும் விதந்துணாத்த

லால் அதிபதியாகிய சிவனை நோக்கப் பிரம்ஹாவும், பூதங்களாகிய வாத்மாக்களும் ஈசுவரர்களாதல் எங்ஙனங் கூடும்? ஈண்டுப்பூதங்களுக்கும், பிரம்ஹாவுக்குமதிபதித்வம் சிவனிடம் பெறப்பட்டமையால் அவரோவிஷ்ணுவுக்கு மதிபதித்வமுடையாரென்பதுதானே போதரும். பிரம்ஹவிஷ்ணுருத்ரர்கள் சிவனிடத்திற்பிறந்தார்களென்னும் வசனமுண்மையால் விஷ்ணுவுக்குஞ் சிவன்அதிபதியென்பது இழுக்காதென்க.

அன்றியும், "ఏతావంతో వై పశవో ద్విపాదశ్చ తుష్పాదశ్చ" என்னும்வசனத்தில் பசுக்களையும், "తస్మాద్రుద్రః పశూనామధిపతిః" என்னும்வசனத்தில் அப்பசுக்களுக்குப்பதியையுங்கூறலால், சர்வபசுக்களுக்கும்பதியாகியவுருத்திரர் விஷ்ணுவாகிய பசுவுக்குமாத்திரம் பதியாகாரென்று நாம்சொல்வதுகூடாது. "సర్వే దేవాః పశుతామవాపుః। స్వయం తస్మాత్పశుపతిస్సంబభూవ" எனவும், "స్వతశ్శివః పశుపతిస్సాక్షీ సర్వస్య సర్వదా। సర్వేషాం తుమనస్తేన ప్రేరితం నియమేనతు" எனவும் போந்தவசனங்களால் சமஸ்தமான தேவர்களும் பசுக்களாவாரெனவும்,அப்பசுக்களுக்குப்பதியும்,ஸர்வத்துக்கும்ஸாட்சியும்,ஸகலருடைய மனசுகளையும் நியமமாகவெங்குமேவச்செய்கின்றவரும் ஸ்ரீசிவபெருமானுவாரெனவும்வெளிப்பட்டமையால்,அத்தேவஸமூகங்களிலெண்ணப்பட்டவராகியவிஷ்ணுப்பிரம்ஹாக்களுக்குப்பசுபதியாகியவச்சிவபிரான்அதிபராதலிலென்னபாதகமுண்டாம்? விஷ்ணுவை யாகப்பசுவாக்கித் தேவர்கள் சிவப்பிரீதிகரமானயாகஞ்செய்தார்களென்பதற்கு "యజ్ఞేన యజ్ఞమయజంత దేవాః"என்னும் வாக்கியமும், அப்படிப்பட்ட யாகப்பசுக்களுக்குக் கர்த்தா வுருத்திரரென்பதற்கு "రుద్రః పశుకర్తా రుద్రో యాగదేవః" என்னும்வாக்கியமுஞ் சான்றுதல் தெளிந்திடுக. அந்தவிஷ்ணுவானவர் சிவனைத்தனக்கதிபதியாகக்கொண்டு சிவாராதனஞ்செய்தாரென்பதற்கு "అవస్థాత్రయాతీతం తురీయం బ్రహ్మసంజ్ఞితం। బ్రహ్మవిష్ణ్వాదిభిస్సేవ్యం సర్వేషాం జనకం పరం। ఈశానం పరమం విద్యాత్ ప్రేరకం బుద్ధిసాక్షిణం" எனவும், "దక్షిణాయాం దిశి విష్ణుః కృత్వైవ మూర్ధ్న్యంజలిముపాస్తే" எனவும், "తవ శ్రియే మరుతో మర్జయంత రుద్ర యత్తే జనిమ చారుచిత్రం। పదం యద్విష్ణోరుపమన్న్యధాయి తే న పాసి గుహ్యం నామగోనాం" எனவும்போந்தவசனங்கள் ஏராளமாயுள்ளன. இவற்றின் பொருள்களை நோக்கின், துரியராகிய வச்சிவபிரான் பிரம்ஹவிஷ்ணுக்களால்ஸேவ்யமானராய்விளங்குகின்றாரெனவும், காசியின்கண்ணேதென்றிசையிலிருந்துகொண்டுவிஷ்ணுவானவர்

சிரசில்கூப்பியவஞ்சலியுடன் சிவபெருமானை யுபாசிக்கின்றானென வும், விஷ்ணுவானவர் சிலாமயமான சிவலிங்கபூசைசெய்து பரம பதமென்னும்வைகுண்டலோகத்துக்கதிபதியானானென்வும் வெளி யாகின்றன. இன்னும், அந்தப் பரமேசுவரனை யோசிக்கையில் "విశ్వాధికోరుద్రోమహర్షిః" எனவும், "మాయాంతుప్రకృతింవిద్యా న్మాయినంతు మహేశ్వరం। తస్యావయవభూతైస్తు వ్యాప్తంసర్వమిదంజగత్"எனவும்போந்தவா க்கியார்த்த விசேஷத்தால் "వాసుదేవఃపరాప్రకృతిః" என்னும் வாக்கி யத்தால் ஸித்திக்கும் அர்த்தஸ்வரூபராகிய வாசுதேவருக்கு அதி பதியாயிருக்கின்றானென்பதி லென்னவாக்ஷேபமுண்டு?இதனையே, "యోవేదాదౌస్వరఃప్రోక్తో వేదాంతేచప్రతిష్ఠితః। తస్యప్రకృతిలీనస్య యఃపరస్సమహేశ్వరః" என்னும் வசனமும் நிறுத்தும்.இப்படிப்பட்ட பரமேசுவரா ராதனத்தைக்காட்டிலும் மோக்ஷோபாயமான வழி வேறேகிடை யாமையால் ஸ்ரீசிவபெருமானையே யாவரும் வணங்கி யுய்யக்கட வர். அவருடைய வதிகாரசக்திகளை வகித்து அவரிட முத்தியோ கஞ் செய்யும் விஷ்ணுவாதிகளுக்குச்செய்பு நமஸ்காராதி ஸ்தோ த்திரங்களு மப்பரமேசுவரனையே யடைதலால் ஸர்வவந்திதரா கிய வந்தத்தயாலிந்துவே நாமாச்சிரயிக்கத்தக்கவரா யிருக்கின்ற னர். "స్తోమంవాఅద్యరుద్రాయ సర్వసేక్షయద్వీరాయ నమసాదిదిష్టన" என்னும் வாக்கியத்தால் மேலுண்மை வெளிப்பட்டவாறறிக. இப்படிப்ப ட்ட பரமசிவனை "సద్యోజాతంప్రపద్యామీతి" வசனங்களால் ஆச்சிர யிக்குந்தன்மையும் வேதபடிதமாயிருத்தலா லப்பஞ்சப்பிரம்ஹ ஸ்வரூபராகிய ஸதாசிவமூர்த்தியையே சிவலிங்கமுகமாக வாத் மார்த்த பரார்த்தங்களாகப் பூஜாப்பிரணமங்களால் ஸேவித்துய் வோமாக. "యదాతమస్తన్నదివానరాత్రిర్నసన్నచాసచ్ఛివఏవకేవలః" எனவும் "ప్రత్యగ్జనస్తిష్ఠతిసంచుకోచాంతకాలే। ఏకఏవరుద్రోనద్వితీయాయతస్థే। నబ్రహ్మానవిష్ణు ర్నసూర్యోనాగ్నిచంద్రతారకాః" எனவும்போந்த வின்னவநேகவசனங் கள்சிவபாரம்யத்தைக்காட்டிவிளங்கலால்,அவற்றையீண்டெழுதா மலிவ்வளவிலுபரதியடைந்தோம்.இந்நூலில் ஸங்கிரஹமாகவிடுத் த ஸதஸத்விவேகவிஷயங்களைக்(குதர்க்கவாதவிபஞ்சினி) "ஆபாச ஞானநிரோதம்" இத்யாதி பிரபந்தங்களிற் பரக்கக் கண்டுகொள்க.

மேல்விசாரத்தால் ஸ்ரீ ருத்ரமூர்த்தியே பரப்பிரம்ஹமெனு வும், அவரேயாவுமெனவும், அவரையன்றி யற்பமுஞ்சீவிக்கவிட

மின்றெனவும், அவருக்கு வேறாகப் பிரம்ஹத்வநிரூபணம் எந்தப் பொருளிடத்து மற்பமுஞ்செய்ய யோக்யமின்றெனவும், அவர் பிரம்ஹவிஷ்ணுவாதிமூர்த்தித்திரயாதீதராயுள்ளவரெனவும், அவரேயீசசப்தவாச்சியரா யிருத்தலாலவரைநோக்கவேனையோரநீசுவரராகின்றாரெனவும், அத்வைதரும், சாந்தருமாகியவவரைநாலாவது பொருளாக வறியவேண்டுமெனவும், அவர் ஸர்வத்துக்கும் ஸாட்சியாயும், சின்மாத்திரமாயுமுள்ள ஸதாசிவமூர்த்தி யென்று சொல்லப்படுவரெனவும், அப்படிப்பட்ட பரமசிவத்தையே யந்நியமாயுள்ள ஸமஸ்தத்தையும் விட்டுத் தியானிக்கவேண்டுமெனவும், அவ்வந்நியங்கள் விஷ்ணுவிறுதியாகக் கொள்ளப்படுமெனவும் வெளிப்பட்டது. விஷ்ணுவை வேதங்களிற் பரம்பொருளென்று சொல்லுகையால்அவரைவர்ஜித்தல் கூடுமோவெனின், அந்தவேதந்தானே வர்ஜனத்தைக் கூறினமையால் குற்றமில்லையென்க. பரமாகவும், அபரமாகவும்அவரை வேதங்கூறிய தென்னையெனின், பிரமனாதி கீழிட்டவரை நோக்கப்பரமும், உருத்திராதி மேலிட்டவரைநோக்க வபரமுமாகக் கூறியதாம். உருத்திராதி மேலிட்டவர் துரியசிவனது விபூதிகளும், பிரமனாதி கீழிட்டவர் தன்னைப்போல் சிவாநுக்கிரகம்பெற்ற சேதனர்களு மாகையால் சுருதிவிரோதமில்லை. பாசத்தாற் கட்டுண்டு கிடக்கும் பசுக்கள்தங்கள்கட்டுகளைத் தாமேயவிழ்த்துக்கொள்ளக்கூடாமையாலும், ஒரு பசுவுக்கு மற்றொருபசுவுங் கட்டையவிழ்த்துவிடக் கூடாமையாலும், விஷ்ணுவாதிஸமஸ்ததேவர்க்களையும் வேதம் பசுக்களென்று கூறுகின்றமையாலும், விஷ்ணுவரையில் சிஷ்டராயுள்ளபேர் வர்ஜிக்கத்தக்கது என்றவுரை ஸாமஞ்ஸமேபெற்றது. பசுக்களைப்போலவே பதியும்பிறந்துழல விடமில்லையாகையால், பிறந்து பிறந்து சாகும்பசுவாகிய விஷ்ணுவுக்குப் பதித்தன்மை செரிக்காதென்க. விஷ்ணுபிறந்துசாதலைத் தர்மஸம்ஸ்தாபனார்த்தமென்றுகண்ணன் கீதையிற்கூறினமையால் அது சீவத்தன்மை யாகாதெனின், நாராயணனைப்போலவே நரனும்பிறந்து செத்தகதைகள்தர்மஸம்ஸ்தாபனத்தின் பொருட்டென்றுகேட்கப்படுகையால்முன்னையது உசிதம்பெறாதென்க.

விஷ்ணுவைப்பசுவாகக் கொண்டால் அந்தப்பசுவுக்குப்பத்து என்னும்வரையறுக்கப்பட்ட ஜந்மமுண்டாகுமா? பசுக்கள் எண்

ணிறந்தபிறவிகளையுடையவர்களல்லவா? அப்படியேயன்றோ விஷ்
ணுவும்பிறந்துழலவேண்டும்? அப்படிக்கின்மையால் காரணங்கரு
தியே பதியாகிய நாராயணர் கிணற்றில்விழுந்த சிசுவை யெடுக்க
த்தானுங்குதிக்குந்தாயைப்போல் தசாவதாரங்கள் செய்தாரென
வும், இந்திரன் முதலினோர் ஸாமான்யசீவராகையால் எண்ணிறந்த
பிறவிகளையுடையவன்னோர்ஜந்மங்களையவசியமெனக்கொண்டுவே
தங்கூறுதபடி அவருளொருவராகவெண்ணப்படும் உருத்திருடை
யஜந்மங்களையும் வேதஞ்சொல்லாதெனவும், அப்படிச்சொல்லா
ததுகொண்டே சிவனுக்குப் பரமபதித்வம் ஸித்திப்பது கூடா
தெனவுமுண்டாகுங் கடாக்களுக் கிறைதருவாம்.

விஷ்ணுவுக்குப் பத்துப்பிறவிகளென்னும் வரையறையுண்
டாயினமையே அவர்பதியாதலைக் காட்டுமானால், ஜயவிஜயர்களு
க்கு மூன்றேபிறவிகளென்னும் வரையறை யுண்டாயினமையால்
அவரென்னவாதலை அதுகாட்டும்? பத்துக்குஞ்சுருக்கமாக மூன்று
ஜன்மம்பெற்றாராகையால் அன்னோர் விஷ்ணுவுக்கும் மேலிட்ட
பதிகளாயினர்போலும். ஜயவிஜயர்களுக்கு அம்மூன்றுஜந்மங்களு
ஞ் சாபத்தாற்கிடைத்தமையால், அப்படியேயன்றோ பத்துஜந்மங்
களைச்சாபத்தால் விஷ்ணுவும்பெற்றனர்? பிருகுசாபத்தால் விஷ்
ணுவுக்குப் பிறவிகளுண்டாயினமை பிரமாணஸித்தமாகையால்
வேறுஜாலம் பகர்வது விருதாவென்க. எண்ணிறந்த பிறவிகளைக்
கொண்டுழலும் பசுக்களாகிய ஜயவிஜயர்களுச்கு விஷ்ணுத்துவா
ரபாலகர்களாய்ப் பவித்தமையுந் தனித்தனி யோர்ஜந்மமாகை
யால் அந்த ஜந்மமுடிவதற்குமுன் அபராதத்தாலிடையில்வந்த
ஜந்மங்கள்மூன்றும். இப்படியேயன்றோ விஷ்ணுவிடமுங்கொ
ள்ளத்தக்கது? பிறந்துபிறந்துழலு மோர்பசுவுக்குச் சிவாராத
னபலத்தால் விஷ்ணுவென்னும் பட்டமும், பரமபதமென்னும்
வைகுந்த நாட்டரசுங் கிடைத்தபோது, அதுசெவ்வனேநடந்து
வருகையி லிடையினேர்ந்தவபராதத்தாற் பத்துப்பிறவிகளுண்டா
யின. பத்துஜந்மங்களுமுடிந்தவுடன்பழையபடியே விஷ்ணுவாகி
யரசுபுரிந்து, காலம்வந்தபோது செத்து, மேல்கூட்டிமுடிக்கும்
வினையின்படிச் சந்மங்களையெடுத்துழலுமாட்சி யுண்டாயினமை
யாலின்னஹேயலட்சணஹிதமாகியவோர் ஜீவனையெப்படிப் பர
மபதியென்று நாம்சொல்வோம்? அவதாரங்களெடுக்கையில்

பரமபதத்தில் விஷ்ணுவிருந்ததில்லையா? அதுபாழாய்ப் போச்சுதா? எனின், அவ்விஷ்ணுவெடுத்த வவதாரங்கள் பூர்ணவதாரமும், அம்சாவதாரமுமெனவிரண்டுவிதமாகச் சொல்லப்படுதலால், பூர்ணவதாரகாலத்தில் வைகுண்டம்பாழாயிருந்ததென்பதிலென்னவாக்ஷேபமுண்டு? வாமனனாக விஷ்ணுபிறந்தகாலையில் அதிதியினிடத்தில் அவ்விஷ்ணு பத்துமாசந்தங்கி யிருந்தாரெனவும், அந்தஸமயத்தில், விஷ்ணுவிடத்திற்கண்டுபேசவேண்டி நாரதமுனிவர் வைகுண்டத்திற்குப்போயினரெனவும், அப்போது வைகுண்டத்தில் விஷ்ணுவில்லாமற் போயினரெனவும், முனிபுங்கவர்விசாரித்தபோது அதிதிகர்ப்பத்திற்சென்றிருக்கின்றாரென்று தெரிந்து, உடனே திரும்பி அவ்விடத்திற்கு வந்து அம்மாதினுடையகர்ப்பத்திற் றானுமணுப்பிரவேசஞ்செய்து, உள்ளேயிருந்த விஷ்ணுவைக்கண்டு வார்த்தை சொல்லிப்போயினரெனவும் ஆதித்தியபுராணத்திற் கூறியிருத்தலுக்கு நாம் என்ன சாமாதானந் தேடலாம்? இப்படியனேக முளவற்றை விரிவஞ்சிவிடுத்தாம்.

இனி, இந்திராதிகளுடைய ஜந்மங்களைவேதம்விதந்துகூறுதபடியுருத்திரருடைய ஜந்மங்களையுங் கூறவில்லையென்று கொண்டால், மேல் (௨௫) வது பக்கத்திற்காட்டிய சுவேதாசுவதர வசனத்துக்கு என்னகதிதேடுவது? அவருக்கு ஜந்மஸ்தானமும், காரணமுமில்லையெனவும், அவர் காரணங்களுக் கெல்லாம் பிரபுவானவரெனவும், அவருக்கு உற்பத்திகாரணமானவர்களொருவருமில்லையெனவும் பெறப்படுமுண்மையை யூகியாது வீண்விபரீதம் பேசுவது பயன்பெறுவதெப்படி? பாசத்திற்பிணிப்புண்ட பசுவுக்குண்டாகத்தக்க ஜந்மங்களை யெப்படிப்பசுபதிக்கும் வேதங் கூறும்? பசுபதியென்று சிவனொருவரையேயன்றி விஷ்ணுவாதிகளைமறந்தேனும் வேதங்கூறிற்று? அவர்களைப்பசுக்களென்று ஏராளமாய்க்கூறியிருத்தல்பிரத்யட்சம். இப்படிப்பட்டவநந்தநியாயங்களால் பிறந்திறந்துழலும் விஷ்ணுவையில் சிவஞானிகள்வர்ஜிக்கவேண்டுமென்பது நிலைபெற்றது.

மேல், ஸர்வஸங்கபரித்யாகாநந்தரம் அடையத்தக்க பரம்பொருள் சிவமொன்றே யெனவும், அதுவே மோக்ஷப்பிரதாயகமெனவும், அந்தமோக்ஷம் சிவஞானஸித்தியால் பிராப்தமாகத்தக்க அமிர்தபதமாகுமெனவும், அதுவே பரமசாந்திஸ்வரூபமென

வும் பெறப்படுகையால், அது ஸித்திக்கும்பொருட்டு ஈசானாதி மந்திரஸ்வரூபனும், உமாபதி, பசுபதீத்யாதி திருநாமங்களுடையவனும், எஜ்ஞாதிபதியும், பிரம்ஹவிஷ்ணுக்களுக்கு ஸேவ்யமானனும், விஷ்ணுவுக்குப் பரமபதத்தைப் பிரஸாதித்தவனும், பிரகிருதிமாயைகளுக் கப்பாற்பட்டவனும், ஸர்வராலும் நமஸ்காரபூஜ்யனும், பிரம்ஹா-விஷ்ணு - சூரியன் - சந்திரன் - நட்சத்திரங்களிவைமுதலொன்றுமில்லாமற் போகத்தக்க தமோமாத்ராவசேஷமாயிருக்குங்காலத்திற் றனேயொண்டியா யிருப்பவனுமாகிய ஸ்ரீபரமேசுவரனையே சரணடைந்து மகிழ்வோமாக. "நாமார்க்குங்குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோ. மின்பமேயெந்நாளுந்துன்பமில்லை, தாமார்க்குங் குடியல்லாத்தன்மையான சங்கரனற்சங்க வெண்குழையோர்காதிற், கோமாற்கேநாமென்று மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சேவடியிணையே குறுகினோமே" என்னும் வேதப்பிரமாணமே சான்றாதல் தெளிக.

இங்ஙனநிற்க, மணவாள மாமுனியென்னும்பாஞ்சராத்திரிக்கும், ஸ்ரீமத்சிவாக்ரயோகிகளுக்கும்,ஓர்காலத்தில்நடந்தஸம்வாதத்தில் அப்பாஞ்சராத்திரிதனதுபூர்விகர்கள் வாக்கைப் பிரமாணமாகக்கொண்டு வாதிக்கத் தொடங்குகையில் அவற்றை மறுத்து ஸித்தாந்தியார்கூறிய ஸமாதானங்கள் வருமாறு.

## சிவதத்துவவெண்பா.

எங்கள் நாராயணர் நான்முகனைப்படைத்தார், நான்முகன் சங்கரனைப்படைத்தா னென்றதற்கு விடை.

**நா**ன்முகனுந்தான்முகமாய்ச்சங்கரனைநன்மையுடன்
முன்படைத்தானென்னுந்தரமிலாய் - நான்முகவன்
றன்குதத்தில்வந்த விண்டுதானேமுகத்துதித்த
சங்கரனின்மேலாவான்சாற்று. (க)

**வி**ண்டுவாந்தாய்பால்வெளியாஞ்சதுமுகனார்
கண்டரனையுள்ளேகருதியதால் - பண்டையரன்
றோன்றினனன்றோன்றெழிலருளமாமுகத்தி
லேன்றுகொளாய்வேதத்திலின்று. (உ)

நீரின்கண்மண்டோன்றுநீர்மைபோன்மாமலரோன்
கார்வண்ணன்பால்வந்தகாரணங்காண்-சீரமைந்த
மண்ணினெருப்புதிக்குமாண்புண்டேலன்றேமுக்
கண்ணனயன்பால்வருநீகாண். (௩)

பிரமனுருத்திரனும்பேதாய்மாலோனும்
அரனாலுண்டாக்கப்பட்டாரொன் - றுரமாகச்
சொல்லுமதர்வசிகை சோதியாயென்றேநின்
புல்லுரையார்கொள்வாரிப்போது. (௪)

சமணமுதலியவற்றோடு சேரும் பெற்றிமைத்தே
சைவமென்றதற்கு விடை.

சிவப்பட்டாரீனரொனச்சேர்த்தாயமனே
டவப்பட்டநீயவரோடாவாய் - சிவப்பட்ட
சொன்மங்கலந்தேராய்சோம்பனேநின்மதமே
புன்மங்கலங்காணிப்போது. (௫)

ஈசனைவென்ற சிலையை யெங்களிராம
னேற்றானென்றதற்கு விடை.

ஈசனைவென்றசிலையேற்றானிராமனெனப்
பேசினாயீசன்றன்பேர்ப்படைகொண் - டாசி
லிலங்கையாற்செற்றதியம்பும்பதுமம்
விலங்கேநீசொல்லாய்விதந்து. (௬)

வளையாமலையைவளைத்தமாதேவ
னிளையாநின்றான்மால்கைவில்லிற் - களையாடி
வென்றானெனல்வேதவேதாந்தவித்தகர்முன்
சென்றேறுமோவெனக்குச்செப்பு. (௭)

எங்கள்'திரிவிக்கிரமமூர்த்தி பாதநீரையே சிவன்சடையிற்
கொண்டானென்றதற்கு விடை.

கறைகொண்டகண்டத்தான்சென்னிமேன்மாலோன்
நிறைகொண்டபாதநீரொன்றாய் - வெறிகொண்டாய்
கங்கைதனைத்தாங்கறியாக்கண்ணன்கானீரோவெஞ்
சங்கரன்கொண்டானென்பைசாற்று. (௮)

வாமனகற்பந்தன்னில்வந்தமுகுந்தன்கானீர்
காமதகனன்வராககற்பத்தின் - மாமறைகள்
போற்றப்புனைந்தநீரொன்றேபெரும்புளுகைச்
சாற்றினாலேறுமோதான். (௯)

மார்க்கண்டமுனிவர் பெற்றது எங்கள்விஷ்ணுப்
பிரஸாதமேயென்றதற்கு விடை.

மார்க்கண்டன்கண்டவகையேவருமென்ற
மூர்க்கனேயந்தமுனிமாற்ற - மேற்குமோ
நின்மதத்துக்கந்தோநெடுமாலிறந்துபல
சந்மமெய்தல்கேட்டிருந்துந்தான். (௧௦)

என்றுஞ்சிரஞ்சீவியாயிருக்கமார்க்கண்டர்க்
கன்றுசிவனாருளுமாட்சிமறை - யின்றுமெவ
ருங்காணக்கூறுமேயோகோவறியாய்நீ
சங்கைகொண்டாய்கொண்டாய்சநி. (௧௧)

எங்கள் பரவாசுதேவனாயே தக்ஷிணாமூர்த்தியாகிய சிவன்
ஸநகாதிகளுக்குபதேசித்தா ரென்றதற்கு விடை.

ஆலநிழற்கீழறநெறியைநால்வர்க்கு
மேலையரன்கூறினான்விண்டுவையே - மூலமெனக்
கொள்ளும்படியென்றகுத்திரனேசான்றுண்டேல்
விள்ளுதிவந்தென்முன்விரைந்து. (௧௨)

வாணிக்குமெய்ஞ்ஞானவைபவகாண்டந்தன்னைப்
பேணியுரைத்ததற்பின்பிஞ்ஞகனார் - நாணிலாய்
மாலுக்குமன்றோவழங்கினார்சூதனுரை
கோலிக்குணப்படுவாய்கொண்டு. (௧௩)

இன்றுமிசைப்பேனிராமன்சிவகீதை
முன்னவன்பாற்கேட்டமுறைமைபோல் - மன்னுமுணர்
வில்லாய்புராரி யிடங்கேட்டனன்கபிலன்
சொல்லாருஞ்சாங்கியநூல்சூழ்ந்து. (௧௪)

எங்கள் திருமாலை நீறாடியாகிய சிவன் காண்பது
கூடாதென்றதற்கு விடை.

நீறாடிதான்காணானின்மாலடியென்றாய்
கூறாயிரவிகுவையிருளை — மாறாது
காணுமோமாவிருளாங்கண்ணுதலோனேரவியாம்
நாணுவாய்வேதத்தைநாடு. (௧௫)

எஞ்சிவனைநீறாடியென்றபடிநின்மாலை
வஞ்சனேயென்சொல்வாய்மாயோனுஞ் — செஞ்சடையான்
றன்கண்மணிநீறுதான்கொண்டமையுமெனும்
நன்கறிவாய்நான்மறையைநாடு. (௧௬)

பன்றியாய்மாலோன்பரனாரடிதேடிக்
கன்றினானுள்ளங்கலங்கியெனும் — வென்றிமறை
அந்தோநின்மால்விச்சுவாதிகனைக்காண்பெளிதோ
வந்தோதாய்மால்விச்சுவம். (௧௭)

சிவனுக்குநேரிட்ட பிரம்ஹசாபம் எங்கள் விஷ்ணுவால்
தீர்க்கப்பட்டதென்றதற்கு விடை.

மேல்நான்முகனரனையிட்டவியன்சாபந்
தான்நாரணன்றவிர்த்தானென்றாய் — மான்நோக்குங்
கையானின்றாய்ச்சீதைகாந்தன்பிரமகத்தி
கொய்யாநின்றான்கண்டுகொள். (௧௮)

பிரமன்றலையோடுபேதாயெம்பெம்மான்
கரமேவுங்காட்சியாலன்றோ — பிரமனரி
யென்போரகந்தையிரியுமிசைக்குமதின்
மன்னுமேமால்சோரியும். (௧௯)

எங்கள் திருவேங்கடத்தானைச் சிவன் இரவில்சென்று
ஆராதிக்கின்றானென்றதற்கு விடை.

திங்கள்சடையேறவைத்தான்சீர்வேங்கடத்தானைக்
கங்குல்புகுந்தணிந்தான்காப்பென்றாய் — மங்குறவழ்
வேங்கடத்தான்செஞ்சடையெம்வித்தகனார்பெற்றெடுத்த
தேங்கடப்பந்தாரனெனத்தேர். (௨௦)

மால்வேங்கடமலையாய்வாழ்குமரனேச்சுமந்து
மால்கீழரன்வடிவையாண்டொருபால் – மாலகல
வர்ச்சித்தும்போற்றியுமகிழுமென்பதற்கோ
பிச்சனேவேறுரைத்தாய்பேசு. (உக)

பாணசுரன் சண்டையில் எங்கள் கண்ணனுக்குச் சிவன்
இளைத்தானென்றதற்கு விடை.

உவரிக்கடனஞ்சமுண்டபிரான்வாணன்
றவறில்சமர்க்கொதுங்கித்தாழ்ந்தான் - உவரிவண்ணற்
கென்றுய்நின்மாலெங்களீசனருள்கொண்டன்றே
வென்றான்சமரில்விரைந்து. (உஉ)

சிவனருளால்வாணன்றிமிர்விடநின்கண்ணன்
அவனுயர்தோண்மாய்த்ததறியாய் – சிவபெருமான்
வாணனுக்குத்தந்தவரங்கண்டாப்முன்கதையைப்
பேணுதியேலுண்டோவீண்பேச்சு. (உங)

வீரன்சராசந்தன்வெம்முனையிலேபதுங்கும்
வீரனன்றேநின்கண்ணன்வீமனால் - சூரனவன்
றன்னைப்பகைமாய்த்துத்தானுயிர்வாழ்ந்துய்ந்தகதை
பின்னையறியாய்போலும்பேசு. (உச)

பரமபதமென்னும் எங்கள் விஷ்ணுபதி சிவனுக்கு
எட்டாதது என்றதற்கு விடை.

கார்செறிந்தகண்டத்தான்காணுவைகுந்தமெனுங்
கார்செறிந்தநெஞ்சத்தாய்காணுதியால் – கார்செறிந்த
வண்ணத்தான்பெற்றதுமேல்வைகுந்தவாழ்வரனே
யெண்ணித்தானென்னுமறையே. (உரு)

எங்கள்நாராயணர் ஸர்வப்பிரபஞ்சத்தையுஞ் சிவனேடுசேர்த்து
உண்டுவிட்டானென்றதற்கு விடை.

கார்க்கண்டனேடுண்டான்கார்வண்ணன்யாவையுமென்
றார்க்குமறிவில்லாயன்றலைநீ – மீக்கொண்டா
னென்பையவன்கொள்ளாததென்னேவக்கீரையெனக்
கென்பகர்வாய்மண்ணுண்டானென். (உசா)

மண்ணையேமாலுண்டான்மாமலரோன்முன்கெடவே
யெண்ணியேநீருண்டானிந்துதரன் - கண்ணனவன்
முன்கெடவேயின்னுமுளதத்துவமுற்றுங்கண்டா
லேன்கெடுவாய்வீணையிணைந்து. (உஎ)

எங்கள்விஷ்ணுவையே சிவன் பூஜிக்கின்றார்
என்றதற்கு விடை.

ஆடரவத்தார்மாலையர்ச்சித்தாரொன்றுரைத்த
கேடனேயார்சொல்லக்கேட்டனையோ - மூடமொழிந்
தர்ச்சித்தான்சங்கரனையன்பாகமாயோனென்
றர்ச்சித்தேயோதுமறையாம். (உஅ)

எங்கள் நெடுமாலே ஈசனுக்கும், பிரமனுக்கும்
தெய்வமென்றதற்கு விடை.

ஈசர்க்குநான்முகர்க்குமேற்றபெருந்தெய்வமெனப்
பேசினையேமாலைமிகப்பேதையே - ஈசன்று
னென்றபொழுதேயவனுக்கில்லைமேலோனென்று
நின்றபொருள்கேட்டிலையோநீ. (உகூ)

ஈசன்சிவனென்னல்கேட்டிலையோரூடியெனப்
பேசுமேநூலெல்லாம்பித்தாகேள் - ஈசன்
சிவஞானபோதயன்மால்சீவர்களாங்கண்டாய்
தவமில்லாய்சற்றேனுந்தான். (௩௦)

(மங்களாசரணை.)

பாசத்திலொன்றும்பசுவாகுநின்மாலை
யீசனெனுதன்றேற்குமீசனுந் - தேசரனை
யுள்ளேநினைந்துருகியுத்தமமாஞ்சைவநூல்
கொள்ளாயுண்டாகுங்குணம். (௩௧)

(வாழ்த்து.)

வாழிமாமறையாகமமாபதிக்
காழிமாதவனுதியர்கட்டுரை
வாழிமாதுமையாசமுமாபதிக்
காழிமாதரப்பூங்கழற்கானமே.

ஸ்ரீஸம்பந்தகுரு
சரணாரவிந்தார்ப்பணமஸ்து.

திருச்சிற்றம்பலம்.